# இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை

# கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் குறித்த செயலாக்கத் தணிக்கை

**தமிழ்நாடு அரசு**

***2024 ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 3***

**இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை**

# கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் குறித்த செயலாக்கத் தணிக்கை

**தமிழ்நாடு அரசு**

*2024 ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 3*

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | vii |
| நிர்வாகச் சுருக்கம் | | ix |
| **அத்தியாயம் I - முன்னுரை** | | |
| முன்னுரை | 1.1 | 1 |
| நிர்வாகம் | 1.2 | 2 |
| தணிக்கை அணுகுமுறை மற்றும் முறைமை | 1.3 | 6 |
| முந்தைய தணிக்கை அறிக்கைகள் | 1.4 | 8 |
| நல்ல நடைமுறைகள் | 1.5 | 8 |
| ஏற்பு | 1.6 | 8 |
| தணிக்கை கண்டுபிடிப்புகள் | 1.7 | 9 |
| **பிரிவு - அ<br>தொழிலாளர் வரி ஈட்டம்** | | |
| **அத்தியாயம் II - கட்டுமான நிறுவனங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் வரி மதிப்பீடு** | | |
| முன்னுரை | 2.1 | 11 |
| கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களை பதிவு செய்யாமை | 2.2 | 12 |
| கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களின் தரவுத்தளத்தை பராமரிக்காமை | 2.3 | 15 |
| கட்டுமான செலவினத்தை மதிப்பிடுவதற்கான சீரான அமைப்பு இல்லாமை | 2.4 | 16 |
| ஆரோவில் நிறுவனத்தின் மீது செஸ் விதிக்காமை | 2.5 | 17 |
| முடிவுரை | 2.6 | 18 |
| பரிந்துரைகள் | 2.7 | 18 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் III - தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம்** | | |
| வசூலித்தல் மற்றும் செலுத்துதலுக்கான முறை | 3.1 | 21 |
| தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தும் முறையில் உள்ள குறைபாடுகள் | 3.2 | 22 |
| உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட செஸ் TNCWWB பதிவுகளில் பிரதிபலிக்கப்படவில்லை | 3.3 | 24 |
| உள்ளாட்சி அமைப்புகளால் தற்காலிகமாக தவறாகப் பயன்படுத்தப்பட்ட தொழிலாளர் செஸ் - ₹221.81 கோடி | 3.4 | 26 |
| அரசுக் கணக்கில் செஸ் செலுத்துதல்- ₹22.67 கோடி | 3.5 | 27 |
| குறைவாக வசூல் செய்யப்பட்ட தொழிலாளர் செஸ் - ₹61.78 இலட்சம் | 3.6 | 28 |
| தொழிலாளர் வரியை தவறாகப் பயன்படுத்துதல் | 3.7 | 29 |
| தொழிலாளர் செஸ் செலுத்துவதில் இருந்த தாமதம் - வட்டி வழங்கப்படாததால் ஏற்பட்ட இழப்பு - ₹78.91 கோடி | 3.8 | 32 |
| முடிவுரை | 3.9 | 33 |
| பரிந்துரைகள் | 3.10 | 33 |
| **பிரிவு - ஆ<br>தொழிலாளர் வரியின் பயன்பாடு** | | |
| **அத்தியாயம் IV - தொழிலாளர்களின் பதிவு** | | |
| கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு | 4.1 | 35 |
| பதிவிற்கான தரவின் தரத்தில் உள்ள குறைபாடுகள் | 4.2 | 36 |
| பதிவுத் தரவின் பகுப்பாய்வு | 4.3 | 38 |
| கட்டுமானத் தொழிலாளர்களை மதிப்பீடு செய்யாமை மற்றும் கணக்கெடுப்பு நடத்தாமை | 4.4 | 44 |
| தொழிலாளர்களை பதிவு செய்வதற்கான காலக்கெடு | 4.5 | 47 |
| மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவு | 4.6 | 51 |
| முடிவுரை | 4.7 | 53 |
| பரிந்துரைகள் | 4.8 | 53 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் V – நலத்திட்டங்களின் அமலாக்கம்** | | |
| TNCWWBன் நலத்திட்டங்கள் | 5.1 | 55 |
| TNCWWBன் ஓய்வூதியத் திட்டம் | 5.2 | 56 |
| TNCWWBன் திருமணம் மற்றும் மகப்பேறு உதவித் திட்டம் | 5.3 | 60 |
| TNCWWBன் கல்வி உதவித் திட்டம் | 5.4 | 61 |
| தகுதியற்ற நபர்களுக்கு அளிக்கப்பட்ட உதவி | 5.5 | 64 |
| பணியிடத்தில் இறந்தவர்களுக்கு விபத்து நிவாரணம் வழங்குவதில் இருந்த குறைபாடுகள் | 5.6 | 65 |
| கோவிட் பண உதவி | 5.7 | 67 |
| பாதுகாப்பு கருவிகளின் வழங்கல் | 5.8 | 68 |
| தொழிலாளர்களுக்கான வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யாமை | 5.9 | 70 |
| கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பிற நல உதவிகள் | 5.10 | 72 |
| திறன் மேம்பாடு | 5.11 | 73 |
| சிறப்பு நோக்கத் திட்டம் | 5.12 | 74 |
| மற்ற மாநிலங்களின் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியங்களுடன் TNCWWB திட்டங்களின் ஒப்பீடு | 5.13 | 75 |
| TNCWW திட்டத்தின் விளைவுகள் | 5.14 | 76 |
| முடிவுரை | 5.15 | 78 |
| பரிந்துரைகள் | 5.16 | 78 |
| **அத்தியாயம் VI - TNCWWBன் செயல்பாடு** | | |
| நிதி மேலாண்மை | 6.1 | 81 |
| பணியாளர் மேலாண்மை | 6.2 | 97 |
| கண்காணிப்பு | 6.3 | 98 |
| முடிவுரை | 6.4 | 104 |
| பரிந்துரைகள் | 6.5 | 104 |

## இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1.1 | அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் பட்டியல் | 107 |
| 1.2 | 31 மார்ச் 2022 நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் மாவட்ட வாரியான விவரங்கள் | 108 |
| 1.3 | தணிக்கைக்கான தோர்ந்தெடுப்பு முறைமை | 110 |
| 1.4 | தெரிவு செய்யப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 112 |
| 1.5 | தெரிவு செய்யப்பட்ட கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 113 |
| 2.1 | BOCW சட்டம் 1996ன் கீழ் பதிவு செயல்முறை | 115 |
| 3.1 | பணிக்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் விண்ணப்பதாரரின் விவரங்களைக் குறிக்கும் படிவங்கள் | 116 |
| 3.2 | அரசு அலுவலகங்கள்/உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட செஸ் மீதான சோதனை ஆய்வு (2017-22) | 117 |
| | (i) துறை/அலுவலகங்களில் இருந்து TNCWWBஆல் பெறப்பட்ட குறைவான செஸ் தொகை | 117 |
| | (ii) துறை/அலுவலகங்கள் இருந்து TNCWWBஆல் பெறப்பட்ட அதிகப்படியான செஸ் தொகை | 118 |
| | (iii) உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து TNCWWBஆல் பெறப்பட்ட குறைவான செஸ் தொகை | 118 |
| | (iv) உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து TNCWWBஆல் பெறப்பட்ட அதிகப்படியான செஸ் | 120 |
| 3.3 | TNCWWBஆல் பெறப்படாத செஸ் தொகை | 121 |
| 3.4 | நிலுவையில் உள்ள தொழிலாளர் செஸ் விவரங்கள் மற்றும் வட்டி பெற முடியாததால் ஏற்பட்ட வட்டி இழப்பு | 122 |
| 3.5 | தொழிலாளர் செஸ் தொகையை அரசுக் கணக்கில் செலுத்துதல் | 125 |

| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.6 | தொழிலாளர் செஸ் குறைவாக வசூலிக்கப்படுதல் | 126 |
| 3.7 | குறைவான பணம் செலுத்தல் மூலம் முறைகேடு | 128 |
| 4.1 | TNCWWBன் அதிகார வரம்பின் கீழ்வரும் பணிகளின் வகைகள் | 131 |
| 4.2 | கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பதிவு செயல்முறை | 133 |
| 4.3 | பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் தரவுத்தளத்தில் இருந்த முரண்பாடுகள் | 134 |
| 4.4 | குடும்ப அட்டை/பதிவு எண்கள் போன்றவை ஆதார் எண்களாக கைப்பற்றப்பட்ட சில நேர்வுகள் | 135 |
| 4.5 | ஒரே ஆதார் எண்ணைக் கொண்டு பல முறை பதிவு பெற்ற சில நேர்வுகள் | 136 |
| 4.6 | TNMWBன் கீழுள்ள 17 வாரியங்களில் (TNCWWB தவிர) பதிவு செய்யப்பட்ட 60 வகை அமைப்புசாரா தொழிலாளர்களின் பட்டியல் | 137 |
| 4.7 | (A) 1 முதல் 5 வரையாகத் தொடங்கும் தவறான கைபேசி எண்களின் சில நேர்வுகள்<br>(B) கைபேசி எண்ணின் நகலினைக் கொண்ட சில பதிவுகள் | 139 |
| 4.8 | வேலை அளிப்போரால் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் விவரங்கள் (படிவம் XV) | 140 |
| 4.9 | தொழிலாளர் ஆணையரக போர்ட்டலில் பதிவு பெற்ற, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் | 141 |
| 4.10 | கட்டுமான தளங்களின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வு | 142 |
| 5.1 | TNCWWBஆல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த விவரங்கள் | 143 |
| 5.2 | 2017-22ல் பயனாளிகளால் பெறப்பட்ட திட்ட வாரியான உதவி | 145 |
| 5.3 | TNeGAஆல் மேற்கொள்ளப்பட்ட ஆதார் சரிபார்ப்பு – பலன்களைப் பெற்ற தகுதியற்ற நபர்களின் திட்ட வாரியான விவரங்கள் | 146 |
| 5.4 | TNCWWB திட்டங்களை பிற மாநில கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களுடன் ஒப்பிடுதல் | 147 |

| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 5.5 | பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களிடையேயான கணக்கெடுப்பின் முடிவுகள் | 149 |
| 5.6 | கட்டுமான தளங்களின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது DISH உடன் பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தளங்கள் / வேலை அளிப்போர்கள் | 150 |
| 6.1 | நிலையான வைப்புகளில் உபரி தொகையின் முதலீடு | 151 |
| 6.2 | விவேகமற்ற முதலீட்டால் TNCWWB ஆல் இழக்கப்பட்ட வட்டித் தொகை | 152 |
| 6.3 | ACL-SSS மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு வாரியான நிர்வாகச் செலவு | 153 |
| 6.4 | வாடகை நிர்ணயிக்கப்படாததால் TNCWWB நிதியில் கட்டப்பட்ட தொழிலாளர் வளாகங்களிலிருந்து வாடகை வசூலிக்கப்படவில்லை | 154 |
| 6.5 | 31 மார்ச் 2022 நிலவரப்படி TNCWWBன் அனுமதிக்கப்பட்ட நபர்கள், பணியிலிருந்த நபர்கள் மற்றும் காலியிடங்களின் பதவி வாரியான எண்ணிக்கை | 155 |
| | சுருக்கங்களின் சொற்களஞ்சியம் | 157 |

# முகவுரை

இவ்வறிக்கை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு மாநில சட்டமன்றத்தில் வைக்கப்படும் பொருட்டு, தமிழக ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை, 2017-2022 ஆண்டுகளை உள்ளடக்கிய ‘கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்’ குறித்த செயலாக்கத் தணிக்கையின் குறிப்புகளைக் கொண்டுள்ளது.

ஜூலை 2022 முதல் நவம்பர் 2022 வரை மேற்கொள்ளப்பட்ட செயலாக்கத் தணிக்கையில் கவனத்திற்கு வந்த குறிப்புகள் இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளன. தணிக்கை காலத்திற்குப் பிற்பட்ட நேர்வுகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளைச் சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

# நிர்வாகச் சுருக்கம்

## நிர்வாகச் சுருக்கம்

### இந்த தணிக்கையை ஏன் செய்தோம்?

தேசிய அளவில் உள்ள தொழிலாளர்களில், அமைப்புசாரா தொழிலாளர்கள் 82 விழுக்காடு ஆவர். இவர்களில், கட்டுமானத் தொழிலாளர்கள் தேச முன்னேற்றத்தில் முக்கியப் பங்குள்ளவர்கள். ஆனால், பருவகால வேலை வாய்ப்பு, முறையான வேலை அளிப்போர்–தொழிலாளர் பணி முறை உறவு இல்லாமை மற்றும் போதுமான சமூகப் பாதுகாப்பு வசதிகள் இல்லாமை ஆகியவை அமைப்புசாராத் துறையில் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாகும்.

உடலுழைப்புத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு, அவர்களின் பணி நிலைமைகள், சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை முறைப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982ஐ தமிழ்நாடு அரசு (GoTN) இயற்றியது. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மகப்பேறு, ஓய்வூதியம், இறப்பு பலன்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணத்திற்கான நிதி உதவி ஆகியவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994ஐ தமிழ்நாடு அரசு 1994ல் அறிவித்தது. இந்த நலத்திட்டங்கள் அனைத்தும், கட்டுமானப் பணிகளின் மதிப்பிடப்பட்ட தொகையில் ஒரு விழுக்காடாக வசூலிக்கப்படும் தொழிலாளர் வரியைப் பயன்படுத்தி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் (TNCWWB) செயல்படுத்தப்படுகிறது. 1996ஆம் ஆண்டில், கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நல செஸ் சட்டத்தை மத்திய அரசு இயற்றியது. ஏற்கனவே இதே போன்ற சட்டத்தை கொண்டுள்ள தமிழ்நாடு உட்பட இந்தியா முழுமைக்கும் இச்சட்டங்கள் பொருந்தக்கூடியதாக இருந்தும், தமிழ்நாடு அரசு, அதன் சொந்த சட்டத்தையும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட நலத்திட்டங்களையும் தொடர்ந்து பயன்படுத்திவருகிறது.

மாநிலத்தில் உள்ள 19.30 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் தொடர்புடையதாக இருப்பதால், தொழிலாளர் வரி வசூல் மற்றும் பயன்பாடு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அதுமட்டுமின்றி, ஆண்டுக்கு சுமார் ₹800 கோடி செஸ் வசூலிக்கப்படுதல், கணக்கீடு செய்தல், பயன்படுத்துதல் மற்றும் முதலீடு செய்தல் ஆகியவை சவாலான பணியாகும். இதற்கு நல்ல நிதி மேலாண்மை அமைப்பு, திறமையான திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்த நடைமுறைகள் தேவை. தமிழ்நாடு முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I) அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட இணைக்கத் தணிக்கைகளில் TNCWWBன் நலத் திட்டங்களின் நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்ந்து வெளிக்கொண்டு வரப்பட்டன. எனவே, மக்கள் சேவையை மையமாகக் கொண்ட இத்திட்டத்தின் நோக்கத்தையும் மற்றும் அதைச் செயல்படுத்துவதில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இடர்களையும் கருத்தில் கொண்டு 'கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நலன்' குறித்து செயலாக்கத் தணிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

## நாங்கள் என்ன கண்டுபிடித்தோம்?

### கட்டுமானத் தளங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் செஸ் மதிப்பீடு:

TNCWWB, மதிப்பீடு செய்யப்பட்ட, வசூலிக்கப்பட்ட மற்றும் செலுத்தம் செய்யப்பட்ட செஸ் குறித்த தரவுத்தளத்தை பராமரிக்கவில்லையாதலால், செஸ் தொகையினை அளவிடுதல் மற்றும் சரியான நேரத்தில் அதனை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கான ஒரு முறைமையைக் கொண்டிருக்கவில்லை. தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தால் (DISH) கட்டுமானத் தளங்கள்/வேலை அளிப்போர்கள் பதிவு செய்யப்படுவதில் குறிப்பிடத்தக்க குறைபாட்டை தணிக்கை கண்டறிந்தது. இது, தொழிலாளர் செஸ் மதிப்பீட்டை உறுதி செய்வதற்காக TNCWWB உடன் மேற்கொள்ளப்படும் தரவுப் பகிர்விற்கான நோக்கத்தை பெரிதும் பாதித்தது. கட்டிட அனுமதிக்கு விண்ணப்பிப்பவர்களால் கட்டுமானச் செலவு கணிசமாகக் குறைத்து மதிப்பிடப்படுவதை தணிக்கை கண்டறிந்தது, மேலும் கட்டிட அனுமதிக்கு ஒப்புதல் அளிக்கும் போது தொழிலாளர் செஸ் வசூலிக்கும் உள்ளாட்சி அமைப்புகளிடம் கட்டுமானத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகையின் சரித்தன்மையை உறுதி செய்வதற்கான அமைப்பு இருக்கவில்லை.

### தொழிலாளர் செஸ் வசூல் மற்றும் செலுத்தம்

வசூல் செய்யப்பட்ட செஸ் தொகையினை மதிப்பீடு செய்யும் பொருட்டு, TNCWWB, எந்த அமைப்பையும் கொண்டிருக்கவில்லை. தொழிலாளர் வரியின் மதிப்பீடு, வசூல் மற்றும் பணம் செலுத்தம் ஆகியவற்றைக் கண்காணிக்க ஒரு அமைப்பு இல்லாத நிலையில், TNCWWB, அதன் வருவாயின் ஒரே ஆதாரமான தொழிலாளர் வரி மீது எவ்வித கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக, தொழிலாளர் வரியை, கட்டுமான மதிப்பீட்டில் ஒரு விழுக்காடு என்ற திருத்தியமைக்கப்பட்ட விகிதத்திற்குப் பதிலாக, 0.3 விழுக்காடு என்று குறைவான விகிதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நேர்வுகள் கவனிக்கப்படவில்லை. முறைமையில் இருந்த குறைபாடுகள் மற்றும் வசூலிக்கப்பட்ட, செலுத்தப்பட்ட செஸ் தொகை ஒத்திசைவு செய்யப்படாமை போன்றவை, பணத்தைக் கையாடல், குறைவாக செலுத்துதல், தாமதமாக செலுத்துதல் மற்றும் வசூலிக்கப்பட்ட தொகையை தவறாக செலுத்துதல் ஆகியவற்றிற்கு வழிவகுத்தன. மேலும் வசூலிக்கப்பட்ட செஸ் தொகையை, உள்ளாட்சி அமைப்புகள், TNCWWBல் செலுத்துவதற்குப் பதிலாக தங்கள் கணக்குகளிலேயே தக்கவைத்துக்கொண்டது ஒரு தற்காலிக பணக் கையாடலுக்கு வழிவகுத்தது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், தொழிலாளர் செஸ் தொகை குறைவாக செலுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட 90 நேர்வுகளின் விரிவான ஆய்வில், 68 நேர்வுகளில், ₹15.85 இலட்சம் முறைகேடு நடந்திருப்பது கண்டறியப்பட்டது.

### தொழிலாளர்களின் பதிவு

TNCWWB 1994ல் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அமைப்புசாரா கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவுச் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருந்து வந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எழுத்துப் பதிவுகள் (manual records) மற்றும் மின்னணு தரவுகளில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் ஆதார் எண், கைபேசி எண்

மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற முக்கியத் தகவல்களைப் பதிவு செய்வதில் இருந்த தவறுகள், பதிவு தரவுத்தளத்தின் தரத்தை பாதித்தன. முறையான கணக்கெடுப்பின் மூலம் தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களைக் கண்டறிவதில் இருந்த குறைபாடு காரணமாக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பதிவு செய்யப்படவில்லை. மாநிலங்களுக்கு இடையே இடம்பெயர்ந்த தொழிலாளர்களை தன் கீழ் கொண்டு வருவதற்கு TNCWWB பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை. மாநிலங்களுக்கு இடையே இடம்பெயர்ந்ததாக மதிப்பிடப்பட்ட 1.45 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களில் ஒருவரும் TNCWWB உடன் பதிவு செய்யப்படவில்லை.

### நலத்திட்டங்களின் அமலாக்கம்

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் பணக்கோரிக்கைகளை செயல்படுத்துவதில் இருந்த அதிகப்படியான தாமதம், அத்தொழிலாளர்களின் நலனுக்கானத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை பெரிதும் பாதித்தது. திட்டத்தை செயல்படுத்துவதில் இருந்த தெளிவின்மை, தகுதியற்ற நபர்களுக்கு பலன்களை வழங்க வழிவகுத்தது. கோவிட்-19 பெருந்தொற்றின் போது, வேண்டிய முயற்சி எடுக்கப்படாததால், அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு பலன்கள் வழங்கப்படாதது மட்டுமின்றி கணிசமான எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறை உதவி வழங்கப்பட்டிருந்தது. மத்திய அரசால் தொடங்கப்பட்ட சிறப்பு நோக்கத் திட்டத்தின் இலக்குகள் அடையப்படாததால் தொழிலாழர் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் குறைபாடுகள் காணப்பட்டன.

### TNCWWBன் செயல்பாடு

2017-22 ஆண்டுகளில் பட்ஜெட் தயாரிக்கப்படாததால் TNCWWBன் நிதி நிர்வாகம் பாதிக்கப்பட்டது. உபரி நிதிகளின் விவேகமற்ற முதலீட்டினால், அவற்றின் மீதான வட்டி குறைவாகப் பெறப்பட்டது. TNCWWBன் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத செலவினத்தால், அதன் நிர்வாகச் செலவானது உச்சவரம்பான ஐந்து விழுக்காட்டையும் தாண்டியது.

## நாங்கள் என்ன பரிந்துரைக்கிறோம்?

அரசிற்கு அளிக்கப்பட்ட 20 பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### கட்டுமானத் தளங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் வரி மதிப்பீடு

- தொழில் வரி மதிப்பீடு மற்றும் வசூலினை பரந்த அளவில் மேற்கொள்ள (broadbase assessment and collection) கட்டுமான நிறுவனங்களின் 100 விழுக்காடு பதிவினை உறுதிசெய்யும் பொருட்டு, பதிவு செயல்முறையை DISH ஒருமுகப்படுத்துவதை (centralise) அரசு உறுதி செய்ய வேண்டும். அனைத்து செஸ் செலுத்தும் நிறுவனங்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளத்தை, TNCWWB பராமரிப்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதி அளிக்கப்படும் கட்டிடங்களின் கட்டுமான செலவை மதிப்பிடுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும். மேலும், இவை

உள்ளாட்சி அமைப்புகளால் பின்பற்றப்படுவதை TNCWWB உறுதி செய்ய வேண்டும்.

- ஒப்பந்ததாரர் DISH உடன் பதிவு செய்யப்படாவிட்டால், அவர்களுக்கு எந்த ஒரு வேலையும் வழங்கப்பட/அளிக்கப்பட இயலாது என்பதை கட்டாயமாக்க அரசு TNBOCW விதிகள், 2006ஐ திருத்தியமைக்க வேண்டும்.

### தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம்

- செஸ் பணம் செலுத்தும் முகமைகள் படிவம் III மற்றும் படிவம் IV மூலம் விவரங்களை வழங்குவதை அரசு கட்டாயமாக்க வேண்டும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் செஸ் பணம் செலுத்தும் முகமைகளால் வசூலிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட/கழிக்கப்பட்ட செஸ் சரியானதா என்பதை சரிபார்க்க TNCWWB ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

- இணைய வழி செஸ் வசூல் தொகுதியின் அமலாக்கத்தை அரசு விரைவுபடுத்த வேண்டும். இதில் உள்ளாட்சி அளவில் செய்யப்படும் தொழிலாளர் செஸ் மதிப்பீட்டுடன் செலுத்தப்பட்ட தொகையை தானாக ஒத்திசைவு செய்யும் வசதி இருக்க வேண்டும். இது அமல்படுத்தப்படாத நிலையில், செலுத்துச்சீட்டின் மறுபகுதியின் நகல்களை இணைக்கவும், ஒவ்வொரு பணவரவிற்கான பரிவர்த்தனை IDயை வழங்குமாறும் உள்ளாட்சி அமைப்புகளை அறிவுறுத்த வேண்டும்.

- பணம் செலுத்துச்சீட்டுகளின் மறுபகுதியில் செய்யப்படும் திருத்தங்களினால் ஏற்படும் முறைகேடுகளுக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். TNCWWB, இதுபோன்ற முறைகேடுள்ள நேர்வுகளை வெளிக்கொணர மாநிலம் தழுவிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட 167 நேர்வுகளிடம் இருந்து ₹61.78 இலட்சத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்

- பணம் செலுத்தாமை/தவறாக பணம் செலுத்துதல்/குறைவாக செஸ் பணம் செலுத்துதல் ஆகிய நேர்வுகளில் தொடர்புடைய அதிகாரிகளின் மீது அதற்கான பொறுப்பு அரசால் நிர்ணயிக்கப்பட வேண்டும். TNCWWBக்கு, தாமதமாக செலுத்தப்பட்ட தொகை மீது வட்டி வசூலிக்கும் அதிகாரம் அளிக்கும் பொருட்டு அரசு TNMW சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும்.

### தொழிலாளர்களின் பதிவு

- DISH உடன் ஒருங்கிணைந்து, மாநிலங்களுக்கு இடையே புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட தளங்களில் உள்ள தகுதியுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் சேர்க்கப்பட்டிருப்பதை TNCWWB உறுதிசெய்ய வேண்டும்

- கட்டுமானத் தொழிலாளர்களின் கணக்கெடுப்புக்கு அரசு உத்தரவு வழங்க வேண்டும் மற்றும் தகுதியுள்ள அனைத்து தொழிலாளர்களும் TNCWWB உடன் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- TNCWWB, அதன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு சிக்கலற்ற பலனை அளிப்பதற்கு, அவர்களின் தரவுத்தளத்தின் தரத்தை உறுதி செய்ய வேண்டும்.
- தொழிலாளர்களின் பொதுநலனுக்காக அவர்கள் TNCWWB உடன் பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்கும்படி TNMW சட்டம், 1982 மற்றும் TNBOCW விதிகள், 2006ஐ அரசு திருத்தி அமைக்க வேண்டும். இதற்கு இணங்காத வேலை அளிப்போர்கள்/ஒப்பந்ததாரர்களைத் தடை செய்ய ஒரு தண்டனை பிரிவும் சேர்க்கப்படலாம்.

## நலத்திட்டங்களின் அமலாக்கம்

- ஓய்வூதியத் தகுதிக்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை அரசு நிர்ணயிக்க வேண்டும் மற்றும் அத்தகைய சேவைக் காலத்திற்கான மதிப்பீட்டின் (weightage) அடிப்படையில் ஓய்வூதியத்தின் அளவை நிர்ணயம் செய்வதைப் பரிசீலிக்க வேண்டும்.
- மகப்பேறு உதவித் திட்டம், சுகாதாரத் துறையால் செயல்படுத்தப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்குத் அத்துறையால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.
- TNCWWB மூலம் சேவைகள் வழங்குவதற்கான அளவுகோல்களை அரசு நிர்ணயிக்க வேண்டும் மற்றும் திட்டங்களின் உதவிகள் காலவரம்பிற்குள் தீர்வு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் நலனுக்காக, பொருத்தமான தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு செயல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, TNCWWB செயல்படுத்தும் திட்டங்களை அரசு பிரபலப்படுத்த வேண்டும்.
- கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக அதிக திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை திறம்பட செயல்படுத்தப்படும் வகையில், சிறப்பு நோக்கத் திட்டத்தை (Mission Mode Project-MMP) அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும்.

## TNCWWBன் செயல்பாடு

- கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, அதன் மூலம் வருடாந்திர தொழிலாளர் செஸ் வசூலை மதிப்பிடுமாறு TNCWWBக்கு அரசு அறிவுறுத்த வேண்டும். இது, மதிப்பீடு செய்யப்படும் செஸ் தொகையுடன் உள்ளபடியாக வசூலாகும் தொகையினை ஒப்பிடுவதன் மூலம் செஸ் வசூலைக் கண்காணிக்க TNCWWBக்கு உதவ வேண்டும்.
- வரவு செலவினைக் குறித்த விரிவான பகுப்பாய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் தனது முதலீட்டுக் கொள்கையை முறைப்படுத்துவதற்கு TNCWWBஐ அரசு அறிவுறுத்த வேண்டும்.

- மற்ற அனைத்து வாரியங்களின் முழு நிர்வாகச் செலவையும் TNCWWB ஏற்கும் நடைமுறையை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் மொத்தத் திட்டச் செலவில் ஐந்து விழுக்காட்டை மட்டுமே நிர்வாகச் செலவாக மேற்கொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகள் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- பெறப்பட்ட DDகளை TNCWWB வங்கிக் கணக்கில் தாமதமாக செலுத்தியதால் ஏற்பட்ட இழப்பிற்கான பொறுப்பினை, தொடர்புடைய அதிகாரிகள் மீது அரசு நிர்ணயிக்க வேண்டும்.

## தணிக்கைப் பரிந்துரைகளுக்கு அரசின் பதில்

தணிக்கைக் குறிப்புகளுக்கு பதிலளிக்கும் போது, தேவைப்படும் இடங்களில் தேவையான திருத்த நடவடிக்கை எடுப்பதாக தமிழக அரசு உறுதி அளித்துள்ளது. மேலும், தணிக்கையால் பரிந்துரைக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளைத் தொடங்குமாறு TNCWWB–க்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# அத்தியாயம் I

# முன்னுரை

## அத்தியாயம் I

## முன்னுரை

**கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் குறித்த செயலாக்கத் தணிக்கை**

### 1.1 முன்னுரை

**இந்தியாவில் உள்ள அமைப்புசாரா பிரிவு:** 2021-22ஆம் ஆண்டின் பொருளாதார கணக்கெடுப்பு அறிக்கையின்படி[1] தொழிலாளர் எண்ணிக்கையில் 82 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் அமைப்பு சாரா பிரிவுகளைச் சார்ந்துள்ளனர். அமைப்புசாரா தொழிலாளர்கள், ஒரு வருடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் கிடைக்கும் வேலைவாய்ப்பு (seasonality of employment), முறையான பணியமர்த்துநர்-பணியாளர் (Employer-Employee) உறவுமுறை இல்லாமை, போதிய சமூகப் பாதுகாப்பு மற்றும் பிற நலத்திட்டங்கள் இல்லாதது போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் அமைப்புசாரா பிரிவையே சார்ந்திருக்கும் கட்டுமானத் தொழிலாளர்கள், நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இந்திய அரசியலமைப்பின் பொதுப்பட்டியலில் (Concurrent List) தொழிலாளர் நலன் இடம் பெற்றுள்ளது. அதன்படி, மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு ஆகிய இரண்டும் கட்டுமானத் தொழிலாளர்களின் பணியினை முறைப்படுத்தவும், அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்யவும் சட்டங்களை இயற்றியுள்ளன.

கட்டுமானத் தொழிலார்கள் உட்பட உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982 (TNMW சட்டம்) மற்றும் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) விதிகள், 1986 (TNMW விதிகள்) ஆகியவற்றை GoTN இயற்றியது. 1994ல், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994-ஐ (திட்டம்) அறிவித்து, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை (Tamil Nadu Construction Workers Welfare Board - TNCWWB) நிறுவியது.

மத்திய அரசு, 1996 ஆம் ஆண்டில் கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1996ஐ (Building and Other Construction Workers (Regulation of Employment and Conditions of Service) Act - BOCW சட்டம்) இயற்றியது.

---

இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள சுருக்க சொற்களஞ்சிய திரட்டு 157ம் பக்கத்தில் உள்ளது.

[1] மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையால் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வரி சட்டம், 1996 (BOCW செஸ் சட்டம்) மற்றும் BOCWW செஸ் விதிகள், 1998ஐ இயற்றியது.

கட்டுமானப் பணிகளின் மதிப்பீட்டுத் தொகையில் ஒரு விழுக்காடு என்ற விகிதத்தில் வசூலிக்கப்படும் தொழிலாளர் வரியே (Labour Cess) TNCWWBக்கான முக்கிய நிதி ஆதாரமாக இருந்தாலும், TNMW சட்டம் ஏற்கனவே அமலில் இருந்ததால், மத்திய அரசின் BOCWW செஸ் சட்டம் மற்றும் விதிகளை (Cess Act and Rules) தமிழ்நாடு அரசு செயல்படுத்தவில்லை. இருப்பினும் நிறுவனங்களின் பதிவு தொடர்பான BOCW சட்டத்தின் விதிகளை உள்ளடக்கி, தமிழ்நாடு கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) விதிகள், 2006 ஐ (TNBOCW விதிகள்) தமிழ்நாடு அரசு இயற்றியது.

## 1.2 நிர்வாகம்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் (Labour Welfare and Skill Development Department - LW&SDD) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (Additional Chief Secretary - ACS), அரசு தரப்பில் துறைக்குத் தலைமை வகிக்கிறார். கட்டுமான நிறுவனங்கள்[2]/வேலை அளிப்போர்களின்[3] பதிவு மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான TNBOCW விதிகள் மற்றும் BOCW சட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திடம் (Directorate of Industrial Safety and Health - DISH) ஒப்படைக்கப்பட்டுள்ளது. LW&SDD துறையின் கீழுள்ள 18 வாரியங்களுள் ஒன்றான (**இணைப்பு 1.1**) TNCWWBயை, இத்துறையின் தொழிலாளர் ஆணையர் (Commissioner of Labour - CoL) நிர்வகிக்கிறார். கட்டுமானத் தொழிலாளர் நலத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான செஸ் நிதியை பராமரிக்கும் பொறுப்பு TNCWWBயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் தொடர்பான சட்டங்கள்/விதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், **விளக்கப்படம் 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

---

[2] கட்டுமான நிறுவனங்கள் என்பது கட்டுமான நடவடிக்கைகளுக்கு தொழிலாளர்களை ஈடுபடுத்தும் கட்டுமான தளங்களைக் குறிக்கும்.

[3] வேலை அளிப்போர் என்பது கட்டுமானத் தளத்தில் கட்டுமானத் தொழிலாளர்களை ஈடுபடுத்தும் அரசு, உள்ளாட்சி அமைப்பு, நிறுவனம் அல்லது தனிநபர் ஆகியோரைக் குறிக்கும்.

**விளக்கப்படம் 1.1: தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் தொடர்பான சட்டங்கள்/விதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்**




(ஆதாரம்: தமிழ்நாடு அரசு வழங்கிய விவரங்கள்)

### 1.2.1 கட்டுமான நிறுவனங்களின் பதிவிற்கான TNBOCW விதிகளின் அமலாக்கம்

கட்டுமான நிறுவனங்களின்/வேலை அளிப்போர்களின் பதிவு, பணியிடங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் தொடர்பான TNBOCW விதிகளை அமல்படுத்துவது DISHன் பொறுப்பாகும். BOCW சட்டத்தின்படி, எந்தவொரு கட்டுமான நிறுவனமும், தற்போதோ அல்லது முந்தைய 12 மாதங்களில் ஏதேனும் ஒரு தினத்திலோ, 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கட்டுமானத்தில் ஈடுபடுத்தியிருந்தால், அந்நிறுவனம் DISHல் பதிவு செய்யப்பட வேண்டும்.

### 1.2.2 சட்டம்/விதியின் வழிவகைகளில் உள்ள குறைபாடுகள்

மத்திய சட்டங்கள் மற்றும் விதிகளின் உள்ள சில முக்கிய வழிவகைகளை மாநிலத்தின் TNMW சட்டம்/விதிகள் கொண்டிருக்கவில்லை. அவை:

- கட்டுமானத் தொழிலாளர்கள் பலன்களைப் பெறுவதற்கு குறைந்தபட்ச உறுப்பினர் காலம் இல்லை, இது மத்திய சட்டம்/விதிகளின் கீழ் மூன்று ஆண்டுகள் ஆகும்,

- TNCWWBன் நிர்வாகச் செலவிற்கு உச்சவரம்பு இல்லை. இது மத்திய சட்டம்/விதிகளில் ஆண்டு செலவினத்தின் ஐந்து விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது,
- தாமதமான செஸ் செலுத்துதல்கள் மீது வட்டி விதிக்க எந்த வழிமுறையும் இல்லை, மற்றும்
- இந்திய தணிக்கைத் தலைவரால் (CAG) தணிக்கை செய்யப்படுவதற்கு எந்த வழிவகையும் இல்லை.

### 1.2.3 TNMW சட்டம் மற்றும் TNCWW திட்டங்களை செயல்படுத்துதல்:

TNMW சட்டத்தின் கீழ், TNCWWBன் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தமிழ்நாடு அரசு நியமிக்கிறது. அரசு தரப்பில் செயல்படும் தலைவர் மற்றும் அலுவல்வழி உறுப்பினர்கள் (ex-officio members), அரசின் விருப்பத்திற்கிணங்க பதவி வகிக்கின்றனர். அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் (வேலை அளிப்போர் மற்றும் பணியாளர் பிரதிநிதிகள்) அவர்கள் நியமனத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு பதவியில் இருப்பார்கள். வாரியமானது ஜூன் 2021ல் மீண்டும் அமைக்கப்பட்டது.

TNCWWBன் செயலாளரே தலைமை நிர்வாக அதிகாரியாக செயல்படுகிறார். அவர், வழக்கமாக, LW&SDDல் இருந்து பணியமர்த்தப்பட்ட, கூடுதல் தொழிலாளர் ஆணையர் படிநிலையில் உள்ள ஒரு அதிகாரியாவார். TNCWWB வாரியத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு, அதன் ஊழியர்கள் மற்றும் LW&SDDல் இருந்து நியமிக்கப்பட்டவர்கள் செயலாளருக்கு பணியில் உதவி புரிகின்றனர்.

### 1.2.4 நிதி ஆதாரம் மற்றும் அதன் பயன்பாடு

உள்ளாட்சி அமைப்புகள்/பிற முகமைகளிடமிருந்து தொழிலாளர் செஸ் வசூல் செய்தும் தனது மிகை நிதிகளின் நிலையான வைப்புகளிலிருந்து (fixed deposits - FD) பெறப்பட்ட வட்டியாகவும் TNCWWB வருவாய் ஈட்டுகிறது.
கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பல்வேறு திட்டங்களுக்காக மாவட்ட அலுவலகங்களால் அளிக்கப்படும் உதவிக்காகவும் TNCWWB/மாவட்ட அலுவலகங்களின் நிர்வாகச் செலவுகளுக்காகவும் நிதியின் பெரும்பகுதி செலவிடப்படுகிறது.

2017-22 ஆண்டுகளில் TNCWWBன் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1: 2017-22 ஆண்டுகளின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள்**

(₹ கோடியில்)

| வருடம் | தொடக்க இருப்பு | வரவினங்கள் | | | மொத்த வரவினங்கள் | செலுத்தங்கள் | | மொத்த செலுத்தங்கள் | மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்புத் தொகை | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொழிலாளர் வரி | வட்டி | பிற வருவாய் | | திட்டம் | நிர்வாகம் மற்றும் பிற செலவுகள் | | | |
| 2017-18 | **237.73** | 521.12 | 149.78 | 0.36 | **671.25** | 90.89 | 30.40 | **121.29** | 554.52 | **233.18** |
| 2018-19 | **233.18** | 567.03 | 181.88 | 0.45 | **749.35** | 123.71 | 29.13 | **152.84** | 546.52 | **283.17** |
| 2019-20 | **283.17** | 627.41 | 235.15 | 1.18 | **863.74** | 148.12 | 64.67 | **212.79** | 646.00 | **288.12** |
| 2020-21 | **288.12** | 707.08 | 171.08 | 1.51 | **879.67** | 549.12 | 32.00 | **581.12** | 458.79 | **127.89** |
| 2021-22 | **127.89** | 785.78 | 130.77 | 0.03 | **916.58** | 177.64 | 31.46 | **209.10** | 599.53 | **235.84** |
| **மொத்தம்** | **237.73** | **3,208.43** | **868.65** | **3.52** | **4,080.60** | **1,089.48** | **187.66** | **1,277.14** | **2,805.35** | **235.84** |

(ஆதாரம்:TNCWWB வழங்கிய தரவு)

31 மார்ச் 2022 நிலவரப்படி, TNCWWB ₹4,170 கோடியை FDயாக கொண்டிருந்தது, இது 01 ஏப்ரல் 2017 அன்று இருந்த ஆரம்ப FDயான ₹1,360 கோடியில் இருந்து ₹2,810 கோடி அதிகரித்துள்ளது.

செஸ் வசூல் மற்றும் பயன்பாட்டிற்கான நிதி செயல்முறை **விளக்கப்படம் 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 1.2: செஸ் வசூல் மற்றும் பயன்பாட்டிற்கான நிதி செயல்முறை**




(ஆதாரம்: TNCWWB வழங்கிய விவரங்கள்)

**மாவட்ட அலுவலகங்கள்:** மாவட்டங்களில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் உதவி தொழிலாளர் ஆணையர்கள் (Assistant Commissioners of Labour-Social Security Scheme - ACL-SSS), தொழிலாளர்களின் பதிவு, பணக் கோரிக்கைகள் போன்ற TNMWன் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் மாவட்ட வாரியான விவரங்கள் **இணைப்பு 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**மாநில ஆலோசனைக் குழு:** சட்டம் அல்லது திட்டத்தின் நிர்வாகம் தொடர்பாக அரசிற்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு, ஒரு மாநில ஆலோசனைக் குழுவை (State Advisory Committee - SAC) அமைப்பதற்கு TNMW சட்டத்தின் பிரிவு 15(1) வழிவகுக்கிறது. இக்குழுவிற்கு தொழிலாளர் நலன் அமைச்சரை தலைவராகவும், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு பிரதிநிதிகள், வேலை அளிப்போர்கள் மற்றும் பணியாளர்கள் உறுப்பினர்களாவும் உள்ளனர். அரசின் பிரதிநிதிகள், அரசின் விருப்பத்தின் பேரிலும் மற்ற உறுப்பினர்கள் மூன்று வருட காலத்திற்கும் பதவியில் இருப்பார்கள்.

**நிபுணர் குழு:** BOCW சட்டத்தின் பிரிவு 5-ன்படி, இச்சட்டத்தின் கீழ் விதிகளை உருவாக்குவதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக கட்டிடம் அல்லது பிற கட்டுமானப் பணிகளில் தகுதி பெற்ற நபர்களைக் கொண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபுணர் குழுக்களை அரசு அமைக்கலாம். நிபுணர் குழுவை அமைத்து BOCW சட்டத்தின் 62வது பிரிவின் கீழ் சட்டப்பூர்வ விதிகளை உருவாக்குமாறு மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது (மார்ச் 2018).

## 1.3 தணிக்கை அணுகுமுறை மற்றும் முறைமை

### தணிக்கை நோக்கங்கள்

இந்த செயலாக்கத் தணிக்கையின் (PA) நோக்கங்களாவன:

- அனைத்து கட்டுமான இடங்களின் கணக்கெடுப்பு மற்றும் பதிவுக்கான செயல்முறையும் செஸ் மதிப்பீடு, வசூலிப்பு, வாரியத்தின் நிதியில் வசூலிக்கப்பட்ட செஸ் செலுத்தப்படுதல் ஆகியவற்றிற்கான செயல்முறைகளும் உள்ளனவா என்பதை உறுதி செய்தல்; மற்றும் நிதியானது பயனுள்ளதாகவும், திறனுடனும் சிக்கனமான முறையிலும் நிர்வகிக்கப்படுகிறதா என்று அறிய ஒரு வழிமுறை உள்ளதா என்பதை கண்டறிதல்;
- அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மதிப்பீடு, அடையாளம் காணுதல் மற்றும் பதிவு ஆகியவற்றிற்கான ஒரு திறம்பட்ட அமைப்பு உள்ளதா என்பதை அறிதல்;
- பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு, திட்டத்தின் கீழ் போதுமான, வெளிப்படையான மற்றும் சரியான நேரத்தில் உதவி அளிக்கப்படுகின்றதை உறுதி செய்தல், அடையாளம் காணப்பட்ட பிற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதா என்று கண்டறிதல்.

- மாநில மற்றும் மத்திய சட்டங்களின்படி கண்காணிப்பு செய்யப்படுகிறதா மற்றும் உள் கட்டுப்பாடு, தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் (Information, Education and Communication - IEC) மற்றும் குறை தீர்க்கும் வழிமுறைகள் போதுமானதாகவும் பயனுள்ளதாகவும் உள்ளனவா என்பதையும் அறிதல்.

## நோக்கம் மற்றும் தணிக்கையின் செயற்பரப்பு

இந்த PA, ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2022 வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியது. செயலகம், தொழிலாளர் ஆணையகம், TNCWWB, DISH, ACL – SSSன் தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்ட அலுவலகங்கள்[4] மற்றும் இந்த 10 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 124 உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் பதிவுகளைத் தணிக்கை செய்வதன் மூலம் களத் தணிக்கை ஜூலை முதல் நவம்பர் 2022 வரை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கைக்கான தேர்ந்தெடுப்பு செயல்முறை **இணைப்பு 1.3**ல் விளக்கப்பட்டுள்ளது மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பட்டியல் முறையே **இணைப்புகள் 1.4** மற்றும் **1.5** ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## தணிக்கைக்கான அளவுகோல்கள்

செயல்திறனை அளவிடுவதற்கான தணிக்கை அளவுகோல்கள் பின்வருவனவற்றிலிருந்து பெறப்பட்டன:

- TNMW சட்டம், 1982 மற்றும் அதன் கீழ் 1986ல் உருவாக்கப்பட்ட விதிகள்;
- TNCWW திட்டம், 1994;
- BOCW சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு அரசால் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்;
- BOCWW செஸ் சட்டம், 1996 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்;
- தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000;
- மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைகள்;
- மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் அறிவுறுத்தல்கள்; மற்றும்
- பொதுக் கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழுவின் (Committee on Public Undertakings - CoPU) பரிந்துரைகள்.

---

[4] சென்னை, கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், நாகர்கோவில், சேலம், தென்காசி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை.

**தணிக்கை முறைமை**

கேள்வித்தாள்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள், தணிக்கை வினவல்களுக்கான பதில்கள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் பதில்களுடன் வழங்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை தணிக்கைக்கான முதன்மை சான்றுகள். இவை, தணிக்கையின் போது சேகரிக்கப்பட்ட தொடர்புடைய ஆவணங்கள், அறிக்கைகள், கடிதங்கள் போன்றவற்றின் நகல்கள், நேரடி கூட்டு தேர்ந்தாய்வு மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நடத்தப்பட்ட பயனாளிகள் கருத்தாய்வுகள் ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.

தணிக்கை நோக்கங்கள், செயற்பரப்பு மற்றும் முறைமைகள் பற்றி எடுத்துரைக்க, 21 ஜுலை 2022 அன்று அரசின் ACS, LW&SDD உடன் ஒரு தொடக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. 8 பிப்ரவரி 2023 அன்று ACS, LW&SDD மற்றும் துறையின் அதிகாரிகளுடன் தணிக்கை கண்டுபிடிப்புகள் பற்றி விவாதிக்க ஒரு நிறைவுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த அறிக்கையை உருவாக்கும் போது துறையின் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டன.

## 1.4 முந்தைய தணிக்கை அறிக்கைகள்

2008-13 ஆண்டுகளில் TNCWWBன் செயல்பாடுகள் குறித்து 2014 ஆம் ஆண்டின் CAGன் அறிக்கை எண் 4 – தமிழ்நாடு அரசு, பொது நிறுவனக் குழுவால் (Committee on Public Undertakings - CoPU) பரிசீலிக்கப்பட்டது (ஜுன் 2022) மற்றும் அதன் பரிந்துரைகள் எதிர்நோக்கப்படுகின்றன (மார்ச் 2023).

## 1.5 நல்ல நடைமுறைகள்

மார்ச் 2020 நிலவரப்படி, பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 31.27 இலட்சமாக இருந்தது. பதிவு செய்த உறுப்பினர்களின் தரவுத்தளத்தில், இரண்டுமுறை பதிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் பதிவு புதுப்பிக்காதவர்களை, TNCWWB ஒரு விரிவான சரிபார்ப்பு முயற்சி மேற்கொண்டு, 19.13 இலட்சம் புதுப்பிக்கப்படாத இனங்கள்/நகல்களை அதன் பதிவுபெற்ற நபர்கள் தரவுத்தளத்திலிருந்து நீக்கம் செய்தது. இதனால், 12.14 இலட்சம் தொழிலாளர்களுக்கு மட்டுமே 2020ஆம் ஆண்டின் ஏப்ரல்–மே மாதங்களில், கோவிட் பண உதவியாக தலா ₹2,000 வழங்கப்பட்டது. தரவுத்தளத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்ட தகுதியற்ற தொழிலாளர்களுக்கு கோவிட் பண உதவி வழங்கப்படாததால் சுமார் ₹382 கோடி சேமிக்கப்பட்டது.

## 1.6 ஏற்பு

துறை மற்றும் தணிக்கைக்குட்படுத்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்கு தணிக்கை ஏற்பு அளிக்கிறது.

## 1.7 தணிக்கை கண்டுபிடிப்புகள்

தணிக்கை முடிவுகள் ஆறு அத்தியாயங்களைக் கொண்ட இரண்டு பிரிவுகளாக தொகுக்கப்பட்டுள்ளன:

- அத்தியாயம் I : முன்னுரை

**பிரிவு அ: தொழிலாளர் வரி ஈட்டம்**

- அத்தியாயம் II : கட்டுமான நிறுவனங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் வரி மதிப்பீடு
- அத்தியாயம் III : தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம்

**பிரிவு ஆ: தொழிலாளர் வரியின் பயன்பாடு**

- அத்தியாயம் IV : தொழிலாளர்களின் பதிவு
- அத்தியாயம் V : நலத்திட்டங்களின் அமலாக்கம்
- அத்தியாயம்VI : TNCWWBன் செயல்பாடு

# பிரிவு - அ

# தொழிலாளர் வரி ஈட்டம்

# அத்தியாயம் II

## கட்டுமான நிறுவனங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் வரி மதிப்பீடு

# அத்தியாயம் II

# கட்டுமான நிறுவனங்களின் பதிவு மற்றும் தொழிலாளர் வரி மதிப்பீடு

**கட்டுமான நிறுவனங்களை பதிவு செய்வதற்கான அதிகாரங்களை பகிர்ந்தளிக்காமை, பதிவு செய்வதற்கு போதிய முயற்சிகள் மேற்கொள்ளாமை மற்றும் செஸ் செலுத்தும் முகமைகளுக்கான தரவுத்தளத்தை பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள் போன்ற காரணங்களால் கட்டுமான நிறுவனங்களின் பதிவு செயல்முறையில் முன்னேற்றம் இல்லாமல் மந்த நிலையில் இருந்தது. உள்ளாட்சி அமைப்புகளால் கட்டிட அனுமதி வழங்கப்படும் போது, கட்டுமான செலவை மதிப்பிடுவதில் சீரான தன்மை இல்லாதது செஸ் மதிப்பீட்டை பெரிதும் பாதித்தது.**

## 2.1 முன்னுரை

BOCW சட்டம், 1996ன் படி, முந்தைய 12 மாதங்களில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து கட்டுமான நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு வேலை அளிப்போரும் வேலை தொடங்கிய நாளிலிருந்து 60 நாட்களுக்குள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திடம் (DISH) பதிவிற்காக விண்ணப்பிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற முகமைகளால், செஸ் (cess) மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்பட வேண்டி இருப்பதால் கட்டுமான பணி குறித்த விவரங்களைக் கண்டறிய DISHயிடம் இந்நிறுவனங்களின் பதிவு முக்கியமாகும். வேலை அளிப்போர்கள் உட்பட கட்டுமான நிறுவனங்கள் இணைய தளத்தின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செயல்முறை **இணைப்பு 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள இணை இயக்குநர்கள் (Joint Directors - JD) கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான அதிகாரங்களைப் பெற்றுள்ளனர்.

கட்டுமான நிறுவனங்கள் (Establishments) என்பது தனியார் கட்டுமான நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (Tamil Nadu Water Supply and Drainage Board - TWAD), சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (Chennai Metropolitan Water Supply and Sewerage Board - CMWSSB), தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் (Tamil Nadu Police Housing Corporation - TNPHC), சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL), தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற கட்டுமானப் பணிகளைச் செயல்படுத்தும் பல்வேறு அரசாங்க அமைப்புகளின் கீழுள்ள கட்டுமானத் தளங்கள் ஆகும்.

தொழிலாளர் செஸ்ஸின் மதிப்பீடு, வசூல் மற்றும் செலுத்துதல் ஆகியவை TNMW சட்டம், 1982 மற்றும் TNMW விதிகள், 1986 ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளால் கட்டிட அனுமதிகள் வழங்கப்பட்ட கட்டுமானப் பணிகள்:** TNMW விதி 20A(1)ன் கீழ், கட்டிட அனுமதி வழங்கப்படும் போது, தொழிலாளர் செஸ் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில், TNCWWBன் உடலுழைப்புத் தொழிலாளர் பொது நல நிதிக்கு ஆதரவாக, சென்னையில் செலுத்தப்படக்கூடிய வரைவோலை (Demand Draft-DD) மூலம் உள்ளாட்சி அமைப்பால் வசூலிக்கப்படும். உள்ளாட்சி அமைப்பால் இவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை, அம்மாதத்திற்கு அடுத்த மாதத்தின் 15ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக TNCWWBக்கு செலுத்தப்பட வேண்டும்.

**பிற கட்டுமானப் பணிகள்:** விதி 20A(1)ன் கீழ் உள்ளாட்சி அமைப்பின் ஒப்புதல் தேவைப்படாத கட்டுமானத்திற்கு, TNMW விதி 20A(2)ன்படி கட்டுமானப் பணியை மேற்கொள்ளும் நபர் அல்லது அப்பணிக்கு பொறுப்பேற்ற நபரால் TNCWWBன் செயலாளருக்கு, கட்டுமானப் பணிகள் தொடங்கிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தொழிலாளர் செஸ் செலுத்தப்பட வேண்டும்.

17 டிசம்பர் 2013 முதல், விதி 20A(1) மற்றும் 20A(2)ன் கீழ் செஸ் பங்களிப்பு கட்டுமானத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் 0.3 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாக திருத்தியமைக்கப்பட்டது.

## 2.2 கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களை பதிவு செய்யாமை

DISH வழங்கிய தரவுகளின்படி, 2017-22 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் எண்ணிக்கை 8,074 மட்டுமே ஆகும்.

பின்வரும் காரணங்களால் DISH ஆல் பதிவு செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாக தணிக்கை கண்டறிந்தது:

தெரிவு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கையின் போது, DISH உடன் பதிவுச் செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்ககளின் (உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள்) பட்டியலை தணிக்கை சரிப்பார்த்தது. 2017-22 ஆண்டுகளில், 57 உள்ளாட்சி அமைப்புகள் மொத்தம் 18,587 பணிகளைச் செய்துள்ளதாக இவ்வாய்வு வெளிப்படுத்தியது. இவை தனித்தனியாக கட்டுமான நிறுவனங்களாகவும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்/ஒப்பந்ததாரர்கள் வேலை அளிப்போர்களாகவும் பதிவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், 57 உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட 18,587 பணிகளுள் ஐந்து உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்ற 101 பணிகள் (ஒரு விழுக்காடு) மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இது **அட்டவணை 2.1ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1: DISHல் பதிவு பெற்ற தெரிவு செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்கள்**

| வ. எண் | உள்ளாட்சி அமைப்பு (வேலை அளிப்போர்) | உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த எண்ணிக்கை | நிறைவேற்றப்பட்ட வேலைகளின் மொத்த எண்ணிக்கை (கட்டுமான நிறுவனங்கள்) | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | பதிவு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் | பதிவுச் செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அதன் விழுக்காடு |
| (1) | (2) | (3) | (4) | (5) = (3)ல் | (6) = (4) ல் |
| 1 | மாநகராட்சிகள் | 7 | 6,183 | 4 | 100 *(2)* |
| 2 | நகராட்சிகள் | 9 | 3,622 | 1 | 1 *(0)* |
| 3 | பேரூராட்சிகள் | 25 | 2,169 | இல்லை | இல்லை *(0)* |
| 4 | வட்டாரங்கள் | 16 | 6,613 | இல்லை | இல்லை *(0)* |
| | மொத்தம் | **57** | **18,587** | **5** | **101** *(1)* |

(ஆதாரம்: உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட தரவு)

21 கட்டுமானத் தளங்களின் நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வின் போது, கட்டுமானத் நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் பதிவு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில், 21 கட்டுமானத் தளங்களில் 10 தளங்கள் (48 விழுக்காடு) DISH உடன் பதிவு செய்யப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

31 மார்ச் 2023 நிலவரப்படி, மொத்தம் 18,343 கட்டிடங்கள்[5] மற்றும் இதர கட்டுமானப் பணி ஒப்பந்ததாரர்கள் ஒன்பது வெவ்வேறு அரசு முகமைகளுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தணிக்கை கண்டது. இதன் விவரங்கள் **அட்டவணை 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2: பல்வேறு அரசு முகமைகளின் பதிவு பெற்ற, DISH உடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்**

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்பட்ட முகமைகள் | முகமைகளில் பதிவு பெற்ற தனிப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை | DISH உடன் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | DISH உடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமைப்பு/பிணையம்/வலை அமைப்பு (network) | 11,015 | 456 | *4.14* |
| 2 | தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் இணையதளம் (portal) | 2,851 | 96 | *3.37* |
| 3 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (Employees Provident Fund Organisation - EPFO) | 2,412 | 101 | *4.19* |

---

5 ஒன்பது முகமைகளுடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் மொத்த எண்ணிக்கை 24,054. ஒரே ஒப்பந்ததாரர் பல முகமைகளில் பதிவு பெற்ற நேர்வுகளுக்கான நகல் பதிவு குறைப்புப் பயிற்சிக்குப் பிறகு, ஒன்பது முகமைகளுடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை 18,343 ஆகும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்பட்ட முகமைகள் | முகமைகளில் பதிவு பெற்ற தனிப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை | DISH உடன் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | DISH உடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 4 | நெடுஞ்சாலைத்துறை | 707 | 12 | *1.70* |
| 5 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) | 405 | 9 | *2.22* |
| 6 | தொழிலாளர்கள் மாநில காப்பீட்டு கழகம் (Employees State Insurance Corporation - ESIC) | 353 | 6 | *1.70* |
| 7 | பொதுப்பணித்துறை (Public Works Department - PWD) | 353 | 12 | *3.40* |
| 8 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (Tamil Nadu Water Supply and Drainage Board - TWAD) | 200 | 18 | *9.00* |
| 9 | பெருநகர சென்னை மாநகராட்சி (Greater Chennai Corporation - GCC) | 47 | 2 | *4.26* |
| | **மொத்தம்** | **18,343** | **712** | ***3.88*** |

(ஆதாரம்: அந்தந்த முகமைகளின் தரவுத்தளம்)

ஒன்பது வெவ்வேறு அரசு முகமைகளில் பதிவு செய்யப்பட்ட 18,343 தனிப்பட்ட ஒப்பந்ததாரர்களில், 712 (3.88 விழுக்காடு) பேர் மட்டுமே DISHல் பதிவு பெற்றுள்ளது **அட்டவணை 2.2**ல் இருந்து தெளிவாகிறது.

இவ்வாறாக, DISHல் பதிவுச் செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதை தணிக்கை கண்டறிந்தது.

கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களின் பதிவு குறித்த குறிப்பிட்ட தணிக்கை வினவலுக்குப் பதிலளித்த DISH (அக்டோபர் 2022), அவர்களது மிகுந்த முயற்சிக்குப் பின்னரும், அரசு முகமைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், தங்களைப் பதிவு செய்துக் கொள்ளவும், கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களைப் பதிவு செய்யவும் முன்வரவில்லை என்று கூறியது. BOCW சட்டத்தின்[6] பிரிவுகள் 48, 49 மற்றும் 50ன் கீழ் தண்டனை நடவடிக்கை DISHஆல் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் பதில் ஏற்கக்கூடியதாக இல்லை. மேலும், BOCW சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர் நடவடிக்கைகள் இல்லாததை பதில் சுட்டிக்காட்டியது.

கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் மிகக் குறைந்த பதிவிற்கான காரணங்களை ஆய்வு செய்ததில், மத்திய அரசால் வழங்கப்பட்ட மாதிரி நலத்திட்டத்தின்படி (Model Welfare Scheme - MWS)[7] கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் பதிவு செயல்முறையை கள அளவில் எளிதாக்க, அதற்கான அதிகாரம்

[6] **பிரிவு 48**: கட்டுமானப் பணிகள் தொடங்குவது குறித்து அறிவிக்கத் தவறினால் அபராதம்; **பிரிவு 49**: தடைக்கான தண்டனை மற்றும் **பிரிவு 50**: பிற குற்றங்களுக்கு தண்டனை

[7] மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி, BOCW சட்டம் 1996ன் பிரிவு 60ன் கீழ், செயல்படுத்தும் இயந்திரத்தை வலுப்படுத்துவதற்கான MWS மற்றும் செயல் திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியது.

பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தணிக்கை கண்டறிந்தது. இருப்பினும், கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களை பதிவு செய்வதற்கு இரண்டு இணை இயக்குநர்களுக்கு (Joint Director - JD) மட்டுமே DISH அதிகாரங்களை வழங்கியிருந்தது. 15 மாவட்டங்களின் கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்கள் பதிவு செய்யும் பொறுப்பை சென்னை JDயும் 23 மாவட்டங்களின் பொறுப்பை மதுரை JDயும் வகித்திருந்தனர்.

இவ்வாறாக, கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் பதிவை பகிர்ந்தளிக்கத் தவறியதால், கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்கள் DISHல் பதிவு செய்வதில் கணிசமான குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதை தணிக்கை கண்டறிந்தது. இதனால், கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களின் செஸ் மதிப்பீட்டை கண்காணிக்கும் பொருட்டு TNCWWB உடனான திறம்பட்ட தரவுப்பகிர்வு தடைப்பட்டது. இது கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்கள் தொழிலாளர் செஸ் மதிப்பீடு மற்றும் செலுத்துதலில் வரி ஏய்ப்பிற்கு வழிவகுக்க கூடும்.

இதற்கு, DISHல் பதிவிற்கு முன்வராத வேலை அளிப்போர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 2017-22 ஆண்டுகளில், BOCW சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இல்லாமல் கட்டுமானப் பணிகளைச் செய்ததற்காக 195 விளக்கக் கேட்பு அறிக்கைகள் வழங்கப்பட்டதாகவும் வேலை அளிப்போர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக 272 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

## 2.3 கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வேலை அளிப்போர்களின் தரவுத்தளத்தை பராமரிக்காமை

மார்ச் 2022 நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள சுமார் 13,600 உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிறுவனங்கள் போன்றவை தொழிலாளர் செஸ் வசூலிப்பதில் ஈடுபட்டுள்ளன

(i) கட்டிட அனுமதி வழங்குவதற்காக மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள்) மற்றும் 12,913 கிராம ஊராட்சி அமைப்புகள் (388 வட்டாரங்கள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகள்).

(ii) மத்திய/மாநில அரசு முகமைகள்[8], மத்திய/மாநில பொதுத்துறைகள்/தன்னாட்சி அமைப்புகள்[9], அவர்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு.

செஸ் மதிப்பீடு, வசூல் மற்றும் செலுத்தங்களில் ஈடுபட்டுள்ள முகமைகளின் தொடர்பாக எந்தப் பதிவையோ/தரவுத்தளத்தையோ TNCWWB

[8] PWD, CPWD, நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், கல்பாக்கம் அணுமின் நிலையம் போன்றவை.

[9] TWAD, CMWSSB, TNHB, TNSCB, DRDAக்கள், TNPHC, NLC, எண்ணெய் நிறுவனங்கள், துறைமுக பொறுப்புக் கழகங்கள் (Port Trusts), AAI, CMRL, ரயில்வே, ராணுவ நிறுவனங்கள் போன்றவை.

பராமரிக்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. மேலும், **அத்தியாயம் IIIல்** விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளபடி, மதிப்பிடப்பட்ட மற்றும் வசூலிக்கப்பட்ட செஸ் முழுமையாக செலுத்தப்பட்டதா என்பதை ஒத்திசைவு செய்ய உதவும் கட்டாய படிவங்களை TNCWWBக்கு, செஸ் தொகை வசூலிக்க வேண்டிய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற முகமைகள் வழங்கவில்லை.

இவ்வாறாக, இந்த முகமைகளால் அனுமதிக்கப்பட்ட/மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களின் விவரங்கள் குறித்த காலமுறை அறிக்கைகள்/தரவுகள் மூலம் இவ்வமைப்புகளின் தொழிலாளர் செஸ் வசூல் மற்றும் செலுத்தம் செயல்முறையை கண்காணிக்கும் ஓர் அமைப்பு TNCWWBயிடம் இருக்கவில்லை.

உள்ளாட்சி அமைப்புகளால் தொழிலாளர் செஸ் வசூலிக்கப்பட்டு அது TNCWWBக்கு செலுத்தப்படுவதை உறுதி செய்ய ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்துமாறு தொழிலாளர் ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது (டிசம்பர் 2022) என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). வெவ்வேறு உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிகள் குறித்த தகவல்கள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்யாமல், அனைத்து நிலுவைத் தொகைகளையும் சரியான நேரத்தில் வசூலிப்பது சாத்தியமில்லை என்று தணிக்கை கருதுகிறது.

## 2.4 கட்டுமான செலவினத்தை மதிப்பிடுவதற்கான சீரான அமைப்பு இல்லாமை

TNMW சட்டத்தின் பிரிவு 8Aன் படி, ஒரு உள்ளாட்சி அமைப்பிடம் கட்டிட அனுமதிக்கு விண்ணப்பம் செய்யும் ஒவ்வொரு நபரும் மொத்த கட்டுமான செலவில் ஒரு விழுக்காட்டிற்கு மிகாமல் ஒரு தொகையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு செலுத்த வேண்டும். எனவே, கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட விலை மிக முக்கியமான ஒன்றாகும்.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற அரசு முகமைகளால் செயல்படுத்தப்படும் பணிகள் அவற்றின் சரியான மதிப்பீடுகளைக் கொண்டிருந்தாலும், தனிநபர்கள்/தனியார் நிறுவனங்களால் கட்டிட அனுமதிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் எந்தவித சீரான கட்டணங்களின் அடிப்படையிலும் இல்லாமல் பரவலாக வேறுபட்டுக் காணப்பட்டன என்பதை தணிக்கை கண்டறிந்தது. கட்டுமானத்தின் மதிப்பை கணக்கிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றியது கவனிக்கப்பட்டது. இந்த மதிப்பீடே அதனைத் தொடர்ந்து தொழிலாளர் செஸ் தொகையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது:

- முப்பத்திரண்டு உள்ளாட்சி அமைப்புகள் பதிவுபெற்ற நில அளவையாளர் நிர்ணயித்த விகிதத்தை ஏற்றுக்கொண்டன,
- மூன்று உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் சொந்த விகிதங்களை பின்பற்றின, மற்றும்

- பதினான்கு உள்ளாட்சி அமைப்புகள் பொதுப்பணித்துறையின் (PWD) தோராயமான செலவின மதிப்பீடுகளை ஏற்றுக்கொண்டன.
- 2017-22 ஆண்டுகளில், செஸ் மதிப்பீட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட கட்டிடச் செலவு ஒரு சதுர அடிக்கு ₹456 முதல் ₹2,786 வரையில் மாறுபட்டது.

அதே காலகட்டத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கான தோராயமான செலவினம், ஒரு சதுர அடிக்கு ₹916 முதல் ₹1,309 வரை இருந்ததாக தணிக்கை கண்டறிந்தது. 2017-22 ஆண்டுகளில் அவற்றின் சொந்த விலை விகிதங்களையோ அல்லது பதிவுபெற்ற நில அளவையாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையோ ஏற்றுக்கொண்ட உள்ளாட்சி அமைப்புகள் மீதான தணிக்கை பகுப்பாய்வு, கட்டுமானங்களின் மதிப்பிடப்பட்ட செலவினம் தொடர்பாக பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- மதிப்பிடப்பட்ட செலவினம், PWDன் தோராயமான செலவின மதிப்பீடுகளின் பாதிக்கும் குறைவாக 18 விழுக்காடு நேர்வுகளில் இருந்தது.
- PWDன் தோராயமான செலவின மதிப்பீடுகளின் நான்கில் மூன்று பங்கிற்கும் குறைவாக 34 விழுக்காடு நேர்வுகளில் இருந்தது, மற்றும்
- PWDன் தோராயமான செலவின மதிப்பீடுகளின் நான்கில் மூன்று பங்கிற்கும் அதிகமாக 48 விழுக்காடு நேர்வுகளில், இருந்தது.

கட்டுமானச் செலவின் குறைவான மதிப்பீடு, இறுதியில் செஸ் தொகையைக் குறைத்து மதிப்பிட நேர்வதற்கு காரணமாக அமையும்.

நிறைவுக் கூட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகை PWDன் கட்டண அட்டவணையை விட குறைவாக இருத்தல் கூடாது என்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் என்று அரசின் ACS கூறினார். மேலும், இந்த விவகாரம் ஆராயப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

## 2.5 ஆரோவில் நிறுவனத்தின் மீது செஸ் விதிக்காமை

விழுப்புரம் மாவட்டத்தின் ஆரோவில் நிறுவனத்தில், கட்டுமானப் பணிகள் அதன் உள்ளக அலகுகளால் மேற்கொள்ளப்பட்டதால், TNCWWBக்கு செலுத்தப்பட வேண்டிய தொழிலாளர் செஸ்ஸிலிருந்து விலக்கு பெற, ஆரோவில் நிறுவனம், மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தைக் கோரியது (ஜுன் 2020). இந்த நேர்வுக்கான தகுதிகள் குறித்து தமிழ்நாடு அரசை தனது கருத்துக்களை வழங்க மத்திய அரசு கோரியது (பிப்ரவரி 2021). இதற்கு, எந்த ஒரு வேலை அளிப்போருக்கும் விலக்கு அளிக்க மாநிலச் சட்டத்தில் வழிவகை இல்லை என்றும், அதனால் செஸ் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க இயலாது என்றும் TNCWWB பதிலளித்தது (ஜுலை 2021).

2018-21 ஆண்டுகளில், ஆரோவில் நிறுவனம், ₹116 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டியிருப்பதை தணிக்கை கவனித்தது. இருப்பினும், மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிகளுக்கான தொழிலாளர் செஸ்ஸான ₹1.16 கோடியை நிறுவனம் செலுத்தவில்லை என்று தணிக்கை கண்டது. இருந்த போதிலும், TNCWWB எந்த தண்டனை நடவடிக்கையையும் தொடங்கவில்லை.

ஆரோவில் நிறுவனம், TNCWWBக்கு செலுத்த வேண்டிய செஸ் தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது (நவம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2022) என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). நிலுவைத் தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தும், இந்நிறுவனம் அதற்கு இணங்கவில்லை என்று தணிக்கை கண்டது. ஆனால், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை (மார்ச் 2023).

## 2.6 முடிவுரை

TNCWWB செஸ்ஸை மதிப்பீடு செய்யும், வசூலிக்கும் மற்றும் செலுத்தும் முகமைகளின் தரவுத்தளத்தை பராமரிக்கவில்லையாதலால், செஸ்ஸின் அளவையும் மற்றும் சரியான நேரத்தில் அது மதிப்பிடப்படுவதையும் கண்டறிய ஒரு அமைப்பு இல்லாமல் போனது. DISHல் கட்டுமான நிறுவனங்கள்/வேலை அளிப்போர்களை பதிவு செய்வதில் குறிப்பிடத்தக்க குறைபாட்டை தணிக்கை கண்டறிந்தது. இது தொழிலாளர் செஸ் மதிப்பீட்டை சரிப்பார்ப்பதற்க்காக TNCWWB உடன் செய்யப்படும் தரவு பகிர்வுக்கான நோக்கத்தை பெரிதும் பாதித்தது. கட்டிட அனுமதிக்கு விண்ணப்பிப்பவர்களால் கட்டுமானச் செலவினம் கணிசமாகக் குறைத்து மதிப்பிடப்படுவதை தணிக்கை கண்டறிந்தது. மேலும், கட்டிட அனுமதிக்கு ஒப்புதல் அளிக்கும்போது, தொழிலாளர் செஸ் வசூலிக்க வேண்டிய உள்ளாட்சி அமைப்புகள், கட்டுமானத்தின் மதிப்பிடப்பட்ட தொகையை சரிபார்த்து உறுதி செய்வதற்கான எந்த ஒரு செயல்முறையையும் கொண்டிருக்கவில்லை.

## 2.7 பரிந்துரைகள்

- தொழில் வரி மதிப்பீடு மற்றும் வசூலினை பரந்த அளவில் மேற்கொள்ள (broadbase assessment and collection) கட்டுமான நிறுவனங்களின் 100 விழுக்காடு பதிவினை உறுதிசெய்யும் பொருட்டு, பதிவு செயல்முறையை DISH ஒருமுகப்படுத்துவதை (centralise) அரசு உறுதி செய்ய வேண்டும். அனைத்து செஸ் செலுத்தும் நிறுவனங்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளத்தை, TNCWWB பராமரிப்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதி அளிக்கப்படும் கட்டிடங்களின் கட்டுமான செலவை மதிப்பிடுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு உருவாக்க வேண்டு .

மேலும், இவை உள்ளாட்சி அமைப்புகளால் பின்பற்றப்படுவதை TNCWWB உறுதி செய்ய வேண்டும்.

- ஒப்பந்ததாரர் DISH உடன் பதிவு செய்யப்படாவிட்டால், அவர்களுக்கு எந்த ஒரு வேலையும் வழங்கப்பட/அளிக்கப்பட இயலாது என்பதை கட்டாயமாக்க அரசு TNBOCW விதிகள், 2006ஐ திருத்தியமைக்க வேண்டும்.

# அத்தியாயம் III

# தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம்

# அத்தியாயம் III

# தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம்

**தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தம் ஆகியவற்றைக் கண்காணிக்க எந்த ஒரு அமைப்பினையும் TNCWWB கொண்டிருக்கவில்லை. அமைப்பில் உள்ள குறைபாடுகளும் செஸ் தொகையின் வசூல் மற்றும் செலுத்தம் இடையேயான ஒத்திசைவு இல்லாமையும் வசூலிக்கப்பட்ட தொகையின் தவறான பயன்பாடு, குறைவான செலுத்தம், தாமதமான செலுத்தம் மற்றும் தவறான செலுத்தம் ஆகியவற்றிற்கு வழிவகுத்தன. சட்டம்/விதிகளை மீறி, வசூலிக்கப்பட்ட தொழிலாளர் வரித் தொகையை தங்கள் சொந்த செலவிற்காக உள்ளாட்சி அமைப்புகள் தக்கவைத்துக் கொண்டன.**

## 3.1 வசூலித்தல் மற்றும் செலுத்துதலுக்கான முறை

TNMW விதிகளின் விதி 20A(1) மற்றும் (2)ன் படி, கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பதாரரிடம் இருந்து தொழிலாளர் வரித் தொகையை வசூலிப்பதற்கு, கட்டிட அனுமதிகளை வழங்கும் உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பாகும். உள்ளாட்சி அமைப்புகளின் கட்டிட அனுமதி தேவைப்படாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பிற முகமைகள், தொழிலாளர் வரித் தொகையைக் கணக்கிட்டு, TNCWWBக்கு அதனைச் செலுத்த வேண்டும்.

தணிக்கை காலத்தில், உள்ளாட்சி அமைப்புகள் தொழிலாளர் வரி வசூலிப்பதற்கும் பணம் செலுத்துவதற்கும் மூன்று வெவ்வேறு செயல்முறைகளைப் பின்பற்றின.

- தொழிலாளர் வரித் தொகை, கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பதாரரிடமிருந்து உள்ளாட்சி அமைப்பால் DD வடிவில் வசூலிக்கப்பட்டு TNCWWBக்கு அனுப்பப்படுகிறது.
- கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பதாரர், தொழிலாளர் வரியின் மதிப்பிடப்பட்ட தொகையை TNCWWBன் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறார்.
- தொழிலாளர் வரித் தொகை உள்ளாட்சி அமைப்பால் வசூலிக்கப்பட்டு, அதன் சொந்த கணக்கில் வரவு வைக்கப்பட்டு, காலமுறையில் TNCWWBக்கு மொத்த தொகையாக அனுப்பப்படுகிறது.

கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் போன்ற அரசுத் துறைகள், ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கான பட்டியல்களில் இருந்து தொழிலாளர் வரித் தொகையை அரசு சார்பற்ற பிடித்தங்களாகக் (non-government deductions) கழித்து கருவூல அமைப்பு மூலம் TNCWWBன் வங்கிக் கணக்கில் செலுத்துகின்றன.

செஸ் மதிப்பீடு செய்யும்/வசூலிக்கும்/பணம் செலுத்தும் முகமைகள், வசூல் விவரங்களை TNCWWBக்கு படிவம் III/IVல் (**இணைப்பு 3.1**) வழங்க வேண்டும். பணியின் மதிப்பிடப்பட்ட தொகை, வசூலிக்கப்பட்ட வரி, செஸ் மதிப்பீடு செய்த/வசூலித்த/செலுத்திய முகமையின் பெயர், முதலிய விவரங்களை இந்த படிவங்கள் கொண்டிருக்கும். மதிப்பீடு மற்றும் வசூல் செய்யப்பட்ட தொகையின் சரித்தன்மையை TNCWWB சரிபார்ப்பதற்கும், TNCWWBன் வங்கிக் கணக்கில் உள்ளபடியாகப் பெறப்பட்ட பணவரவுடன் ஒத்திசைவு செய்வதற்கும் படிவம் III மற்றும் IV உதவும். ECS, TNCWWB வங்கிக் கிளையில் ரொக்கமாக செலுத்தம், NEFT, RTGS மற்றும் IMPS போன்ற பலதரப்பட்ட வழிகள் மூலம் தொழிலாளர் வரி நேரடியாகச் செலுத்தப்பட்ட நேர்வுகளில், TNCWWBன் வங்கியால் வழங்கப்பட்ட அறிக்கையானது, செஸ் மதிப்பீட்டாளர்/வசூலிப்பாளர்/செலுத்துனர் பற்றிய தகவல்களை கொண்டிருக்கவில்லை. மதிப்பிடப்பட்ட வரியை, வங்கியில் பெறப்பட்ட செஸ் தொகயுடன் ஒத்திசைவு செய்ய வேறு எந்த மாற்று அமைப்பும் இல்லை. எனவே, செஸ் வரவுகளை வங்கியுடன் சரிபார்க்க படிவம் III/IV சமர்ப்பிக்கப்படுதல் அவசியமாகிறது, இப்படிவங்கள் இல்லாமல் TNCWWBஆல் மதிப்பீட்டாளர்/வசூலிப்பாளர்/செலுத்துபவரை அடையாளம் காண இயலாது.

மேலும், உள்ளாட்சி அமைப்புகள்/செஸ் வசூலிக்கும் முகமைகளிடம் இருந்து படிவம் III/IV பெறப்படும் நேர்வுகளில், செஸ் செலுத்த பரிவர்த்தனைகளின் அதிக எண்ணிக்கையின் (ஒரு நாளைக்கு சுமார் 400 DDகள் மற்றும் 1,400 ECS பரிமாற்றங்கள்) காரணமாக, அவற்றை ஒத்திசைவு செய்ய போதுமான பணியாளர்கள் இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. படிவம் III/IV மூலம் மேற்கொள்ளப்படும் இந்த ஒத்திசைவு கணினிமயமாக்கப்பட வேண்டும்.

TNCWWB வங்கியில் வசூலிக்கப்படும் செஸ் தொகைக்கான முறையான ஒத்திசைவு செயல்முறை உள்ளதா என்று தணிக்கையில் சரிபார்க்கப்பட்டது. இதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 3.2 தொழிலாளர் வரி வசூல் மற்றும் செலுத்தும் முறையில் உள்ள குறைபாடுகள்

முந்தைய பத்தியில் ஏற்கனவே விவரிக்கப்பட்டபடி, கட்டிட அனுமதி ஒப்புதலுக்காக, வசூலிக்கப்பட்ட செஸ் உடன் படிவம் III மற்றும் பிற கட்டுமான பணிகளுக்காக, வசூலிக்கப்பட்ட செஸ் உடன் படிவம் IV ஆகியவற்றை இணைத்து செஸ் செலுத்தும் முகமைகள் சமர்ப்பிக்க வேண்டும். களத் தணிக்கையின் போது, மாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட 59 உள்ளாட்சி அமைப்புகளில்[10], செஸ் தொகை செலுத்தத்திற்கான ஒப்புதல் சீட்டினை TNCWWBலிருந்து பெறும் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளால் இணைக்கப்பட்ட படிவம் III/IVன் விவரங்கள் **அட்டவணை 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

[10] கிராம ஊராட்சிகள் தவிர்த்து.

**அட்டவணை 3.1: தெரிவு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் : படிவம் III/படிவம் IV வழங்குதல் மற்றும் TNCWWBன் ஒப்புகைப் பெறுதல்**

| விவரங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த எண்ணிக்கை | வழங்கப்பட்டவை | வழங்கப்படாதவை | |
|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | விழுக்காடு |
| படிவம் III வழங்குதல் | 59 | 4 | 55 | *93* |
| படிவம் IV வழங்குதல் | 59 | 2 | 57 | *97* |

(ஆதாரம்: உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட விவரங்கள்)

தெரிவுசெய்யப்பட்ட 59 உள்ளாட்சி அமைப்புகளில், படிவம் III நான்கு உள்ளாட்சி அமைப்புகளாலும், படிவம் IV இரண்டு உள்ளாட்சி அமைப்புகளாலும் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனால், ஒத்திசைவு செயல்முறை முழுமையடையாமல் இருந்தது. TNCWWB, தனது அனைத்து வரவுகளையும் ஒத்திசைவு செய்யாமல், வங்கியில் பெறப்பட்ட தொகையை மட்டுமே அதன் வருவாயாகக் கணக்கிடுகிறது என்பதை இது குறிக்கிறது.

மேலும், படிவம் III மற்றும் படிவம் IV ஆகியவற்றில் DD எண் மற்றும் தேதி, கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட செலவு, வசூலிக்கப்பட்ட தொழிலாளர் வரி போன்ற விவரங்கள் உள்ளன. செஸ் செலுத்தும் அலுவலகங்களுக்கும் TNCWWBக்கும் இடையே உள்ள ஒரே தொடர்பு முறை படிவம் III மற்றும் IV ஆகும். படிவம் III மற்றும் IVல் பின்வரும் குறைபாடுகளை தணிக்கை கண்டறிந்தது:

(i) ஒவ்வொரு வேலை/கட்டிட அனுமதி ஒப்புதலுக்கும் தனித்தனியான படிவம் III மற்றும் IV இணைக்கப்பட வேண்டும் என்றவாறு இப்படிவங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாதமும் உள்ளாட்சி அமைப்புகள் பல பணிகளை மேற்கொள்வதால் இது சாத்தியமற்ற ஒன்றாகும்.

(ii) செஸ் செலுத்தும் அலுவலகங்களால் DD மற்றும் ECS மூலம் செஸ் செலுத்தப்படுகிறது. படிவம் III மற்றும் IVல், ECS மூலம் செஸ் பணம் செலுத்துவதைக் குறிப்பிடுவதற்கான எந்த ஒரு வழிவகையும் இல்லை.

(iii) படிவம் III மற்றும் IVல், வசூல் தொகை பெற்ற தேதி மற்றும் வேலை தொடங்கப்பட்ட தேதி ஆகியவற்றைக் குறிப்பிடுவதற்கு வழி எதுவும் இல்லை. இவ்விவரங்கள் இல்லாத காரணத்தால், பணம் செலுத்தப்படாதது/குறைவான பணம் செலுத்தப்பட்டது அல்லது பணம் செலுத்தலில் ஏதேனும் தாமதம் இருந்ததா என்பதை TNCWWB ஆல் கண்டறிய முடியவில்லை.

**பத்திகள் 3.3** முதல் **3.8** வரை விவரிக்கப்பட்டபடி, உள்ளாட்சி அமைப்புகளின் தொழிலாளர் செஸ் வசூலை, TNCWWBன் உண்மையான வரவுடன் ஒத்திசைவு மேற்கொள்ள செயல்முறை

இல்லாததால், பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டதாக தணிக்கை கண்டறிந்தது.

இணையவழியில் செஸ் வசூலிக்க ஒரு இணைய முகப்பு செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் முடிவுகள் எதிர்நோக்கப்படுகின்றன (மார்ச் 2023).

## 3.3 உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட செஸ் TNCWWB பதிவுகளில் பிரதிபலிக்கபடவில்லை

உள்ளாட்சி அமைப்புகள்/துறைகளின் மூலமாக செஸ் பணம் TNCWWBஆல் சரியாகப் பெறப்பட்டு, ஒத்திசைவு செய்யப்பட்டதா என்பதைச் சரிப்பார்க்க, 39 மாநில/மத்திய அரசுத் துறைகள்/பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் 78 தெரிவுசெய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் வருடாந்திர செஸ் பணம் செலுத்தப்பட்ட விவரங்கள் (DD/ECS மூலம்) பற்றிய தகவல்களை தணிக்கை சேகரித்தது. செஸ் வசூலிக்கும் அலுவலகங்களால் செலுத்தப்பட்ட மற்றும் TNCWWB மூலம் உள்ளபடி பெறப்பட்ட செஸ் தொகை ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் **இணைப்பு 3.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட 117 முகமைகளுள், ஒரு முகமையினால்[11] செலுத்தப்பட்ட பணம் மட்டுமே TNCWWBன் வரவுகளுடன் பொருந்தியதாகத் தணிக்கை கண்டறிந்தது. 83 நேர்வுகளில், TNCWWBஆல் பெறப்பட்ட தொகை குறைவாகவும் மற்றும் 33 நேர்வுகளில், TNCWWBஆல் பெறப்பட்டதாக கணக்கில் ஏற்கப்பட்ட தொகை இந்த முகமைகளால் செலுத்தப்பட்ட உண்மையான தொகையை விட அதிகமாகவும் இருந்தன. இவை **அட்டவணை 3.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: உள்ளாட்சி அமைப்புகள்/துறைகள் மூலம் செலுத்தப்பட்ட மற்றும் TNCWWB மூலம் பெறப்பட்ட செஸ் தொகையின் ஒப்பீடு**

**(₹ கோடியில்)**

| வ. எண் | துறைகள் / உள்ளாட்சி அமைப்புகள் | துறைகளின்/ உள்ளாட்சி அமைப்புகளின் பதிவுகளின்படி செலுத்தப்பட்ட செஸ் | TNCWWB கணக்குகளின்படி பெறப்பட்ட செஸ் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| **TNCWWB வரவுகளில் பற்றாக்குறை** | | | | |
| 1 | துறைகள் (25 எண்ணிக்கைகள்) | 126.74 | 41.73 | (-) 85.01 |
| 2 | உள்ளாட்சி அமைப்புகள் (58 எண்ணிக்கைகள்) | 36.35 | 11.68 | (-) 24.67 |
| **மொத்த பற்றாக்குறை (83)** | | | | **(-) 109.68** |

[11] தமிழ்நாடு கடல்சார் வாரியம், சென்னை.

| வ. எ ண் | துறைகள் / உள்ளாட்சி அமைப்புகள் | துறைகளின்/ உள்ளாட்சி அமைப்புகளின் பதிவுகளின்படி செலுத்தப்பட்ட செஸ் | TNCWWB கணக்குகளின்படி பெறப்பட்ட செஸ் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| TNCWWB கணக்கில் அதிக வரவினம் | | | | |
| 1 | துறைகள் (13 எண்ணிக்கைகள்) | 50.14 | 130.37 | 80.22 |
| 2 | உள்ளாட்சி அமைப்புகள் (20 எண்ணிக்கைகள்) | 34.15 | 69.78 | 35.62 |
| மிகுதியின் மொத்தம் (33) | | | | 115.84 |

(ஆதாரம்: உள்ளாட்சி அமைப்புகள்/துறைகள்/TNCWWBஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

மேலே காட்டப்பட்டுள்ளபடி, உள்ளாட்சி அமைப்புகள்/துறைகளால் காட்டப்படும் தொகை மற்றும் TNCWWB கணக்குகளில் உள்ள உண்மையான வரவுகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தன. TNCWWB மற்றும் செஸ் செலுத்தும் அலுவலகங்களுக்கு இடையே ஒத்திசைவு செய்யப்படாததே இதற்குக் காரணமாகும்.

**DDகள்/ECS மூலம் பணம் செலுத்தம் குறித்த அறிக்கை:** காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 1,017 DD/ECS மூலம் செலுத்தப்பட்ட ₹1.76 கோடி மதிப்புள்ள செஸ் TNCWWBன் வரவுகளோடு சரிப்பார்க்கப்பட்டபோது, ஆறு உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட ₹12.04 இலட்சம் மதிப்புள்ள 79 DDகள்/ECS கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. இவை **இணைப்பு 3.3ல்** பட்டியலிடப்பட்டுள்ளன.

பணம் செலுத்தல் விவரங்களை வங்கி அறிக்கை மற்றும் பணம் செலுத்திய விவரங்களையும் ECS தொடர்பான தகவல்களையும் கொண்ட கடிதம் மூலம் சரிபார்த்ததாக TNCWWB பதிலளித்தது (டிசம்பர் 2022). மேலும், பணம் செலுத்திய தேதி, தனிப்பட்ட பரிவர்த்தனை குறிப்பு எண் (unique reference no.), தொகை, படிவம் III மற்றும் IV போன்ற விவரங்களைக் கொண்ட முகப்புக் கடிதங்களை உள்ளாட்சி அமைப்புகள்/துறைகள் தொழிலாளர் செஸ் செலுத்தும் போது வழங்காததால், மேலே கூறப்பட்ட வேறுபாடுகளை ஒத்திசைவு செய்ய முடியவில்லை என்றும் TNCWWB கூறியது.

மேலும், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், அவர்களால் செலுத்தப்பட்ட செஸ் தொகையிலுள்ள பற்றாக்குறையை ஈடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக (ஜனவரி 2023) தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இருப்பினும், இந்த சிக்கல், குறைவான பணம் செலுத்துதல் பற்றியது மட்டுமல்லாமல், அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்கு எதிராக அவர்களால் செலுத்தப்படும் தொகை சரியாக உள்ளீடு செய்யப்படுவதற்கான அமைப்பு இல்லாததாலும் ஏற்பட்டதாக தணிக்கையில் கண்டறியப்பட்டது.

இவ்வாறு, படிவம் III மற்றும் IV (**இணைப்பு 3.1**) சமர்ப்பிக்கப்படுவதை கட்டாயமாக்காததன் காரணத்தால், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற கட்டுமான நிறுவனங்கள் வசூலித்த தொழிலாளர் செஸ் குறித்த

வரவினை கணக்கிடுவதற்கான ஒரு அமைப்பு முற்றிலுமாக இல்லாமல் போனதை தணிக்கை கண்டறிந்தது.

## 3.4 உள்ளாட்சி அமைப்புகளால் தற்காலிகமாக தவறாகப் பயன்படுத்தப்பட்ட தொழிலாளர் செஸ் - ₹221.81 கோடி

தமிழ்நாட்டின் தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் உள்ள 124 உள்ளாட்சி அமைப்புகளின் செஸ் வசூலை ஆய்வு செய்த தணிக்கை, 99 உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்ட ₹221.81 கோடி **(இணைப்பு 3.4)** செலுத்தப்படாமல் நிலுவையில் இருப்பதைக் கண்டறிந்தது; இதில், பெருநகர சென்னை மாநகராட்சி (Greater Chennai Corporation - GCC) மட்டும் ₹207.08 கோடி செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளது. இது குறித்த விவரங்கள் **விளக்கப்படம் 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.1: 31-03-2022 நிலவரப்படி நிலுவையில் உள்ள தொழிலாளர் செஸ் செலுத்தம் (₹ கோடியில்)**




(ஆதாரம்: உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட விவரங்கள்)

TNCWWBக்கு ஆதரவாக DD மூலம் செஸ் தொகையை வசூலிக்க வேண்டும் என்ற நடைமுறை விதியை மீறி, GCC, கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து செஸ் தொகையை ரொக்கமாக/DD/ECS மூலமாக தன் பெயரில் வசூல் செய்து, அதன் கணக்கிற்குள்ளாகவே (குறியீடு எண். 350200401) வைப்புத்தொகை தலைப்பில் வைத்துள்ளதே, GCCன் பெரும் நிலுவைக்கான காரணங்களாக அதன் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. GCCஆல் தக்கவைக்கப்பட்ட பணம், ஏப்ரல் 2017ல் ₹18,051 ஆக இருந்து மார்ச் 2022ன் இறுதியில், ₹207.08 கோடியாக அதிகரித்துள்ளது. 2017-22 ஆண்டுகளில், கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களிடமிருந்து GCC ₹206.33 கோடியை செஸ்ஸாகப் பெற்ற போதிலும், TNCWWBன் கணக்குகளில் ₹8.57 இலட்சத்தை மட்டுமே செலுத்தியது. உள்ளாட்சி வாரியான வரவுகளை மதிப்பிடுவதற்கும், மேற்கொண்டு உள்ளாட்சி

அமைப்புகளுடன் அதைத் தொடருவதற்கும் ஒரு அமைப்பு TNCWWBல் இல்லாததால் TNMW விதிகளின் மீறல் சரிபார்க்கப்படாமல் போனது.

உள்ளாட்சி அமைப்புகள்/பிற முகமைகள் மூலம் செலுத்தப்படும் செஸ் மூன்று காரணங்களால் TNCWWBஆல் கண்காணிக்கப்படவில்லை மற்றும் ஒத்திசைவு செய்யப்படவில்லை. அவை (i) TNCWWBல் செஸ் வசூலிக்கும்/செலுத்தும் முகமைகளின் தரவுத்தளம் இல்லை; (ii) உள்ளபடி நிலுவையிலுள்ள செஸ் தொகை, வசூலிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை குறித்து TNCWWB தெரிந்திருக்கவில்லை, (iii) வசூலிக்கப்படும் செஸ் தொகையை மதிப்பீடு செய்வதற்கு எந்த அதிகாரியும் நியமிக்கப்படவில்லை.

நிலுவையிலுள்ள தொகையை TNCWWBன் கணக்கில் செலுததுமாறு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக (ஜனவரி 2023) தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

TNMW சட்டத்தின் 30வது பிரிவின்படி, இந்தச் சட்டத்தை அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதியினை மீறும் எந்தவொரு நபரும் குற்றம் புரிந்தவராக கண்டறியப்பட்டால், அவர் மீது ₹500 வரை அபராதம் விதிக்கப்படும். மேலும் தொடர்ந்து மீறினால், அத்தகைய மீறல் தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு நாளைக்கு ₹100 வரை கூடுதல் அபராதம் விதிக்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி அபராதம் விதிக்கும் அதிகாரத்தினை TNCWWB கொண்டிருந்தாலும், இன்றுவரை, செஸ் தொகையை அதற்கான விதிப்படி செலுத்தத் தவறிய அலுவலகங்களிடமிருந்து அபராதமாக எந்தத் தொகையும் TNCWWBஆல் வசூலிக்கப்படவில்லை.

செஸ் வசூல் செய்யப்படுதல்/பணம் செலுத்தப்படுதலைக் கண்காணிக்க இணைய செஸ் வசூல் தொகுதி உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). மேலும், உள்ளாட்சி அமைப்புகளால் உரிய காலத்தில் பணம் வசூல் செய்யப்பட்டு செலுத்தப்படுவதை உறுதிசெய்ய ஆய்வாளர்களுக்கு அறிவிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது (டிசம்பர் 2022). தொழிலாளர் ஆணையரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது (மார்ச் 2023).

## 3.5 அரசுக் கணக்கில் செஸ் செலுத்துதல் – ₹22.67 கோடி

TNMW விதி 20A(1) மற்றும் விதி 20A(2)ன் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை, TNCWWBன் உடலுழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதிக்கு ஆதரவாக வரையப்பட்டு, சென்னையில் செலுத்தப்படக்கூடிய DD மூலமாகவோ, அல்லது ECS மூலம் TNCWWBன் வங்கிக் கணக்கிலோ செலுத்தப்படலாம். இருப்பினும், காஞ்சிபுரம் தொகுதியில், கட்டிட அனுமதி ஒப்புதலுக்காகவும் மற்றும் அவர்களின் சொந்த கட்டுமானப் பணிகளுக்காகவும், வசூலிக்கப்பட்ட தொழிலாளர் செஸ் தொழிலாளர் துறையின் கீழ் உள்ள 'உணவு தருவிப்பு' தலைப்புடன் தொடர்புடைய அரசுக் கணக்குத் தலைப்பு–0230-00-106-AA-0002–ல்

தவறாக செலுத்தப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. **இணைப்பு 3.5ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 16 மாவட்டங்களில், 2017-22 ஆண்டுகளில் தொழிலாளர் செஸ் அரசாங்கக் கணக்கில் செலுத்தப்பட்டதும் கண்டறியப்பட்டது.

தொழிலாளர் செஸ்ஸை அரசுக் கணக்கில் செலுத்தப்படுவது தொடர்பாக தொழிலாளர் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்திற்குத நவம்பர் 2017ல் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த தவறான செலுத்துதல்கள் ஜனவரி 2022 வரை தொடர்ந்தது.

அரசுக் கணக்கில் தவறாக செலுத்தப்பட்ட செஸ் தொகையை மதிப்பீடு செய்து திரும்பப் பெற தொழிலாளர் ஆணையருடன் ஒருங்கிணைந்து TNCWWB செயல்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இந்தப் பிரச்சினைக்கு நிதித் துறையுடன் கூடிய ஒருங்கிணைப்பும் தேவைப்படுவதை தணிக்கை கண்டறிந்தது.

## 3.6 குறைவாக வசூல் செய்யப்பட்ட தொழிலாளர் செஸ் – ₹61.78 இலட்சம்

TNMW சட்டம், 1982ன் பிரிவு 8Aன் கீழ், டிசம்பர் 2013ல், தமிழ்நாடு அரசு தொழிலாளர் செஸ் விகிதத்தை கட்டுமானத்தின் மதிப்பிடப்பட்ட மதிப்பில் 0.3 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாக உயர்த்தியது.

உள்ளாட்சி அமைப்புகள், தாங்கள் கட்டிட அனுமதி பெற இசைவளித்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு விழுக்காடு என்ற விகிதத்தில் தொழிலாளர் வரியை மதிப்பீடு செய்து வசூலித்திருக்க வேண்டும். கட்டிடம், சாலை மற்றும் பிற கட்டுமானங்களை மேற்கொண்ட மாநில மற்றும் மத்திய அரசு முகமைகள், தொழிலாளர் செஸ் தொகையாக, பணியின் மதிப்பில் ஒரு விழுக்காட்டினை ஒப்பந்ததாரரின் விலைப் பட்டியலில் இருந்து கழித்திருக்க வேண்டும். இந்த செஸ் வசூலிக்கும் முகமைகள் அவர்கள் வசூலித்த செஸ் தொகையை TNCWWBன் வங்கிக் கணக்கில் செலுத்தியிருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், அரசு துறைகள் மற்றும் பிற முகமைகளின் தொழிலாளர் செஸ் வசூலை தணிக்கை சரிபார்த்து பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- 2017-22 ஆண்டுகளில் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட 61 கட்டுமானப் பணிகளுக்கான தொழிலாளர் வரியை, தெரிவு செய்யப்பட்ட 124 உள்ளாட்சி அமைப்புகள், எட்டு கிராம ஊராட்சிகள் (VPக்கள்), ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்), ஆறு பேரூராட்சிகள், ஒரு நகராட்சி மற்றும் ஒரு மாநகராட்சி ஆகியவை, வசூலிக்கப்பட வேண்டிய ஒரு விழுக்காட்டிற்குப் பதிலாக 0.3 விழுக்காடாக வசூலித்தன. குறைவான வசூல் ₹18.95 இலட்சமாக இருந்தது (**இணைப்பு 3.6**).
- செஸ் தொகையை மதிப்பிட்டு கழிக்கக்கூடிய பதினைந்து செஸ் செலுத்தும் முகமைகள் (அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் (PSUக்கள்) மற்றும் ஒப்பந்ததாரர்கள்),

2017-22 ஆண்டுகளில் 106 நேர்வுகளில் ஒரு விழுக்காட்டிற்குப் பதிலாக 0.3 விழுக்காடு என்ற விகிதத்தில் தொழிலாளர் செஸ்ஸை கழித்திருந்தது. இதனால் வசூலிக்கப்பட்ட தொகை ₹42.83 இலட்சம் அளவிற்கு குறைவாக இருந்தது (**இணைப்பு 3.6**).

உள்ளாட்சி அமைப்புகளால் மதிப்பீடு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்ட செஸ் தொகையின் சரித்தன்மையை ஆய்வு செய்ய எவ்வித அமைப்பும் கொண்டிராததால், அவற்றால் செலுத்தப்பட்ட தொகையை TNCWWB அப்படியே ஏற்றுக் கொண்டதாக தணிக்கை கண்டறிந்தது. இதேபோல், ஒப்பந்ததாரரின் விலைப் பட்டியல்களில் இருந்து தொழிலாளர் செஸ் கழிக்கப் பொறுப்பான அரசு முகமைகள், TNCWWB செலுத்திய செஸ் தொகையினை சரிபார்க்க, அவர்கள் மேற்கொண்ட கட்டுமானப் பணிகளின் மதிப்பை வழங்கவில்லை.

இதன் விளைவாக, சோதனை-தணிக்கை செய்யப்பட்ட அலகுகள் சிலவற்றில், தொழிலாளர் வரியின் குறைவான மதிப்பீட்டினால் ₹61.78 இலட்சம் குறைவாக வசூலிக்கப்பட்டது.

நிலுவையிலுள்ள செஸ் தொகையை TNCWWBன் கணக்கில் செலுத்தும்படி அனைத்து முகமைகளுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாக (நவம்பர் 2022 மற்றும் ஜனவரி 2023) தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இருப்பினும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் செஸ் செலுத்தும் முகமைகள் மூலம் வசூலிக்கப்பட்டு, செலுத்தப்பட்ட தொகையின் சரித்தன்மையை ஆய்வு செய்ய எந்த ஒரு வழிமுறையையும் இன்னும் TNCWWB மேற்கொள்ளவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 3.7 தொழிலாளர் வரியை தவறாகப் பயன்படுத்துதல்

கட்டிட அனுமதி ஒப்புதலுக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரர், தொழிலாளர் செஸ் கூறுகளை, நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் செலுத்த வேண்டும். ரொக்கமாகச் செலுத்த விரும்புவோர், TNCWWB தனது கணக்கைப் பராமரிக்கும் மூல வங்கியின் (Nodal bank) ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் அதனைச் செலுத்தலாம். விண்ணப்பதாரர் மதிப்பிடப்பட்ட தொழிலாளர் செஸ் தொகையை வங்கிக் கிளையில் செலுத்துச்சீட்டு (challan) மூலம் அதன் நகலோடு கூட (in duplicate) செலுத்துகிறார். வங்கி, செலுத்தப்பட்ட பணத்தைப் பெற்று கணக்கிட்ட பிறகு, பிரதான செலுத்துச்சீட்டை (வங்கியாளர்களின் நகல்) தக்கவைத்துக் கொண்டு, பணம் அனுப்புபவருக்கு செலுத்துச்சீட்டின் நகல் பகுதியை (counterfoil) வழங்குகிறது. செலுத்துச்சீட்டின் நகல் பகுதியை வழங்குவதன் மூலம், விண்ணப்பதாரர், கட்டிட அனுமதி பெறுவதற்கான தேவையின் ஒரு பகுதியான, தொழிலாளர் வரி கணக்கில் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்துகிறார். தொழிலாளர் செஸ் செலுத்தியதற்கான சான்றாக, செலுத்துச்சீட்டின் நகல் பகுதியை உள்ளாட்சி அமைப்பு தக்க வைத்துக் கொள்கிறது. TNCWWB, அதன் மூல வங்கியிடமிருந்து, அதன் கணக்கில் செலுத்தப்பட்ட செஸ் விவரங்கள் அடங்கிய அறிக்கையைப் பெறுகிறது. இருப்பினும், இந்த

அறிக்கையானது, எந்த உள்ளாட்சி அமைப்பிலிருந்து தொகை பெறப்பட்டது என்ற விவரங்களைக் காட்டவில்லை. எனவே, எந்த உள்ளாட்சி அமைப்பிலிருந்து செஸ் பெறப்பட்டது என்பதை TNCWWBஆல் அறிந்துகொள்ள இயலவில்லை. உள்ளாட்சி அமைப்புகளால் படிவம் III சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, TNCWWBஆல் அதன் வங்கிக் கணக்கில் பெறப்பட்ட செஸ் தொகையை ஒத்திசைவு செய்ய முடியாது. இவ்வாறாக, TNCWWBஆல் அதன் கணக்குகளுக்கு அனுப்பப்பட்ட தொழிலாளர் செஸ் தொகையின் சரித்தன்மையை ஆய்வு செய்யவோ அல்லது மறு ஒத்திசைவு செய்யவோ இயலவில்லை.

இந்த பரிவர்த்தனைகளில் உள்ள இடரைக் கருத்தில் கொண்டு, தணிக்கை, TNCWWB மற்றும் அதன் வங்கியின் உதவியுடன், வங்கியாளர்களின் செலுத்துச்சீட்டுகளின் நகல்களைப் பெற்று, TNCWWBன் கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகக் கூறப்படும் தொகையைக் கண்டறிய முயற்சித்தது. ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2022 வரை காஞ்சிபுரம் மாநகராட்சியின் 980 கட்டிட அனுமதி வழங்கப்பட்ட நேர்வுகளிலும், திம்மசமுத்திரத்தில் 30 VPகளிலும், மோசடியாக பணம் செலுத்தியதாக எண்ணப்பட்ட 90 நேர்வுகளை தணிக்கை மாதிரியாகத் தெரிவு செய்து, விரிவான விசாரணையை நடத்தியது. வங்கியாளர்களின் பணம் செலுத்துச்சீட்டுகளின் நகல்களையும், உள்ளாட்சி அமைப்பில் உள்ள செலுத்துச்சீட்டுகளின் மறுபாதியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறைந்த தொகையே வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டிருந்ததையும், வங்கி செலுத்துச்சீட்டுகளின் மறுபாதியில், இத்தொகையானது உள்ளபடி செலுத்தப்பட வேண்டிய தொகைக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டிருக்கும் மோசடியையும் (உள்ளாட்சி அமைப்பின் செலுத்துச்சீட்டின் நகல்) தணிக்கையால் உறுதிப்படுத்த முடியும். சரிபார்க்கப்பட்ட 90 நேர்வுகளில் 68 நேர்வுகளால் குறைவாக செலுத்தப்பட்ட பணம் மூலம், ₹15.85 இலட்சம் **(இணைப்பு 3.7)** முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததைத் தணிக்கை கவனித்தது. இவற்றில் ஐந்து நேர்வுகளில், TNCWWBன் கணக்கில் எந்தத் தொகையும் செலுத்தப்படாமலேயே செலுத்துச்சீட்டின் போலியான மறுபாதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன, மேலும் உள்ளாட்சி அமைப்புகள் அத்தகைய போலியான மறுபாதிகள் அடிப்படையில் கட்டிட அனுமதிகளை வழங்கியிருந்தன.

காஞ்சிபுரம் மாநகராட்சி மற்றும் திம்மசமுத்திரம் VPகள் குறைந்த தொகை செலுத்துதலை ஒப்புக் கொண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தணிக்கைக்கு தெரிவித்தனர். முறைகேடு தொடர்பான எடுத்துக்காட்டு நேர்வு ஒன்று **விளக்கப்படம் 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.2: தவறான பயன்பாட்டின் ஒரு எடுத்துக்காட்டு நேர்வு**

**TNCWWBன் வங்கிக் கணக்கில் ₹5,000 செலுத்தப்பட்டது, வங்கி நகலின் மறு பகுதியில் (counterfoil), ₹1,85,000 ஆக மாற்றப்பட்டது**





விண்ணப்பதாரர் ஸ்ரீமதி. அமுதா கட்டிட அனுமதிக்கு விண்ணப்பித்திருந்தார். மாநகராட்சி, கட்டிடத்தின் மதிப்பீட்டை ₹1.85 கோடி என மதிப்பிட்டு, ₹1,85,000ஐ தொழிலாளர் செஸ்ஸாக விதித்தது. விண்ணப்பதாரர்/பிரதிநிதி, 16 ஆகஸ்ட் 2021 அன்று யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக் கிளையில், ₹5,000 மட்டுமே செலுத்தி, கட்டிட அனுமதி ஒப்புதலுக்காக மாநகராட்சியிடம் சமர்ப்பித்தபோது, செலுத்துச்சீட்டின் மறுபகுதியில், ₹1,85,000 செலுத்தியதாகக் காட்டுவதற்காக, தொகையை மாற்றி எழுதியிருந்தார். வங்கி நகல் மற்றும் அதன் மறுபகுதி ஆகிய இரண்டிலும் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரரின் பெயர் ஒரே தரப்பட்ட செலுத்துதலுக்கானது என்பது பரிவர்த்தனை ID (AA 405208) மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி TNCWWB, ₹5,000 மட்டுமே பெற்றுள்ளது.

| TNCWWBன் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பொதுநல நிதி | | | |
|---|---|---|---|
| **வங்கி கணக்கு எண்: 530601010038239 யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, அண்ணா நகர்** | | | |
| **நாள்** | **விவரங்கள்** | **வைப்புத்தொகை** | **மீதம்** |
| 16/08/2021 | அமுதா, காஞ்சிபுரம் | 5,000.00 | 1,10,11,446.54 |

இவ்வாறாக, 16 ஆகஸ்ட் 2021 அன்று ₹1.80 இலட்சம் மோசடியாகப் பணம் செலுத்தப்பட்டது, மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சி மற்றும் TNCWWB ஆகியவற்றால் முறைகேடாக செய்யப்பட்ட இந்த தவறான பயன்பாட்டை அடையாளம் காண முடியவில்லை.

மேலும், 2019-21 ஆண்டுகளுக்கான, தென்காசி மாவட்டத்தின் வடகரை கீழ்பிடகை TPன் உள்ளூர் நிதி தணிக்கை அறிக்கையின்படி, கட்டிட அனுமதி ஒப்புதலுக்கான செஸ் செலுத்துச்சீட்டினை மாற்றியமைத்து, ₹10.35 இலட்சம் குறைவான பணம் செலுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்

செஸ் பணத்தை செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட அதன் ஒத்தப் பகுதியில் தொழிலாளர் செஸ் தொகையை மேலெழுதுவதன் (overwriting) மூலம் முறைகேடு நடந்துள்ளது. தென்காசி மாவட்டம் அச்சன்புதூர் TPயிலும் இதேபோல் ₹1.45 இலட்சம் முறைகேடு நடந்துள்ளது.

கட்டுமானத் தளங்களால் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவம் III (**இணைப்பு 3.1**), கட்டிடத்தின் மதிப்பைக் கண்காணிக்கவும், உள்ளாட்சி அமைப்பால் சேகரிக்கப்பட்ட தொழிலாளர் செஸ்ஸை ஒத்திசைவு செய்யவும் ஒரு கருவியாக இருந்ததை தணிக்கை கண்டறிந்தது. படிவம் IIIஐப் பெறுவதை உறுதி செய்யத் தவறியது முறைகேட்டிற்குப் பங்களித்தது.

இவ்வாறு, வங்கிப் பணம் மூலம் பெறப்பட்ட செஸ் வரியை ஒத்திசைவு செய்யத் தவறியது, தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாவட்டங்களின் உள்ளாட்சி அமைப்புகளில் ₹27.65 இலட்சம் முறைகேடு நடக்க ஏதுவானது என தணிக்கை கண்டறிந்தது.

குறைவாக செலுத்தப்பட்ட தொகையை TNCWWBன் கணக்கில் செலுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட TPகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக (ஜனவரி 2023) தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இருப்பினும், பதில், சோதனை சரிபார்ப்பு மூலம் தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட நேர்வுகளை மட்டுமே குறிப்பிடுகிறது.

## 3.8 தொழிலாளர் செஸ் செலுத்துவதில் இருந்த தாமதம் - வட்டி வழங்கப்படாததால் ஏற்பட்ட இழப்பு - ₹78.91 கோடி

BOCWW செஸ் சட்டத்தின் 8வது பிரிவின்படி, எந்த ஒரு வேலை அளிப்போரும் மதிப்பீட்டு ஆணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எந்தவொரு செஸ் தொகையையும் செலுத்தத் தவறினால், செலுத்த வேண்டிய தொகைக்கு இரண்டு விழுக்காடு வட்டி செலுத்த வேண்டும். இது ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அத்தகைய பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து தொகை செலுத்தப்பட்டது வரையான காலக்கட்டத்திற்குள் உள்ள ஒரு மாதத்தின் ஒரு பகுதிக்கும் செலுத்தப்பட வேண்டும்.

BOCWW செஸ் சட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படவில்லை மற்றும் TNMW சட்டம்/விதிகளில் செஸ் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால் வட்டி விதிக்கப்பட எந்த ஏற்பாடும் இல்லை. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 124 உள்ளாட்சி அமைப்புகளுக்கான செஸ் வசூல் மற்றும் செலுத்தும் விவரங்கள் சோதனை செய்யப்பட்டதில், **பத்தி 3.4ல்** கூறப்பட்டுள்ளபடி, ₹221.81 கோடி செலுத்தப்படாமல் நிலுவையில் இருப்பது கவனிக்கப்பட்டது. TNMW சட்டம்/விதிகள், BOCW சட்டம், 1996ன் விதிகளுடன் இணைக்கப்பட்டிருந்தால், **இணைப்பு 3.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, ₹78.91 கோடி வட்டித் தொகையை TNCWWB விதித்திருக்கலாம், இது செஸ் தாமதமாக செலுத்தப்பட்டதற்கெதிரான தடுப்பு முயற்சியாக இருந்திருக்கும்.

முடிவு கூட்டத்தின் போது, மாநில சட்டம்/விதிகளில் அபராத வட்டி விதிகளை சேர்ப்பதற்குப் பொருத்தமான திருத்தங்கள் செய்யப்படும் என்று அரசின் ACS கூறினார்.

## 3.9 முடிவுரை

தொழிலாளர் செஸ் வசூல்செய்யப்பட்டு செலுத்தப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பு இல்லாத நிலையில், TNCWWB அதன் வருவாயின் ஒரே ஆதாரத்தின் மீது எந்தக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக உள்ளாட்சி அமைப்புகள் செஸ் தொகையை வசூலித்து, அதனை TNCWWB கணக்கில் செலுத்துவதற்குப் பதிலாக, தங்கள் கணக்குகளில் வைத்து, தற்காலிகமாக பயன்படுத்த ஏதுவானது. கட்டுமானத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் ஒரு விழுக்காடு என்ற திருத்தப்பட்ட விகிதத்திற்குப் பதிலாக 0.3 விழுக்காடு என்று குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டது கவனிக்கப்படாமல் போய்விட்டது. அமைப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் செஸ் தொகையை வசூலிப்பது மற்றும் செலுத்துவதை ஒத்திசைவு செய்யாதது ஆகியவை முறைகேடு, குறைவான பணம் செலுத்துதல், தாமதமாக பணம் செலுத்துதல் மற்றும் வசூலிக்கப்பட்ட தொகையை தவறாக செலுத்துதல் ஆகியவற்றிற்கு வழிவகுத்தது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிலாளர் செஸ் தொகையை குறைவாக செலுத்தி மோசடி செய்ததாக சந்தேகிக்கப்படும் 90 நேர்வுகளின் விரிவான விசாரணையில், 68 நேர்வுகளில், ₹15.85 இலட்சத்திற்கான முறைகேடு நடந்திருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 3.10 பரிந்துரைகள்

- செஸ் பணம் செலுத்தும் முகமைகள் படிவம் III மற்றும் படிவம் IV மூலம் விவரங்களை வழங்குவதை அரசு கட்டாயமாக்க வேண்டும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் செஸ் பணம் செலுத்தும் முகமைகளால் வசூலிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட/கழிக்கப்பட்ட செஸ் சரியானதா என்பதை சரிபார்க்க TNCWWB ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.
- இணைய வழி செஸ் வசூல் தொகுதியின் அமலாக்கத்தை அரசு விரைவுபடுத்த வேண்டும். இதில் உள்ளாட்சி அளவில் செய்யப்படும் தொழிலாளர் செஸ் மதிப்பீட்டுடன் செலுத்தப்பட்ட தொகையை தானாக ஒத்திசைவு செய்யும் வசதி இருக்க வேண்டும். இது அமல்படுத்தப்படாத நிலையில், செலுத்துச்சீட்டின் மறுபகுதியின் நகல்களை இணைக்கவும், ஒவ்வொரு பணவரவிற்கான பரிவர்த்தனை IDயை வழங்குமாறும் உள்ளாட்சி அமைப்புகளை அறிவுறுத்த வேண்டும்.
- பணம் செலுத்துச்சீட்டுகளின் மறுபகுதியில் செய்யப்படும் திருத்தங்களினால் ஏற்படும் முறைகேடுகளுக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். TNCWWB, இதுபோன்ற முறைகேடுள்ள நேர்வுகளை

வெளிக்கொணர மாநிலம் தழுவிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட 167 நேர்வுகளிடம் இருந்து ₹61.78 இலட்சத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்

- பணம் செலுத்தாமை/தவறாக பணம் செலுத்துதல்/குறைவாக செஸ் பணம் செலுத்துதல் ஆகிய நேர்வுகளில் தொடர்புடைய அதிகாரிகளின் மீது அதற்கான பொறுப்பு அரசால் நிர்ணயிக்கப்பட வேண்டும். TNCWWBக்கு, தாமதமாக செலுத்தப்பட்ட தொகை மீது வட்டி வசூலிக்கும் அதிகாரம் அளிக்கும் பொருட்டு அரசு TNMW சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும்.

# பிரிவு - ஆ

# தொழிலாளர் வரியின் பயன்பாடு

# அத்தியாயம் IV

# தொழிலாளர்களின் பதிவு

## அத்தியாயம் IV

## தொழிலாளர்களின் பதிவு

**பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் கைமுறை மற்றும் மின்னணு தரவுகளில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் ஆதார் எண், கைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற முக்கியத் தகவல்களின் பதிவேற்றத்தில் உள்ள துல்லியமின்மை, பதிவு தரவுத்தளத்தின் தரத்தை பாதித்தன. முறையான கணக்கெடுப்பின் மூலம் தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களைக் கண்டறிவதில் இருந்த குறைபாட்டால், கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்களை பதிவு செய்ய இயலாமல் போனது. மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த (Inter State Migrant) கட்டுமானத் தொழிலாளர்களை TNCWWB தனது செயல்முறையின் கீழ் கொண்டு வருவதற்கு எந்த பயனுள்ள நடவடிக்கையையும் தொடங்கவில்லை.**

### 4.1 கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு

TNCWWB, அதன் மாவட்ட அலுவலகங்கள் (ACL-SSS) மூலம் கட்டுமானத் தொழிலாளர்களைப் பதிவு செய்கிறது. 18 வயது நிறைவடைந்து ஆனால் 60 வயதை பூர்த்தி செய்யாத, 54 வகையான கட்டிடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (**இணைப்பு 4.1**), TNMW சட்டத்தின் கீழ் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

தொழிலாளர்களின் பதிவு 18 ஜூன் 2020 வரை கைமுறையாக செயல்படுத்தப்பட்டு, தரவுகள் மாவட்ட அலுவலகங்களில் கையேட்டுப் பதிவுகளாக பராமரிக்கப்பட்டது. 19 ஜூன் 2020 முதல், இணையவழி மூலம் பதிவு செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. இச்செயல்முறையில், விண்ணப்பதாரரால் துணை ஆவணங்கள்[12] பதிவேற்றப்பட்டு, விண்ணப்பப் படிவம் இணையவழியில் TNCWWBன் வலைதளத்தில் சமர்பிக்கப்படுகின்றன. இப்படிவம், விண்ணப்பதாரரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணுக்கு அனுப்பப்பட்ட ஒரு முறை கடவுச்சொல்லை (One Time Password - OTP) பயன்படுத்தி சரிபார்க்கப்படுகிறது. கிராம நிர்வாக அதிகாரி (Village Administrative Officer - VAO) இணையவழி இடைமுக அமைப்பின் மூலமாக விண்ணப்பதாரரின் தரவை சரிபார்க்கிறார். பின்னர், விண்ணப்பம் ACL-SSSக்கு அனுப்பப்படுகிறது. விண்ணப்ப படிவம் மற்றும் விண்ணப்பதாரரால் இணைக்கப்பட்ட ஆவணங்களை ACL-SSS ஆராய்ந்து, அனுமதிக்கவோ அல்லது விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பின் பேரில்

---

[12] வேலை அளிப்போர் அல்லது தொழிலாளர் ஆய்வாளர் அல்லது DISH அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் தங்கள் தொழிலாளர் சார்பில் வழங்கப்பட்ட வேலைவாய்ப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கி பாஸ்புக்கின் முதல் பக்கம் மற்றும் நியமனப் படிவம் (Nomination form) .

நிராகரிக்கவோ செய்கிறார். செயல்முறையின் விவரங்கள் **இணைப்பு 4.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 4.2 பதிவிற்கான தரவின் தரத்தில் உள்ள குறைபாடுகள்

2017-22 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் விவரங்கள் **விளக்கப்படம் 4.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 4.1: TNCWWB உடன் பதிவு செய்த கட்டுமான தொழிலாளர்களின் எண்ணிக்கை**




(ஆதாரம்: TNCWWB வழங்கிய விவரங்கள்)

2020-21ல் பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் அதிக சரிவினைத் தணிக்கை கண்டறிந்தது. இது 2020ம் ஆண்டில் கோவிட்–19ன் போது, பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பண உதவி வழங்கப்படுவதற்கு முன்பாக TNCWWBஆல் மேற்கொள்ளப்பட்ட செயலற்ற தொழிலாளர்களின்[13] (பதிவினைப் புதுப்பிக்காதவர்கள்) நீக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் நகல்கள் (duplication) விலக்கம் போன்ற காரணங்களால் ஏற்பட்டது. 2020ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான உறுப்பினர்களின் நீக்கம், பல ஆண்டுகளாக பதிவு செய்வதில் ஊக்கமான செயல்பாடு இல்லாததைக் குறிப்பதாகத் தணிக்கை கவனித்தது.

2020ம் ஆண்டின் தரவு சுத்திகரிப்புப் பயிற்சியைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டில் மற்றொரு பயிற்சி தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. நிர்வாகம், செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் தடையற்ற சேவை வழங்கலை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு அரசு தரவுத் தூய்மைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, அனைத்து 18 உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் பதிவுத் தரவுத்தளத்திலும் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள்/ஓய்வூதியதாரர்களின் ஆதார் எண்ணை, ஆதார் எண் இணைக்கப்பட்ட பிற பயனாளிகளின் தரவுத்தளமான, முதியோர் ஓய்வூதியம், PM கிசான், அரசு ஊழியர்கள்/ஓய்வூதியம் பெறுவோர், இறப்பு தரவுத் தொகுப்புகள் மற்றும்

13 ஏற்கனவே TNCWWB உடன் பதிவு செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள் தங்கள் பதிவை புதுப்பிக்காத தொழிலாளர்கள்.

பல[14] தரவுகளுடன் இணைக்கப்படுவதன் (mapping) மூலம் அந்தப் பயனாளிகள் நகலாக்கப்படுகிறார்களா (duplication) என்பது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (Tamil Nadu e-Governance Agency - TNeGA) சரிபார்க்கப்படுகிறது. TNCWWB உட்பட, உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவுசெய்யப்பட்ட தகுதியற்ற தொழிலாளர்கள் குறித்த இரண்டு தொகுப்பு அறிக்கைகளை TNeGA வழங்கியது (ஆகஸ்ட் 2022 மற்றும் நவம்பர் 2022).

TNeGAஆல் தொகுத்தளிக்கப்பட்ட 18 உடலுழைப்புத் தொழிலாளர் வாரியங்களில் பதிவான, தகுதியற்றவர்களாக இருக்கக்கூடும் என்று கருதப்பட்ட தொழிலாளர்களின் தரவை பயன்படுத்தி TNCWWBன் உறுப்பினர்களின் தரவு தணிக்கையால் பகுப்பாய்வு செய்யப்பட்டது. **அட்டவணை 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி TNCWWBல் 1,53,099 தகுதியற்ற நபர்கள் பதிவு செய்திருப்பது கண்டறியப்பட்டது.

**அட்டவணை 4.1: TNCWWB பதிவுத் தரவில் சேர்க்கப்பட்டுள்ள தகுதியற்ற நபர்கள்**

| தகுதியின்மைக்கான காரணங்கள் | தகுதியற்ற நபர்கள் | | மொத்தம் – அனைத்து மாவட்டங்கள் |
|---|---|---|---|
| | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் | தெரிவு செய்யப்படாத மாவட்டங்கள் | |
| இறப்பு தரவுத்தொகுப்பில் காணப்பட்ட ஆதார் ID | 47 | 173 | 220 |
| அரசு ஊழியர்/ஓய்வூதியதாரர் தரவுத்தொகுப்பில் காணப்பட்ட ஆதார் ID | 2,801 | 2,833 | 5,634 |
| முதியோர் ஓய்வூதியத் தரவுத்தொகுப்பில் காணப்பட்ட ஆதார் ID | 38,857 | 54,841 | 93,698 |
| பல முறை காணப்பட்ட ஆதார் எண் | 8,745 | 10,528 | 19,273 |
| செல்லுபடியாகாத ஆதார் எண் | 16,722 | 17,552 | 34,274 |
| **மொத்தம்** | **67,172** | **85,927** | **1,53,099** |

(ஆதாரம்: TNCWWB மற்றும் TNeGA ஆல் வழங்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு)

குறைபாடுகள் குறித்து TNeGA ஏற்கனவே ஆகஸ்ட் 2022ல் தெரிவித்திருந்தாலும், உரிய நடவடிக்கைக்கான கள சரிபார்ப்பு எதுவும் TNCWWBஆல் தொடங்கப்படவில்லை (மார்ச் 2023) என்பதை தணிக்கை கவனித்தது. TNCWWB, தகுதியற்ற நபர்கள் குறித்த TNeGAன் அறிக்கைகளை உரிய முறையில் சரிபார்த்த பிறகு, தகுதியற்ற நபர்களை பதிவு செய்ததற்கு பொறுப்பான அதிகாரிகள்/தொழிற்சங்கங்கள் மீது

[14] பள்ளி மாணவர் தரவுத்தொகுப்பு, பொது விநியோகத் திட்டத்தில் இணைக்கப்படாத ஆதார் எண், வறுமைக் கோட்டிற்கு மேல் இருப்பதைக் குறிக்கும் PDS ஸ்மார்ட் கார்டு, இரண்டிற்கும் மேற்பட்ட எரிவாயு இணைப்புகளைக் கொண்டு, ₹10 இலட்சம் மதிப்பிலான சொத்தினைக் கொண்டுள்ள குடும்பம் போன்ற ஆதாருடன் இணைக்கப்பட்ட (mapping) பிற தரவுகள் தகுதியின்மைக்கான காரணங்களாகக் கருதப்படவில்லை.

நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட திட்டப் பலன்கள் மீளப்பெற வேண்டும்.

மேலும், தற்போதுள்ள நடைமுறையின்படி, தொடர்புடைய மாவட்ட ACL-SSS, தொழிலாளர் மற்ற திட்டங்களின் பயனாளியா என்பதை பதிவு அல்லது கோரிக்கையின் போது சரிபார்க்க வேண்டும். தரவுகளில் தகுதியற்ற நபர்கள் இருப்பதால், அவர்களுக்கு பணம் செலுத்தப்படுவதை தவிர்ப்பதற்கு, களச் சரிபார்ப்பு மிகவும் முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

தொழிலாளர் ஆணையரால் அமைக்கப்பட்ட மாவட்ட வாரியானக் குழுக்கள் மூலம் களச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுகிறது என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). கள சரிபார்ப்பின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன (மார்ச் 2023).

## 4.3 பதிவுத் தரவின் பகுப்பாய்வு

31 மார்ச் 2022 நிலவரப்படி, பதிவு செய்யப்பட்ட 19,30,077 தொழிலாளர்களின் பதிவுகளைப் பகுப்பாய்வு செய்ததில், தொழிலாளர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தலில் குறைபாடுகள் உள்ளதை தணிக்கை வெளிப்படுத்தியது. அவை பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன (**இணைப்பு 4.3**):

### 4.3.1 ஆதார் இணைப்பதில் உள்ள குறைபாடுகள்

விண்ணப்பப் படிவத்தை இணையவழியில் நிரப்ப, ஆதார் எண்ணை தொழிலாளர் வழங்க வேண்டும். ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணில் OTP பெறப்படும். OTPஐ உள்ளீடு செய்த பிறகு மட்டுமே, விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்தை நிரப்ப முடியும். எனவே, பதிவு நோக்கத்திற்காக பயனாளியின் சரியான ஆதார் எண்ணை பதிவேற்றுவது அவசியமாக இருந்தது.

ஆதார் இணைப்பின் தரவுப் பகுப்பாய்வு, 44,246 நேர்வுகளில் (2.30 விழுக்காடு) தவறான ஆதார் எண்கள் மற்றும் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ள ஆதார் எண்கள் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. இது **அட்டவணை 4.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2: ஆதார் இணைப்பின் தரவு பகுப்பாய்வு**

| வகை | பதிவுகளின் எண்ணிக்கை | காரணங்கள் |
|---|---|---|
| தவறான ஆதார் எண்கள் | 25,416 | ஆதார் எண் இல்லாதிருத்தல் அல்லது 0 முதல் 12 வரையிலான சரம்(string) நீளமுடைய தேவையற்ற தரவுகள் இருத்தல் மற்றும் குடும்ப அட்டை எண்கள் போன்ற தொடர்பில்லாத மதிப்புகள் இருத்தல் (**இணைப்பு 4.4**) |
| பலமுறை பயன்படுத்தப்பட்ட ஆதார் எண் | 18,830 | 2 முதல் 18 வெவ்வேறு தொழிலாளர்களை அடையாளம் காண ஒரே ஆதார் எண் பயன்படுத்தப்பட்டது (**இணைப்பு 4.5**) |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட வழங்கிய தரவின் பகுப்பாய்வு)

தேவையற்ற மதிப்புகள்/பிழைகள் போன்றவை பழைய தரவுகளில் மட்டுமின்றி, இணையவழியில் பதிவு செய்யப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட

தரவுகளிலும் எந்தவித சரிபார்ப்பு சோதனையும் இன்றி பதிவேற்றப்பட்டிருந்ததை தணிக்கை கண்டறிந்தது.

ஆதார் எண்கள் நாளது வரை புதுப்பிக்கப்படாததால், 44,246 பதிவுத் தரவுகளில், தேவையற்ற மதிப்புகள்/பலமுறை பயன்படுத்தப்பட்ட ஆதார் எண்கள் போன்றவை தோன்ற ஏதுவாயிற்று. இது பயனாளிகளுக்கு சேவை வழங்குதலை பாதிக்கக்கூடும்.

### 4.3.2 TNCWWB உடன் பதிவு செய்த மற்ற வாரியத் தொழிலாளர்கள்

கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டுமன்றி, பல்வேறு வகையான அமைப்புசாரா தொழிலாளர்களான வீட்டுத் தொழிலாளர்கள், தையல்காரர்கள், சலவைத் தொழிலாளர்கள், சிகையலங்காரத் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட 17 தொழிலாளர் நலத் வாரியங்களை நிர்வகிப்பதில் தொழிலாளர் துறை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். TNCWWB, 54 வகையான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உரியவற்றை வழங்குகையில் (**இணைப்பு 4.1**), மற்ற 17 வாரியங்கள், 60 வகையான பிற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு திட்ட நலன்கள் அளிப்பதில் ஈடுபட்டுள்ளன (**இணைப்பு 4.6**). ஒவ்வொரு வகைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளும் தொழிலை அடையாளம் காண நான்கு இலக்க பணிக் குறியீட்டைக் (Work Code) கொண்டுள்ளனர். பதிவுசெய்யப்பட்ட 19,30,077 கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவுகளைக் கொண்ட தரவில் அவர்களின் பணிக் குறியீடு பகுப்பாய்வு செய்யப்பட்டதில், 2,753 பதிவுகளில், **அட்டவணை 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, பணிக் குறியீடு TNCWWBக்குத் தொடர்புடையதாக இல்லை என்பது **கண்டறியப்பட்டது.**

**அட்டவணை 4.3: TNCWWB உடன் தொடர்பற்ற பணிக் குறியீட்டினைக் கொண்ட தொழிலாளர்கள்**

| TNCWWB உடன் தொடர்பற்ற பணிக் குறியீடு | தொழிலாளர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் | தெரிவு செய்யப்படாத மாவட்டங்கள் | |
| TN உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் கீழ் உள்ள மற்ற 17 வாரியங்கள் தொடர்பான பணிக் குறியீடுகள் | 267 | 367 | 634 |
| **இணைப்புகள் 4.1 மற்றும் 4.6ல்** கொடுக்கப்பட்டுள்ள 114 பணிக் குறியீடுகளில் இல்லாத பணிக் குறியீடுகள் | 931 | 1,188 | 2,119 |
| **மொத்தம்** | **1,198** | **1,555** | **2,753** |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு)

கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் பிற 17 வாரியங்களைச் சேர்ந்த மற்ற வகைத் தொழிலாளர்களைக் கையாளும் தொழிலாளர் துறையின் கள நிலை அலுவலர்கள், 2,753 கட்டுமானம் சாரா தொழிலாளர்களை TNCWWBல்

தகுதியான உறுப்பினர்களாக தவறாகப் பதிவு செய்திருப்பதை தணிக்கைக் கண்டறிந்தது.

### 4.3.3 கைபேசி எண்களின் பதிவேற்றத்தில் உள்ள குறைபாடுகள்

ஆதார் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணில் பெறப்பட்ட OTP மூலம் மட்டுமே பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தைத் தொடங்க முடியும் என்றாலும், கைபேசி எண்கள் பதிவேற்றப்படாத அல்லது செல்லுபடியாகாத 5.86 இலட்சம் நேர்வுகள் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. **அட்டவணை 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி கைபேசி எண்களைப் பதிவேற்றியதில் இருந்த குறைபாடுகளை தணிக்கை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

**அட்டவணை 4.4: கைபேசி எண்களின் பதிவேற்றத்தில் இருந்த குறைபாடுகள்**

| வ. எண் | பதிவுகளின் விவரங்கள் | தொழிலாளர்களின் பதிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கைபேசி எண் பதிவு செய்யப்படவில்லை | 5,77,850 |
| 2 | கைபேசி எண் பூஜ்ஜியமாக பதிவேற்றப்பட்டது | 7,261 |
| 3 | தேவையற்ற மதிப்புகள் | 1,072 |
| 4 | தவறான கைபேசி எண்கள் | 105 |
| | **மொத்தம்** | **5,86,288** |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு)

மேலும், 8,327 பதிவுகளில், வெவ்வேறு பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் தரவுகளுக்கு எதிராக ஒரே கைபேசி எண் பலமுறை பதிவேற்றப்பட்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட பதிவுகளில் காணப்பட்ட 2 முதல் 26 வரையிலான இத்தகைய நேர்வுகள் **இணைப்பு 4.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.3.4 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளின் பதிவேற்றத்தில் உள்ள குறைபாடுகள்

பதிவு பெற்ற தொழிலாளர்கள் தங்களது பதிவு செய்யப்பட்ட வங்கிக் கணக்குகள் மூலம் பல்வேறு திட்ட உதவிகளைப் பெறுகின்றனர். பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகள் இணையவழியில் பதிவேற்றப்பட்டிருந்தாலும், இந்த வங்கிக் கணக்குகள் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (Unique Identification Authority of India - UIDAI) ஆதார் எண்கள் மூலம் சரிபார்க்கப்படவில்லை. TNCWWBன் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் 19,30,077 பதிவுகளைக் கொண்ட தரவின் பகுப்பாய்வின் முடிவுகள் **அட்டவணை 4.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.5: பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளின் பதிவேற்றத்தில் காணப்பட்ட குறைபாடுகள்**

| வ. எண் | பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் பதிவு விவரங்கள் | எண்களில் | குறைபாடுகள் |
|---|---|---|---|
| 1 | வங்கி கணக்கு எண் பதிவேற்றப்படவில்லை | 4,35,471 | காலியாக அல்லது '0' என வைக்கப்பட்டிருந்தது |
| 2 | தேவையற்ற மதிப்பு (ஆறு இலக்கங்களுக்கும் குறைவானது) | 4,725 | ஆறு இலக்கங்களுக்குக் குறைவான வங்கிக் கணக்கு எண்களை வங்கிகள் பயன்படுத்துவதில்லை |
| 3 | பல தொழிலாளர்களுக்கு ஒரே வங்கி கணக்கு எண் | 8,992 | 2 முதல் 1,693 வரை இருந்தது |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவின் பகுப்பாய்வு)

ஒரு விளக்கமாக, தரவுத்தளத்தில் காணப்பட்ட தேவையற்ற மதிப்புகள் உட்பட தவறான வங்கிக் கணக்கு எண்கள், **அட்டவணை 4.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.6: தவறான வங்கிக் கணக்கு எண்கள் மற்றும் தேவையற்ற மதிப்புகளின் விளக்கக் குறிப்புகள்**

| வங்கி கணக்கு எண் | கடலூர் | தர்மபுரி | திண்டுக்கல் | திருச்சிராப்பள்ளி | திருவண்ணாமலை | அரியலூர் | கள்ளக்குறிச்சி | நாமக்கல் | பெரம்பலூர் | நீலகிரி | விழுப்புரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11111111 | 178 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 6 | 184 |
| 2323222223 | 0 | 0 | 0 | 0 | 0 | 13 | 0 | 0 | 0 | 0 | 0 | 13 |
| 123456789 | 0 | 2 | 1 | 0 | 1 | 0 | 0 | 7 | 0 | 1 | 0 | 12 |
| 55555555555 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 24 | 24 |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவின் பகுப்பாய்வு)

சரிபார்க்கப்பட்ட தகுதியான வங்கிக் கணக்கு விவரங்களை மட்டுமே பராமரிப்பது மிகவும் முக்கியம். ஒப்பந்த ஊழியர் ஒருவர், தொழிலாளர்களின் வங்கிக் கணக்கை மாற்றியதன் மூலம், இரண்டு பயனாளிகளின் கோவிட் பண உதவியை தனது வங்கிக் கணக்கிற்கு மோசடியாக மாற்றியதன் நேர்வை தணிக்கை கண்டறிந்தது. மேலும், கோவிட்-19 பெருந்தொற்றின்போது TNCWWB, அதன் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும், அவர்களின் சரியான வங்கிக் கணக்குகள் இல்லாததால், கோவிட் பண உதவியை அளிக்க முடியவில்லை. இது, பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் ஆதார் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு பயனாளிகளின் நேரடி பரிமாற்ற முறை (Direct Beneficiary Transfer - DBT) மூலம் பண உதவி வழங்கப்பட்டதால், 1.64 இலட்சம் தொழிலாளர்களுக்கு உதவி வழங்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியது.

மேற்கண்ட குறைபாடுகள் காரணமாக, அந்தந்த மாவட்ட அலுவலகங்களில், ACL-SSSஆல், பயனாளிகளுக்கு இணையவழி தரவுத்தளத்திற்கு வெளியே ECS மூலம் தொடர்ந்து பணம் செலுத்தப்பட்டது. இது, பதிவுத் தரவுத்தளத்தில் வங்கிக் கணக்குகள் பதிவேற்றப்படும் நோக்கத்தை தோல்வியுறச் செய்தது.

### 4.3.5 பதிவிற்கான அளவுகோல்களை மீறி தகுதியற்ற தொழிலாளர்களை பதிவு செய்தல்

TNCWWBல் பதிவு செய்வதற்கான தகுதி/தகுதியின்மையை தீர்மானிப்பதாலும், பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் வயதின் அடிப்படையில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதாலும், தொழிலாளியின் பிறந்த தேதி (Date of Birth - DOB) முக்கியமான ஒன்றாகும். 31 மார்ச் 2022 நிலவரப்படி, TNCWWBல் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் 19,30,077 பதிவுகளைக் கொண்ட தரவின் பகுப்பாய்வு **அட்டவணை 4.7ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 4.7: பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர் தரவு பகுப்பாய்வின் கண்டுபிடிப்புகள்**

| வ. எண் | இனங்கள் | பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | கண்டுபிடிப்புகள் |
|---|---|---|---|
| 1 | 60 ஆண்டுகளுக்கும் மேலாக | 1,00,857 | சரியான உள்ளீட்டிற்கான கட்டுப்பாடு இல்லை/சரிபார்ப்பு இல்லை |
| 2 | 18 வயதுக்கு கீழ் | 28 | சிறார்களுக்கு தகுதி இல்லை |
| 3 | பிறந்த தேதியைப் பதிவேற்றாதது | 17 | சரியான உள்ளீட்டு கட்டுப்பாடு இல்லை/சரிபார்ப்பு இல்லை - DOB இல்லாததால் தகுதி சரிபார்க்க இயவில்லை |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவின் பகுப்பாய்வு)

சிவகங்கை மாவட்டத்தில், 24MZDR081536ஐப் பதிவு IDயாகக் கொண்ட ஒரு உறுப்பினரின் DOB, 01 ஜூலை 2029 எனவும் மற்றும் பதிவு தேதி, 22 டிசம்பர் 2066 எனவும் பதிவேற்றப்பட்டிருந்தது. இது, தரவைப் பதிவேற்றுவதில் சரிபார்ப்புக் கட்டுப்பாடு இல்லை என்பதைக் காட்டுகிறது. உள்ளீடு மற்றும் சரிபார்ப்புக் கட்டுப்பாடுகளை செயல்படுத்தாதது, தரவைச் சுத்தம் செய்யாதது/தரவினைப் புதுப்பிக்காதது மற்றும் கண்காணிப்பு இல்லாமை போன்றவற்றால் தகுதியற்ற நபர்கள் மற்றும் தவறான/செல்லத்தகாத/பூஜ்ய மதிப்புகள் சேர்க்கப்பட்டன.

பெரும்பாலான தரவுகள், பழைய தரவுத்தளத்திலிருந்து மரபுத் தரவையும் கொண்டு மாற்றப்பட்டவை என்று TNCWWB பதிலளித்தது (டிசம்பர் 2022). இருப்பினும், தரவு சரிபார்ப்புக் கட்டுப்பாடுகளுடன் கூடிய புதிய மென்பொருள் பயன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

புதுப்பித்தல்/ஒப்புதலுக்கான 26,428 விண்ணப்பங்கள், அவற்றின் பதிவுத் தேதியை பிறந்த தேதிக்கு முன்பாகக் கொண்டிருந்ததால், பதில்

ஏற்கத்தக்கதாக இல்லை. சில விளக்க நேர்வுகள் **அட்டவணை 4.8ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.8: பதிவு தேதி பிறந்த தேதிக்கு முந்தையதாக இருந்த விளக்க நேர்வுகள்**

| விண்ணப்ப எண் | விண்ணப்ப தேதி | ஒப்புதல் தேதி | பதிவு செய்த தேதி | பிறந்த தேதி | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| TNUWWB000001231147 | 02/01/2021 | 18/05/2021 | 01/01/1970 | 01/01/1995 | விருதுநகர் |
| TNUWWB00000418963 | 07/01/2021 | 22/10/2021 | 01/01/1970 | 01/01/1995 | கரூர் |
| TNUWWB000001456790 | 20/01/2021 | 05/01/2022 | 01/01/1970 | 01/01/1995 | மதுரை |
| TNUWWB000001157927 | 28/12/2020 | 08/12/2021 | 01/01/1970 | 30/12/1996 | திண்டுக்கல் |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவின் பகுப்பாய்வு)

எனவே, மரபு தரவு மற்றும் இணையவழி மூலம் கிடைத்த தரவுத்தொகுப்பு ஆகிய இரண்டின் சரித்தன்மையை உறுதி செய்வது அவசியம்.

அனைத்து உறுப்பினர்களின் தரவுகளும் ஆதாரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் புல சரிபார்ப்பினைக் கொண்டிராத பழைய தரவுத்தளத்திலிருந்து ஏற்கப்பட்டவை என்றும் தற்போதைய மென்பொருளில் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் ஆகியவை OTP மூலம் சரிபார்க்கப்பட்டன என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

ஆதார் மற்றும் கைபேசி எண் அடிப்படையிலான சரிபார்ப்புடன் கூடிய புதிய தகவல் தொழில்நுட்ப அமைப்பு, தரவு ஒழுங்கமைவை உறுதி செய்ய முடிந்ததா என்பதை தணிக்கை சரிபார்த்தது. புதிய அமைப்பில் தரவின் ஒழுங்கமைவை பாதிக்கும் வகையில் மேலே விவரிக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்ந்து நிலவுவதைக் கண்டறிந்தது. அவை பின்வருமாறு:

- வெவ்வேறு வரிசை நீளமுடன்[15] (7,8,10,11 மற்றும் பூஜ்ய மதிப்பு) தேவையற்ற மதிப்புகளைக் கொண்ட 512 ஆதார் எண்கள் உள்ளன.
- ஒரே ஆதார் எண்ணை இருமுறை பயன்படுத்தி 210 உறுப்பினர்கள் புதுப்பிக்கப்பட்டார்கள் (105 x 2). ஒரே ஆதார் எண்ணை அமைப்பு இரு முறை ஏற்றுக்கொள்வது அதன் உள்ளீடு மற்றும் சரிபார்ப்பிற்கான கட்டுப்பாடுகள் இல்லாத காரணத்தால் ஏற்பட்டிருக்கக்கூடும்.
- கட்டுமானத் தொழிலாளர்கள் அல்லாத 1,504 உடலுழைப்புத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.
- 104 கைபேசி எண்கள் தவறான வரிசை நீளத்துடன் கூடிய தேவையற்ற மதிப்புகளைக் கொண்டிருந்தன.
- 945 செல்லாத வங்கிக் கணக்கு எண்கள் பதிவேற்றப்பட்டிருந்தன.
- 60 வயதுக்கு மேற்பட்ட 1,750 உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட/புதுப்பிக்கப்பட அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

[15] ஆதார் எண் என்பது 12 இலக்க எண் ஆகும்.

புதிய முறையை அறிமுகப்படுத்திய பிறகும் பதிவேற்றப்பட்ட தரவின் தரத்தில், மேலே கூறப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க சிக்கல்கள் இருப்பது, IT அமைப்பில் சரியான உள்ளீடு மற்றும் சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லாததைச் சுட்டிக்காட்டுகிறது. **அத்தியாயம் V**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, தரவு ஒழுங்கமைவிலுள்ள மேற்கண்ட சிக்கல்கள் பயனாளிகளின் அடையாளம் மற்றும் வங்கி விவரங்கள் பொருந்தாத காரணத்தால், TNCWWBஆல் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் பலன்களை உரிய நேரத்தில் அளிக்கப்படுவது பெருமளவு பாதித்திருப்பதாக தணிக்கை கண்டறிந்தது.

## 4.4 கட்டுமானத் தொழிலாளர்களை மதிப்பீடு செய்யாமை மற்றும் கணக்கெடுப்பு நடத்தாமை

கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு தன்னார்வமான ஒன்றாக இருந்தாலும், மாநிலத்தில், பதிவு செய்யப்படாத தொழிலாளர்களுக்கும் திட்டப் பலன்கள் வழங்கப்படவேண்டியது அவசியம் என்பது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் மத்திய அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் அனைத்து அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களைக் கண்டறிந்து, பதிவுசெய்து, பல்வேறு அரசுத் திட்டங்களிலிருந்து அவர்கள் பயனடைவதை உறுதிசெய்ய விரிவான கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது (ஆகஸ்ட் 2020).

கட்டுமானத் தளங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் பதிவை அனைத்து மாநில அரசுகளும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமும் தீவிரமாகக் கவனிக்க வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது (மார்ச் 2018).

இருப்பினும், TNCWWB பதிவு செய்வதற்குத் தகுதியான தொழிலாளர்களை அடையாளம் காண கணக்கெடுப்பு நடத்துவது போன்ற எந்தவொரு முன் நடவடிக்கையையும் தொடங்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய தரவுகளைக் கொண்டு கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முயற்சித்த தணிக்கை கீழ்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

**விளக்கப்படம் 4.2: மாநிலத்தில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்கள்**

**(மார்ச் 2022 நிலவரப்படி)**




(i) ஜூலை 2020ல், மாநிலத்தில் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 43.22 இலட்சம்[16] என மத்திய அரசு மதிப்பிட்டிருந்தது. மார்ச் 2022 நிலவரப்படி, 19.30 இலட்சம் மட்டுமே TNCWWBஆல் பதிவு செய்யப்பட்டுள்ளனர் (**விளக்கப்படம் 4.2**). இதனால், கட்டுமான தொழிலாளர்களின் பதிவில் 55 விழுக்காடு பற்றாக்குறை இருந்தது.

(ii) பணியிடத்தில் விபத்துகளில் சிக்கி உயிரிழக்கும் தொழிலாளிக்கு தலா ₹5 இலட்சம் விபத்து நிவாரணம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2017-22 ஆண்டுகளில், விபத்து நிவாரணம் அளிக்கப்பட்ட 147 இனங்களில் 121, பதிவு செய்யப்படாத தொழிலாளர்களிடமிருந்து (82 விழுக்காடு) பெறப்பட்டவை. எனவே, விபத்து நிவாரணம் வழங்கப்பட்ட தரவுகளின்படி கணக்கிட்டால், தொழிலாளர்களின் பதிவில் 82 விழுக்காடு பற்றாக்குறை இருந்தது.

(iii) கட்டுமானத் தளங்கள் 21ல் DISH/ACL-SSS அதிகாரிகளுடன் சேர்ந்து தணிக்கைக் குழு நடத்திய நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வில், அந்தத் தளங்களில் பணிபுரிந்த 501 கட்டுமானத் தொழிலாளர்களில் 398 பேர், மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்பதும், இவர்களில் ஒருவரும் TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. மீதமுள்ள 103 சொந்த மாநிலத் தொழிலாளர்களில்

16 NSSO கணக்கெடுப்பின் அடிப்படையில்.

(native - State workers), 55 தொழிலாளர்கள் (53 விழுக்காடு) TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை. ஆக, 453 தொழிலாளர்கள் (90 விழுக்காடு) TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை.

மேலே விவரிக்கப்பட்ட இரண்டாம் நிலை சான்றுகளிலிருந்து தகுதியான தொழிலாளர்களை பதிவு செய்வதில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகளைக் கருத்தில் கொள்ளும் போது, உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி தகுதியான அனைத்து தொழிலாளர்களையும் கண்டறிந்து பதிவு செய்வதற்கான முயற்சிகளை TNCWWB மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

கணக்கெடுப்பை நடத்துவதற்கான பட்ஜெட்டுடன் 'முன்மொழிவுக்கான கோரிக்கையை' ('Request for Proposal') தயாரிப்பதற்குத் தகுதியான நபரை ஆலோசகராக நியமிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது[17] (டிசம்பர் 2022) என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

### 4.4.1. தொழிலாளர்களை பதிவு செய்வதற்கு இருப்பில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தாமை

TNBOCW விதிகள், 2006ன் விதி 240ன்படி, ஒவ்வொரு வேலை அளிப்போரும், அவரால் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர் விவரங்களை அதற்கான படிவத்தில் (படிவம் XV) பராமரிக்க வேண்டும். 31 மார்ச் 2022 நிலவரப்படி, BOCW சட்டத்தின் கீழ் 15,219 கட்டுமானத் தளங்கள், DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்தன. படிவம் XV[18] (**இணைப்பு 4.8**) மூலம் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் விவரங்களை DISH அறிய முடியும். இந்தத் தரவு, தொடர்புடைய அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டால், கட்டுமானத் தளங்களில் பணிபுரியும் பதிவு செய்யப்படாத தொழிலாளர்களை அடையாளம் காண உதவும். 21 கட்டுமான தளங்களின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வில் (JPV), 11 தளங்களே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 404 கட்டுமானத் தொழிலாளர்கள் (398 பேர் மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்தோர் மற்றும் ஆறு பேர் சொந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்) இருப்பதையும் அவர்களில் ஒருவரும் TNCWWB உடன் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் ஆய்வுக்குழு கண்டறிந்தது.

வேலை அளிப்போர்களின் பதிவுகளை ஆய்வுசெய்வதோடு கட்டுமான தளங்களின் ஆய்வின் அதிகாரத்தையும் DISH மட்டுமே பெற்றுள்ளது. வேலை அளிப்போர்கள் மற்றும் அவர்களுடன் பணிபுரியும் தொழிலாளர்களின் தரவினை TNCWWB உடன் DISH பகிர்ந்திருந்தால், மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட பதிவு செய்யப்படாத தொழிலாளர்களை கண்டறியும் முயற்சிகள் பலன்பெற்றிருக்கும். இருப்பினும், இது தொடர்பாக DISH மற்றும் TNCWWBஆல் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

---

[17] 7 டிசம்பர் 2022 தேதியிடப்பட்ட அரசாணை (Ms). எண் 162 (LW&SDD).

[18] வேலை அளிப்போர்களால் பணியமர்த்தப்பட்ட கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு.

தணிக்கை மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் 52 விழுக்காடு (21 கட்டுமானத் தளங்களில் 11) கட்டுமானத் தளங்கள் மட்டுமே DISHல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது, பதிவு செய்யப்படாத கட்டுமானத் தொழிலாளர்களை திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் போதிய அளவில் இல்லாததைக் காட்டுகிறது. முகமைகளுக்கு இடையே சரியான ஒருங்கிணைப்பு, கணக்கெடுப்பு மற்றும் பொருத்தமான தொடர் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் மட்டுமே, பதிவு செய்யப்படாத கட்டுமானத் தொழிலாளர்களை நலத்திட்டங்களைப் பெறுவதற்கு, TNCWWBன் கீழ் கொண்டு வர முடியும்.

ஒரு குறிப்பிட்ட தணிக்கை வினவலுக்கு, கட்டுமானத் தளத்திலேயே படிவம் XVஐ சரிபார்த்ததாகக்கூறிய DISH, தரவைச் சேகரித்துப் பகிர்வதற்கு சட்டம்/விதிகளில் குறிப்பிட்ட விதிகள் எதுவும் இல்லை என்று பதிலளித்தது (ஜனவரி 2023). கட்டுமானத் தளங்கள் மற்றும் தொழிலாளர்களின் பதிவு ஆகியவற்றை தனித்தனியாகப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்பதால், DISHன் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும், நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, பதிவு செய்யப்பட்ட 11 கட்டுமானத் தளங்களில், ஒன்று மட்டுமே படிவம் XVஐப் பராமரித்து வந்தது, DISHன் பதிலுக்கு முரணாக இருந்தது. TNBOCW விதிகளை நடைமுறைப்படுத்த மாநில அரசு தவறி இருப்பதையும் DISH மற்றும் TNCWWB இணைந்து செயல்படுவதற்கான அமைப்பு ஏதும் இருக்கவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது, தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கு தகவல்களைப் பகிரும் பொருட்டு DISH மற்றும் TNCWWB இடையே ஒவ்வொரு மாதமும் ஒரு கூட்டத்தை நடத்தும்படி வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரசின் ACS கூறினார். எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவுகள் எதிர்நோக்கப்படுகின்றன (மார்ச் 2023).

## 4.5 தொழிலாளர்களை பதிவு செய்வதற்கான காலக்கெடு

ஜூன் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான ஆண்டுகளுக்கான கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் பகுப்பாய்வில் பின்வருவன கண்டறியப்பட்டன:

### 4.5.1 சேவை வழங்குவதற்கான காலவரம்பிற்கு அளவுகோல் இல்லாமை

பதிவு மற்றும் புதுப்பித்தல் செயல்முறைகள், TNCWWBஆல் அதன் மாவட்ட அலுவலகங்கள் மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உகந்த சேவையை வழங்குகிறது. TNCWWB, பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் திட்ட உதவியை அனுமதிப்பதற்கான எந்த காலவரம்பையும் குறிப்பிடவில்லை. இதனால், சேவை வழங்குவதில் அதிகாரிகள் தரப்பில் பொறுப்பற்றதன்மை காணப்பட்டது.

### 4.5.2 விண்ணப்பங்களைச் செயலாக்குவதில் உள்ள நிலுவை நிலை

டிசம்பர் 2022 நிலவரப்படி, ஜூன் 2020க்கும் மார்ச் 2022க்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட பதிவு/புதுப்பித்தலுக்கான 28,274 விண்ணப்பங்களின் ஒப்புதல் நிலுவையில் உள்ளன. இது குறித்த விவரங்கள் **அட்டவணை 4.9**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.9: கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு/புதுப்பித்தலில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள்**

| வகை | மொத்தம் | ஆறு மாதங்களுக்கு குறைவாக | ஆறு மாதங்கள் முதல் ஓராண்டு வரை | ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் | இரண்டு ஆண்டுகளுக்கு மேல் |
|---|---|---|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டவை | 10,191 | 0 | 2,759 | 7,005 | 427 |
| தெரிவு செய்யப்படாதவை | 18,083 | 0 | 3,837 | 13,728 | 518 |
| **மொத்தம்** | **28,274** | **0** | **6,596** | **20,733** | **945** |

(ஆதாரம்: TNCWWBயால் வழங்கப்பட்ட தரவின் பகுப்பாய்வு)

**அட்டவணை 4.9**ன்படி, 21,678 விண்ணப்பங்கள் ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் இருந்தன. இது விண்ணப்பங்களைச் செயலாக்குவதில் உள்ள மந்த நிலையையும், பயனுள்ள கண்காணிப்பு இல்லாமையையும் மற்றும் இதற்கான அவசரத் தீர்வு நடவடிக்கைகள் தேவைப்படுவதையும் குறிக்கிறது.

31 மார்ச் 2022 நிலவரப்படி, பதிவிற்கான நிலுவையில் இருந்த 108 விண்ணப்பங்களின் சோதனை சரிபார்ப்பில் பின்வருவன தணிக்கையால் கண்டறியப்பட்டன:

- 31 மார்ச் 2022 நிலவரப்படி, நிலுவையில் உள்ளதாகக் கூறப்பட்ட 108 விண்ணப்பங்களில், 2 பிப்ரவரி 2023 (தணிக்கை ஆய்வு தேதி) நிலவரப்படி, 38 ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டவை அல்லது நிராகரிக்கப்பட்டவை.
- 108 இனங்களில் 30ல் (28 விழுக்காடு), ACL-SSSஆல் 2 பிப்ரவரி 2023 (தணிக்கை ஆய்வு தேதி) வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
- 36 இனங்களில், ACL ஆல் கோரப்பட்ட தேவையான ஆவணங்களைப் பதிவேற்றுவதற்கு விண்ணப்பதாரர்கள் அளவு கடந்த நேரம் எடுத்துக் கொண்டனர்.

### 4.5.3 பதிவு மற்றும் புதுப்பித்தலில் ஏற்பட்ட தாமதம்

தணிக்கைக்கு கிடைக்கப்பெற்ற 19.30 இலட்சம் தொழிலாளர்களின் தரவுத் தொகுப்புகளில், 12.76 இலட்சம் தொழிலாளர்களின்[19] தரவுத் தொகுப்புகள் ஜூன் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான காலக்கட்டத்திற்குரிய புதிய பதிவு/புதுப்பித்தல்கள். இந்த பதிவுகள்/புதுப்பித்தல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் **விளக்கப்படம் 4.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[19] பதிவு செய்யப்பட்ட 12,76,312 தொழிலாளர்களில் , 6,753 பேர்கள் பதிவு செய்த தேதி/விண்ணப்பத் தேதி கொண்டிருக்கவில்லை மற்றும் 64 பேர்களின் பதிவு செய்த தேதி/விண்ணப்பத் தேதி பிழைகளுடன் சேர்க்கப்பட்டிருந்தன. எனவே, 12,69,495 மட்டுமே பகுப்பாய்வு செய்யப்பட்டன.

விளக்கப்படம் 4.3: கட்டுமான தொழிலாளர்களின் பதிவுகள் / புதுப்பித்தல்களுக்கான நேரம்




(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவின் அடிப்படையில்)

**தணிக்கையில் கண்டறியப்பட்டவை:**

(i) பதிவை முடிக்க எடுக்கப்பட்ட காலம் ஒன்று முதல் 818 நாட்கள் வரை.

(ii) தொழிலாளர்களைப் பதிவு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் உரிய காலக்கெடு எதுவும் குறிப்பிடப்படாததால், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி தணிக்கை அதை ஆறு மாதங்களாக ஏற்றுக்கொண்டது. பதிவு செய்த/புதுப்பித்த 12.70 இலட்சம் தொழிலாளர்களில், 18 விழுக்காடு பதிவுகள் (2.25 இலட்சம்) ஆறு மாதங்களுக்குப் பிறகே செய்யப்பட்டன.

(iii) மேற்கூறப்பட்ட தாமதமான பதிவுகளுக்கு எடுக்கப்பட்ட சராசரி காலம் 292 நாட்கள் (ஒன்பது மாதங்கள்).

(iv) 64 இனங்களில் விண்ணப்பம் செய்யப்படுவதற்கு முன்பே ஒப்புதல்கள் அளிக்கப்பட்டன. இது பயன்பாட்டு மென்பொருளில் எந்தவித சரிபார்ப்புக் கட்டுப்பாடும் இல்லாததைச் சுட்டிக் காட்டுகிறது.

### 4.5.4 நிராகரிப்புக்கான காரணங்களின் பகுப்பாய்வு

நிராகரிக்கப்பட்ட 1.36 இலட்சம் விண்ணப்பங்களில்[20], 28,923 விண்ணப்பங்கள் ஓராண்டுக்குப் பிறகு நிராகரிக்கப்பட்டன. நிராகரிக்கப்பட்ட 16 இனங்களில், நிராகரிக்கப்பட்ட தேதியானது விண்ணப்பத் தேதிக்கு முற்பட்டதாக இருந்தது. இது **அட்டவணை 4.10ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லாததைக் குறிக்கிறது.

[20] பதிவு/புதுப்பித்தலுக்கான இந்த விண்ணப்பங்கள் ஜூன் 2020 - மார்ச் 2022 வரையில் பெறப்பட்டன.

அட்டவணை 4.10: பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல்

| வகை | மொத்தம் | ஆறு மாதங்களுக்கு குறைவாக | ஆறு மாதங்கள் முதல் ஓராண்டு வரை | ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் | இரண்டு ஆண்டுகளுக்கு மேல் | விண்ணப்ப தேதிக்கு முற்பட்ட நிராகரிப்பு தேதி |
|---|---|---|---|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டவை | 62,550 | 45,553 | 11,573 | 5,340 | 74 | 10 |
| தெரிவு செய்யப்படாதவை | 73,178 | 29,503 | 20,160 | 23,130 | 379 | 6 |
| மொத்தம் | 1,35,728 | 75,056 | 31,733 | 28,470 | 453 | 16 |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட தரவின் அடிப்படையில்)

நிராகரிக்கப்பட்ட 1.36 இலட்சம் விண்ணப்பங்களில், தணிக்கை 1.23 இலட்சம் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்து, அவை **விளக்கப்படம் 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டதை கவனித்தது.

விளக்கப்படம் 4.4: உறுப்பினராவதற்கான விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கான காரணங்கள்




(ஆதாரம்: தணிக்கை மூலம் நடத்தப்பட்ட விண்ணப்பத்தின் பகுப்பாய்வு)

உறுப்பினர் பதிவிற்கான விண்ணப்பங்கள் தவறான காரணங்களைக் கூறி நிராகரிக்கப்பட்டது. அவற்றில் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

- விண்ணப்பதாரருக்கு கிராமத்தில் நிலம் இருப்பதன் அடிப்படையில், 181 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.
- 63 விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் மனைவி/உறவினர் லாபகரமான வேலையில் இருப்பதன் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன.

- விண்ணப்பதாரர் விவசாயத் தொழிலாளி என்பதன் அடிப்படையில், 3,635 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான அளவுகோலாக மேற்கூறப்பட்டவை எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை. மேலும், கொடுக்கப்பட்ட வயதும், பிறந்த தேதியும் பொருந்தாத காரணத்தால் நிராகரிக்கப்பட்ட 923 விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்களின் பிறந்த தேதியைக் கொண்டு அவர்களின் சரியான வயது கணக்கிடப்படுவதன் மூலம் தீர்வு செய்யப்பட்டிருக்கலாம்.

பதிவு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட்ட 100 விண்ணப்பங்களின் தணிக்கை ஆய்வில், அவற்றைத் தீர்மானிப்பதற்கான காலம் குறைந்தபட்சம் ஒரு நாள் முதல் அதிகபட்சம் 852 நாட்கள் ஆகவும், சராசரியாக 243 நாட்களாகவும் இருந்ததைத் தணிக்கை கவனித்தது.

உறுப்பினர் விண்ணப்பங்களை அங்கீகரிப்பதில் ஏற்படும் அசாதாரண தாமதங்கள் பதிவுச் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை காட்டுவதோடு, தொழிலாளர்கள் TNCWWBல் உறுப்பினராக ஆன பின்னரே எந்தவொரு நன்மையையும் கிடைக்கக்கூடும் என்பதால் இது அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக இருக்கிறது.

இது, அடுத்த வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பதிவு மற்றும் புதுப்பித்தலுக்கான காலக்கெடு நிர்ணயிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

## 4.6 மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவு

புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களை TNCWWB உடன் பதிவு செய்ய வேலை அளிப்போர்களை வழிநடத்தும் பணி DISH இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்படாத புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விவரங்களைக் கொண்ட ஒரு மாத கால அறிக்கையை, DISH, தொழிலாளர் ஆணையர் மற்றும் TNCWWBக்கு சமர்ப்பிக்க வேண்டும். TNCWWBன் செயலர், தற்போதைய வேலை அளிப்போரால் வழங்கப்பட்ட சான்றிதழின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு அவர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அடையாளம் காணப்பட்ட, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் புகைப்படங்கள் கட்டுமான தளத்தில் எடுக்கப்பட்டு, அவர்களின் தரவு தொடர்புடைய ACL-SSS அலுவலகங்களால் செயலாக்கப்பட்டு, பதிவு அட்டை ஒரு வாரத்திற்குள் வேலை தளத்தில் வழங்கப்படும். மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், TNCWWB மூலம் செயல்படுத்தப்படும் ஓய்வூதியம் தவிர்த்து அனைத்து நலத்திட்டங்களுக்கும் தகுதியுடையவர்கள்.

மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் வேலை அளிப்போர்களின் விவரங்களும் மாவட்ட ஆட்சியர்கள், DISH மற்றும் LW&SDD இணையவழி போர்ட்டல் வழியாக பெறப்படுகின்றன. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் (நவம்பர் 2022) மேலாண்மை தகவல் அமைப்பின்படி (MIS), 1.30 இலட்சம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வலைதள போர்ட்டல் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளனர்,

இதில் 29 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச்(UT) சேர்ந்த 7,319 கட்டுமானத் தொழிலாளர்களும் உள்ளனர் (**இணைப்பு 4.9**). கோவிட்-19 பெருந்தொற்றின் போது (மார்ச் 2020), மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த 1.45 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள்(Dry Ration Kits) விநியோகிக்கப்பட்டன. மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த 1.45 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தொடர்பான எந்த தரவையும் TNCWWB பராமரிக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. மேலும், தொழிலாளர் ஆணையரக போர்ட்டலில் பதிவு செய்திருந்த 7,319 மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை.

மார்ச் 2023 நிலவரப்படி, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த ஒரு தொழிலாளர் கூட TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை என்று தணிக்கை கண்டது. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, பார்வையிடப்பட்ட கட்டுமான தளங்களில் மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த 398 தொழிலாளர்கள் இருந்தது கவனிக்கப்பட்டது மற்றும் அவர்களில் ஒருவரும் TNCWWBல் பதிவு செய்யப்படவில்லை (**இணைப்பு 4.10**). புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பதிவு செய்ய அரசு மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த போதிலும், மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களை பதிவு செய்யாதது அவர்களுக்கான திட்டப் பலன்கள் கிடைப்பதை தடுப்பதாக இருந்தது. மேலும், இடையூறு இல்லாமல் பலன்களைப் பெறுவதற்காக, சிறப்பு நோக்கத் திட்ட (Mission Mode Project - MMP) முன்மொழிவின்படி, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பெயர்வினை (Portability) TNCWWB தொடங்கவில்லை.

மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த 24,274 தொழிலாளர்கள், மார்ச் 2020ல் பதிவு செய்யப்பட்டிருந்தனர் என்றும் பதிவு செய்யாதது/புதுப்பிக்காதது போன்றவை, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்தலாலும் மற்றும் புதுப்பித்தலின் குறுகிய கால இடைவெளியான ஒரு வருடம் என்பதாலும் இருக்கக்கூடும் என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (நவம்பர் 2022).

தொழிலாளர்களின் TNCWWB உடனான பதிவு சட்டப்பூர்வமாக செயல்படுத்தப்பட முடியாது என்றும், கட்டுமானத் தளங்களில் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்களைப் பதிவு செய்ய, அவர்களின் வேலை அளிப்போர்களை ஊக்குவிக்கும்படி கள அளவிலான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). மேலும், மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் இணையவழி பதிவு 20 ஜூலை 2022 அன்று தொடங்கப்பட்டதாகவும், இதுவரை, 67 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அந்தந்த ACL-SSSன் கீழ் பரிசீலிக்கப்படுவதாகவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. மாநிலங்களுக்கு இடையே இடம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களின் சேர்க்கையை எளிதாக்குவதற்கு பயனுள்ள IEC செயல்பாடு தேவை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 4.7 முடிவுரை

TNCWWB 1994ல் உருவாக்கப்பட்ட போதிலும், அமைப்புசாரா கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவுச் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் தொடர்ந்து கொண்டிருந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் கைமுறையாகவும் மற்றும் மின்னணு முறையிலும் பதிவுசெய்யப்பட்ட தரவுகளில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் ஆதார் எண், கைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற முக்கியத் தகவல்களைப் பதிவு செய்வதில் உள்ள துல்லியமின்மை, பதிவு தரவுத்தளத்தின் தரத்தை பாதித்தன. முறையான கணக்கெடுப்பின் மூலம் தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களைக் கண்டறிவதில் உள்ள குறைபாடு காரணமாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பதிவு செய்யப்படவில்லை. மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களை, அதன் கீழ் கொண்டு வருவதற்கு TNCWWB பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த்தாக மதிப்பிடப்பட்ட 1.45 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுள் ஒருவரும் TNCWWB உடன் பதிவு செய்யப்படவில்லை.

## 4.8 பரிந்துரைகள்

- DISH உடன் ஒருங்கிணைந்து, மாநிலங்களுக்கு இடையே புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட தளங்களில் உள்ள தகுதியுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் சேர்க்கப்பட்டிருப்பதை TNCWWB உறுதிசெய்ய வேண்டும்
- கட்டுமானத் தொழிலாளர்களின் கணக்கெடுப்புக்கு அரசு உத்தரவு வழங்க வேண்டும் மற்றும் தகுதியுள்ள அனைத்து தொழிலாளர்களும் TNCWWB உடன் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- TNCWWB, அதன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு சிக்கலற்ற பலனை அளிப்பதற்கு, அவர்களின் தரவுத்தளத்தின் தரத்தை உறுதி செய்ய வேண்டும்.
- தொழிலாளர்களின் பொதுநலனுக்காக அவர்கள் TNCWWB உடன் பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்கும்படி TNMW சட்டம், 1982 மற்றும் TNBOCW விதிகள், 2006ஐ அரசு திருத்தி அமைக்க வேண்டும். இதற்கு இணங்காத வேலை அளிப்போர்கள்/ஒப்பந்ததாரர்களைத் தடை செய்ய ஒரு தண்டனை பிரிவும் சேர்க்கப்படலாம்.

# அத்தியாயம் V

# நலத்திட்டங்களின் அமலாக்கம்

## அத்தியாயம் V

## நலத்திட்டங்களின் அமலாக்கம்

**பயனாளிகளின் பணக்கோரல்களை செயலாக்குவதில் இருந்த அதிகமான தாமதங்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தியது. தகுதிக்கான அளவுகோல்களில் இருந்த தெளிவின்மை, உறுப்பினர்களிடையே விழிப்புணர்வு இல்லாமை மற்றும் உதவிக்கான கோரிக்கைகளை கையாளும் அதிகாரிகளின் கவனக்குறைவு ஆகியவற்றால், கோவிட்-19 பெருந்தொற்றின் போது அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு பண உதவி உட்பட பலன்கள் எதுவும் வழங்கப்பட இயலாமல் போயிற்று. அதே நேரத்தில், கணிசமான எண்ணிக்கையிலான பயனாளிகள் கோவிட் பண உதவியை ஒன்றுக்கு மேற்பட்ட முறை பெற்றுள்ளனர்.**

## 5.1 TNCWWBன் நலத்திட்டங்கள்

கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக TNCWWB பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. TNCWWB ஆல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (அ) ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், (ஆ) சுய மற்றும் குழந்தைகளுக்கான திருமண உதவித் திட்டம், (இ) குழந்தைகள் கல்வி உதவி, (ஈ) மகப்பேறு உதவி, (உ) இறப்பு மற்றும் இறுதிச் சடங்கு உதவி, (ஊ) பணியிடத்தில் விபத்துக்கான இழப்பீடு போன்றவை ஆகும். திட்டத்தின் விவரங்கள் **இணைப்பு 5.1ல்** பட்டியலிடப்பட்டுள்ளன. 2017-22 ஆண்டுகளில், **விளக்கப்படம் 5.1/இணைப்பு 5.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 7.85 இலட்சம் பயனாளிகளுக்கு ₹603.48 கோடியை பல்வேறு உதவி திட்டங்களுக்காக TNCWWB வழங்கியுள்ளது.

**விளக்கப்படம் 5.1: TNCWWB மூலம் வழங்கப்பட்ட உதவி வகைகள்**
**(₹ கோடியில்)**




(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட தரவு)

## 5.2 TNCWWBன் ஓய்வூதியத் திட்டம்

TNCWWBன் மொத்த செலவில், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்திற்காக வழங்கப்படுவது சுமார் 73 விழுக்காடு ஆகும். 60 வயதை அடையும் உறுப்பினர்கள் அல்லது 60 வயதை அடையும் முன் மருத்துவ காரணங்களால் இயலாமை நிலை அடைந்தவர்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள். ஓய்வூதியம் பெறுபவரின் மறைவுக்குப் பிறகு, அவரது மனைவி குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்.

ஓய்வூதியம்/இயலாமை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களின் மீதான தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- **ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத் தொகையை சீராய்வு செய்யாதது:** டிசம்பர் 2011 முதல் ஓய்வூதியத் தொகையானது மாதம் ₹500ல் இருந்து ₹1,000 ஆக உயர்த்தப்பட்டது. பிப்ரவரி 2023 நிலவரப்படி, வாழ்க்கைச் செலவிற்கான நம்பகமான அளவுகோலான மொத்த விற்பனை விலைக் குறியீட்டில்[21] (Whole Sale Price index - WPI) 50.9 விழுக்காடு அதிகரித்த போதிலும், கடந்த 12 ஆண்டுகளில், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் திருத்தப்படவில்லை. TNCWWB உடனான உபரி நிதி தொடர்ந்து அதிகரித்து வந்த போதிலும், உறுப்பினர் பிரதிநிதிகளின் தொடர் கோரிக்கை மீது தமிழ்நாடு அரசு எவ்வித முடிவும் எடுக்கவில்லை என்பதும் கவனிக்கப்பட்டது. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் முறையே மாதம் ₹3,000 மற்றும் ₹2,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.
- **சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்துடன் ஒப்பீடு:** ஓய்வூதியத் தொகை, 60 வயதுக்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகைக்கு சமமாக இருந்தது. எனவே, பெரும்பாலான தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர்களாக இருக்கக்கூடுமாதலால், TNCWWB வழங்கும் ஓய்வூதியத்தை ஓய்விற்கான ஈடாக கருதப்பட இயவில்லை.
- இறந்த ஓய்வூதியதாரரின் மனைவி/கணவருக்கான குடும்ப ஓய்வூதியம், ஆகஸ்ட் 2018ல் ₹400ல் இருந்து ₹500 ஆக உயர்த்தப்பட்டது. இதனோடு ஒப்பிடுகையில், ஆதரவற்ற விதவைகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மாதம் ₹1,000 ஆக இருந்தது. தமிழ்நாடு அரசின் இத்திட்டத்துடன் கூட பொருந்தாமல், குடும்ப ஓய்வூதியத்தினை ஆகஸ்ட் 2018 முதல் ₹500 என்று TNCWWB நிர்ணயித்திருந்தது. இதனுடன் ஒப்பிடும் பொழுது, மற்ற மாநிலங்களில் ஓய்வூதியமானது மிக அதிகமாக இருந்தது. (எ.கா) டெல்லியில்

[21] WPI, அடிப்படை ஆண்டான 2011-12ன் 100 விழுக்காட்டிற்கு எதிராக பிப்ரவரி 2023ல் 150.9 விழுக்காடாக இருந்தது.

ஒரு மாதத்திற்கு ₹1,500ம் பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசத்தில் (UP) ₹1,000ம் அனுமதிக்கப்பட்டிருந்தது.

- ஓய்வூதியம் பெறுபவரின் மரணத்திற்குப் பிறகு அவரின் துணைவர்/துணைவி மட்டுமே, அவரின் குடும்ப ஓய்வூதியம் பெற உரிமை பெற்றவர். ஆனால், பதிவு செய்யப்பட்ட தொழிலாளரின் மரணத்திற்குப் பிறகு அவரது மனைவி/கணவருக்குப் இது பொருந்தாது. இந்த முரண்பாடான சூழ்நிலை, உறுப்பினர்களின் குடும்பங்களின் நல்வாழ்வை உறுதி செய்வதில் உள்ள ஒரு குறைபாடு ஆகும்.

- **ஓய்வூதியத் தகுதிக்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை நிர்ணயிக்காமை:** BOCW சட்டத்தின்படி, ஒரு தொழிலாளர் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்தால் மட்டுமே ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். இருப்பினும், TNCWWB ஓய்வூதியத் திட்டத்தின்படி, ஒவ்வொரு உறுப்பினரும் 60 வயதை அடைந்தவுடன், உறுப்பினர்கான பரிந்துரைக்கப்பட்ட காலவரையறை ஏதுமின்றி ஓய்வூதியத்திற்குத் தகுதியடைகிறார்கள். 2020-22ல் அனுமதிக்கப்பட்ட 54,723 புதிய ஓய்வூதியங்களின் மீதான தணிக்கைப் பகுப்பாய்வு, 18,463 பேர் (34 விழுக்காடு) மூன்று ஆண்டுகளுக்கும் குறைவாக TNCWWBல் உறுப்பினர்களாக இருந்துள்ளனர் எனவும், இவர்களுள், 59 பேர், உறுப்பினராகி ஒரு மாதத்திற்குள்ளாகவும், 3,889 பேர், உறுப்பினர்களாக சேர்ந்த ஓராண்டுக்குள்ளும் ஓய்வூதியம் பெற்றுள்ளனர் எனவும் வெளிப்படுத்தியது. 60 வயதை அடையப் போகும் தருணத்தில் பதிவுசெய்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, ஓய்வூதிய பலன்களைப் பெறுவதற்காக மட்டுமே இப்பதிவு நேர்ந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. TNCWWBன் தற்போதைய ஓய்வூதியத் திட்டம், உறுப்பினர் பதிவுபெற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஓய்வூதியத் தகுதியை மட்டுப்படுத்தாததால், இத்திட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிராகரிக்கப்பட இயலாது என்று தணிக்கை கவனித்தது

- **ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம்:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான ஓய்வூதியத் தரவுத்தளத்தின் பகுப்பாய்வு, TNCWWB/ACL-SSS அலுவலகங்கள் மூலம் 54,723 ஓய்வூதிய மனுக்களை அனுமதிப்பதற்கு எடுக்கப்பட்ட காலம் ஒரு நாள் முதல் 770 நாட்கள் வரையாகவும் சராசரியாக 232 நாட்களாகவும் இருந்தது என்பதை வெளிப்படுத்தியது. பகுப்பாய்வின் விவரங்கள் **அட்டவணை 5.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1: ஓய்வூதிய மனுக்களை செயலாக்குவதற்கு எடுக்கப்பட்ட நேரம்**

| வ. எண் | தாமத காலம் | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் | | தெரிவு செய்யப்படாத மாவட்டங்கள் | | அனைத்து மாவட்டங்களும் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | விழுக்காடு | அனுமதிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | விழுக்காடு | செயலாக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
| 1 | ஆறு மாதங்களுக்குள் | 10,500 | ***19*** | 12,301 | *22* | 22,801 | ***42*** |
| 2 | ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை | 11,483 | ***21.0*** | 11,580 | *21* | 23,063 | ***42*** |
| | ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் | 4,208 | ***8*** | 4,599 | *8* | 8,807 | ***16*** |
| | இரண்டு ஆண்டுகளுக்கு மேல் | 22 | ***0*** | 30 | *0* | 52 | ***0*** |
| | மொத்த தாமதம் – ஆறு மாதங்களுக்கு மேல் | **15,713** | ***29*** | **16,209** | ***30*** | **31,922** | ***58*** |
| | **அனுமதியளிக்கப்பட்ட மொத்த இனங்கள் (1+2)** | **26,213** | ***48*** | **28,510** | ***52*** | **54,723** | ***100*** |

(ஆதாரம்: TNCWWB வழங்கிய தரவு)

- **ஓய்வூதிய மனுக்களை நிராகரித்தல்:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான தரவுகளின் பகுப்பாய்வில், மொத்தம் 4,052 ஓய்வூதிய கோரிக்கைகள் TNCWWB/ACL-SSS அலுவலகங்களால் நிராகரிக்கப்பட்டது. அவற்றில் 1,142 (28 விழுக்காடு) ஆறு மாதங்களுக்குள்ளாகவும், 2,910 (72 விழுக்காடு) ஆறு மாதங்களுக்குப் பின்னதாகவும் நிராகரிக்கப்பட்டன. **அட்டவணை 5.2**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, நிராகரிப்புக்கான காரணங்களின் விரிவான ஆய்வில், நியாயமற்ற நிராகரிப்புகள் இருப்பதை வெளிப்படுத்தியது.

**அட்டவணை 5.2: கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான காரணங்கள்**

| தவறான காரணங்கள்/நிராகரிப்பிற்கான காரணங்கள் இல்லை | நேர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| கோவிட்–19 பெருந்தொற்றின் போது பதிவை புதுப்பிக்காதது | 1,044 |
| காரணங்கள் கொடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டது | 214 |
| MGNREGA தொழிலாளர்கள்/PM KISAN பயனாளிகள் காரணம் கொடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டனர் | 13 |
| காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை – காலியாக வைக்கப்பட்டுள்ளது | 7 |
| தகுதியற்ற காரணங்கள் (எ.கா., சரி, அங்கீகரிக்கப்பட்டவை, அனைத்து பதிவுகளும் சரி, மனைவி/கணவர்அரசு ஊழியர் போன்றவை) | 10 |
| **தவறான நிராகரிப்புகளின் மொத்தம்** | **1,288** |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு)

**அட்டவணை 5.2ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, 1,288 (32 விழுக்காடு) மனுக்கள், எந்த காரணமும் கூறப்படாமல் அல்லது தகுதியற்ற காரணங்களை மேற்கோள் காட்டி நிராகரிக்கப்பட்டன. மார்ச் 2020ல் தங்கள் பதிவை புதுப்பிக்காதவர்களுக்கு, டிசம்பர் 2021 வரையிலான கால நீட்டிப்பை, செப்டம்பர் 2020 மற்றும் ஜூலை 2021ல் தமிழ்நாடு அரசு அனுமதித்திருந்தது. இருப்பினும் கோவிட் பெருந்தொற்று காலத்தில் தங்கள் பதிவை புதுப்பிக்காத 1,044 உறுப்பினர்களின் ஓய்வூதிய விண்ணப்பங்களை நிராகரிக்கும் போது மேற்கூறப்பட்ட காலநீட்டிப்பு சலுகை கருத்தில் கொள்ளப்படவில்லை.

**குடும்ப ஓய்வூதிய ஒப்பளிப்புகள்:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரை அனுமதிக்கப்பட்ட 21 குடும்ப ஓய்வூதியங்களின் பகுப்பாய்வில், சராசரியாக 382 நாட்கள் தாமதம் இருந்ததை தணிக்கை கண்டறிந்தது, இதில் 323 நாட்கள் (85 விழுக்காடு) மாவட்ட அலுவலகங்களில் ஏற்பட்ட தாமதாமகும்.

**இயலாமை ஓய்வூதிய ஒப்பளிப்புகள்:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான ஆண்டுகளில் அனுமதி வழங்கப்பட்டிருந்த 10 இயலாமை ஓய்வூதியங்களின் பகுப்பாய்வில், சராசரியாக 149 நாட்கள் தாமதம் இருந்ததை தணிக்கை கவனித்தது, அதில் 131 நாட்கள் (88 விழுக்காடு) மாவட்ட அலுவலகங்களில் ஏற்பட்ட தாமதாமகும்.

ஓய்வூதிய மனுக்களை அனுமதிப்பதில் இருந்த அதிக தாமதம் மட்டுமின்றி, வேறு பல மாநிலங்களை விட ஓய்வூதியத்தின் அளவு குறைவாக இருந்ததையும், அது 11 ஆண்டுகளுக்கும் மேலாக தேக்கநிலையில் இருந்ததையும் தணிக்கை கவனித்தது. இதனிடையே, TNCWWBன் செஸ் நிதி தொடர்ந்து அதிகரித்து வந்தது. BOCW சட்டத்துடன் ஒப்பிடுகையில், ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான தகுதி நிபந்தனைகளில் இருந்த தளர்வானது திட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடும்.

## 5.3 TNCWWBன் திருமணம் மற்றும் மகப்பேறு உதவித் திட்டம்

திருமண உதவித் திட்டத்தின் கீழ், பிப்ரவரி 2011 முதல், உறுப்பினரான பெண் தொழிலாளர் அல்லது அவரைச் சார்ந்திருக்கும் பெண், ₹5,000மும் மற்றும் ஆண் தொழிலாளர் அல்லது அவரைச் சார்ந்திருக்கும் ஆண், ₹3,000மும் உதவித் தொகையாகப் பெறத் தகுதியுடையவர்கள். இத்தொகையானது, மே 2022 முதல் உறுப்பினர் அல்லது அவரைச் சார்ந்தவர்களின் திருமணத்திற்கு, ₹20,000 ஆக உயர்த்தப்பட்டது. மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், பெண் உறுப்பினர்கள், டிசம்பர் 2016 முதல், ₹6,000மும், மே 2022ல் இருந்து, முதல் இரண்டு பிரசவங்களுக்கு, ₹20,000மும் உதவித் தொகையாகப் பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். 2017-22 ஆண்டுகளில், TNCWWB, 8,018 திருமண உதவிக் கோரிக்கைகளுக்காக, ₹2.94 கோடியையும், 137 மகப்பேறு உதவிக் கோரிக்கைகளுக்காக ₹5 இலட்சமும் செலவிட்டது.

தணிக்கை ஆய்வில் பின்வருவன வெளிப்படுத்தப்பட்டன:

- **திருமண உதவி:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரை, 1,046 பேர் மட்டுமே திருமண உதவிகளைப் பெற்றுள்ளனர்.
- 38 மாவட்டங்களுள் இரண்டில்[22], எந்த உறுப்பினரும் திருமண உதவி கோரவில்லை. பிற மாவட்டங்களுள், இராணிப்பேட்டை (ஒன்று), கள்ளக்குறிச்சி (மூன்று), காஞ்சிபுரம் (மூன்று), மயிலாடுதுறை (நான்கு) மற்றும் விழுப்புரம் (நான்கு) ஆகிய மாவட்டங்களில் இருந்து குறைந்தபட்ச கோரிக்கைகளே இருந்தன. முறையான IEC செயல்பாட்டின் மூலம் இந்தத் திட்டம் பற்றிய தகவல்கள் உறுப்பினர்களைச் சென்றடையவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.
- பெறப்பட்ட விண்ணப்பங்களில் 638ல் (61 விழுக்காடு) ஆறு மாதங்களுக்குள்ளும், 328ல் (31 விழுக்காடு) ஆறு முதல் 12 மாதங்களுக்குள்ளும், மற்றும் 80ல் (எட்டு விழுக்காடு) ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்டும் உதவித்தொகை வழங்கப்பட்டது. மேலும், 90 விண்ணப்பங்கள் (எட்டு விழுக்காடு[23]) நிராகரிக்கப்பட்டன. உதவியை வழங்குவதில் ஏற்பட்ட அதிக கால தாமதங்கள், உறுப்பினர்களின் திருமண செலவினங்களுக்கு உதவும் நோக்கத்தை தோற்கடித்தது.
- **மகப்பேறு உதவி:** தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு, மாநிலத்தின் முதன்மை சுகாதார அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள, பிரபல டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மைத் திட்டத்தின் கீழ், இதேபோன்ற உதவி அளிக்கப்பட்டதன் காரணமாக,

---

[22] கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள்.

[23] 1,136 கோரிக்கை விண்ணப்பங்களில் (1,046 அங்கீகரிக்கப்பட்டன மற்றும் 90 நிராகரிக்கப்பட்டன).

மகப்பேறு உதவியைப் பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது (அதாவது 137 இனங்கள்). இவ்வாறாக, TNCWWBன் இந்த திட்டத்தின் பலனை அதிக எண்ணிக்கையிலானோர் பெறவில்லை.

- 38 மாவட்டங்களுள் 31ல், ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரை, எந்த உறுப்பினரும் மகப்பேறு உதவியைக் கோரவில்லை என்பது, இந்தத் திட்டம் தொழிலாளர்களை ஈர்க்கவில்லை என சுட்டிக்காட்டுகிறது.
- 18 மனுக்களின் தணிக்கை பகுப்பாய்வு, கோரிக்கைகளைச் செயல்படுத்த சராசரியாக 179 நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டதையும், அதில் மாவட்ட அலுவலகங்கள் 161 நாட்கள் (90 விழுக்காடு) எடுத்துக் கொண்டதையும் வெளிப்படுத்தியது.

இவ்வாறு, திருமணம் மற்றும் மகப்பேறு உதவித்திட்டம் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும்/அல்லது ஒரே மதிரியான பொருளாதார நிலையில் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடிய அதே மாதிரியான வேறு திட்டம் இருந்ததன் காரணமாக, மேற்கூறப்பட்ட திட்டங்கள் ஒரு சிறிய எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கே பயன்பட்டதை தணிக்கை கண்டறிந்தது.

## 5.4 TNCWWBன் கல்வி உதவித் திட்டம்

TNCWWB, **அட்டவணை 5.3**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் இரண்டு குழந்தைகளின் கல்விக்காக உதவி வழங்குகிறது.

**அட்டவணை 5.3 கல்வி உதவி**

| வ. எண் | உதவியின் தன்மை | உதவித் தொகை |
|---|---|---|
| 1 | ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு | அக்டோபர் 2021 முதல் ஒரு ஆண்டுக்கு ₹1,000 |
| 2 | 10-ம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு | அக்டோபர் 2021 முதல் ஒரு ஆண்டுக்கு ₹2400 மற்றும் இதற்கு முன்பு ஒரு ஆண்டுக்கு ₹1000 |
| 3 | 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு | டிசம்பர் 2021 முதல் ஒரு ஆண்டுக்கு ₹3,000 இதற்கு முன்பு - வகுப்பு 11 - ஒரு ஆண்டுக்கு ₹1,000 மற்றும் வகுப்பு 12 - ஒரு ஆண்டுக்கு ₹1,500 |
| 4 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் குழந்தைகளுக்கு | அக்டோபர் 2021 முதல் ₹2,400, இதற்கு முன்பு ₹1,000. |
| 5 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் குழந்தைகளுக்கு | அக்டோபர் 2021 முதல் ₹3,000 முன்பு ₹1,500. |
| 6 | ITI/பாலிடெக்னிக் படிக்கும் குழந்தைகளுக்கு | மே 2022 முதல் ஒரு ஆண்டுக்கு ₹3,000 மற்றும் இதற்கு முன்பு ₹1,000 |
| 7 | கலை/அறிவியலில் இளங்கலை படிப்பிற்கு | அக்டோபர் 2021 முதல் ஒரு ஆண்டுக்கு ₹4,000 மற்றும் இதற்கு முன்பு ஒரு ஆண்டுக்கு ₹1,500 |
| 8 | கலை/அறிவியலில் முதுகலை மற்றும் தொழில்சார்ந்த படிப்பிற்கு (BE, MBBS முதலியன) | ஒரு ஆண்டுக்கு ₹4,000 |
| 9 | முதுகலை தொழில்சார்ந்த படிப்பிற்கு | ஒரு ஆண்டுக்கு ₹6,000 |

(ஆதாரம்: TNCWWB வழங்கிய விவரங்கள்)

2017-22ஆம் ஆண்டில், ₹124.01 கோடிக்கு 6.37 இலட்சம் கோரிக்கைகள் அனுமதிக்கப்பட்டன. ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரையிலான கல்வி உதவிக்கான அனுமதி மற்றும் பணம் வழங்குதல் பற்றிய தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- **தகுதியான உறுப்பினர்களுக்கு திட்டப் பலன்கள் அளிக்கப்படாமை:** TNCWWB, 1,15,013 உறுப்பினர்களுக்கான 1,75,822 குழந்தைகளுக்கு ₹38.37 கோடி கல்வி உதவியை வழங்கியது. தணிக்கைக்கு அளிக்கப்பட்ட TNCWWB உறுப்பினர்களின் தரவுத்தளத்தில் தொழிலாளர் குடும்பத்தின் விவரங்கள் எதுவும் இல்லை. எனவே, தகுதியான குழந்தைகளைக் கொண்ட உறுப்பினர்களுக்கே கல்வி உதவி வழங்கப்பட்டதா என்பதை தணிக்கையால் மதிப்பிட முடியவில்லை. இருப்பினும், பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் வயதினைப் பகுப்பாய்வு செய்த தணிக்கை, மார்ச் 2022 நிலவரப்படி, 19.30 இலட்சம் உறுப்பினர்களில் 9.96 இலட்சம் பேர் (52 விழுக்காடு) 35 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தனர் என்றும், உதவி தேவைப்படும்/உதவி பெற தகுதியுடைய மற்றும் பல்வேறு நிலைகளில் கல்வியைத் தொடரக்கூடிய (வகுப்பு 6 முதல் முதுகலை வரை படித்து கொண்டிருக்கும்) சுமார் 11 முதல் 22 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இவர்கள் கொண்டிருக்க அதிக வாய்ப்புள்ளதாகக் கண்டது. இந்த அளவுகோலைப் பயன்படுத்தினால், கணக்கிடப்பட்ட 9.96 இலட்சம் உறுப்பினர்களில் 11 முதல் 22 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட 1.15 இலட்சம் (12 விழுக்காடு) பேர் மட்டுமே TNCWWBயிடமிருந்து கல்வி உதவியைப் பெற்றுள்ளனர். மேலே விவாதிக்கப்பட்டபடி, கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் TNCWWBஆல் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆதலால், 8.81 இலட்சம் (88 விழுக்காடு) உறுப்பினர்களால் திட்டப் பலன்களைப் பெற இயலவில்லை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- **பயனாளிகளில் மாவட்ட அளவிலான ஏற்றத்தாழ்வு:** **அட்டவணை 5.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, கல்வி உதவி பெறும் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் மாவட்ட வாரியான பகுப்பாய்வு பரந்த ஏற்றத்தாழ்வைக் காட்டுகிறது:

**அட்டவணை 5.4: பலன்களைப் பெறுவதில் மாவட்ட அளவிலான ஏற்றத்தாழ்வு**

| மாவட்டம் | TNCWWB உடன் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 11 முதல் 22 வயது வரையிலான குழந்தைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படும் 35 முதல் 50 வயதுக்குட்பட்ட உறுப்பினர்கள் (மொத்த உறுப்பினர்களில் இவர்களின் விழுக்காடு) | ஓராண்டிற்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | கல்வி உதவி கோரும் உறுப்பினர்களின் மதிப்பிடப்பட்ட விழுக்காடு |
|---|---|---|---|---|
| **சிறப்பாக செயல்படும் மாவட்டங்கள்** | | | | |
| பெரம்பலூர் | 29,114 | 15,624 (*53.66*) | 2,992 | *19* |
| கன்னியாகுமரி | 1,27,482 | 60,539 (*47.49*) | 9,669 | *16* |
| நாமக்கல் | 76,340 | 37,259 (*48.81*) | 5,766 | *15* |
| சிவகங்கை | 50,381 | 28,229 (*56.03*) | 4,059 | *14* |
| தூத்துக்குடி | 37,838 | 19,169 (*50.66*) | 2,648 | *14* |
| **சிறப்பாக செயல்படாத மாவட்டங்கள்** | | | | |
| புதுக்கோட்டை | 49,856 | 27,562 (*55.28*) | 1,136 | *4* |
| வேலூர் | 76,849 | 39,647 (*51.59*) | 1,631 | *4* |
| விழுப்புரம் | 59,042 | 32,341 (*54.78*) | 1,244 | *4* |
| காஞ்சிபுரம் | 29,609 | 14,848 (*50.15*) | 514 | *3* |
| திருநெல்வேலி | 23,340 | 11,467 (*49.13*) | 341 | *3* |

(ஆதாரம்: TNCWWB வழங்கிய தரவுகளின் பகுப்பாய்வு)

தொழிலாளர்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததே திட்ட பலன்களைப் பெறாததற்கான காரணமாக இருக்க வாய்ப்பு உள்ளது.

➢ **கல்வி உதவிக்கான விண்ணப்பங்களின் நிராகரிப்பு:** ஆகஸ்ட் 2020 முதல் மார்ச் 2022 வரையுள்ள தரவுகளின் பகுப்பாய்வு, TNCWWB/ACL-SSS அலுவலகங்கள் கல்வி உதவிகளுக்கான மொத்தம் 5,584 விண்ணப்பங்களை நிராகரித்ததாக வெளிப்படுத்தியது; அவற்றில் 4,884 விண்ணப்பங்கள் (87 விழுக்காடு) ஆறு மாதங்களுக்குள்ளாகவும், 700 விண்ணப்பங்கள் (13 விழுக்காடு) ஆறு மாதங்களுக்குப் பிறகும் நிராகரிக்கப்பட்டன. நிராகரிப்புக்கான காரணங்களை விரிவாக ஆராய்ந்ததில், கோவிட் பெருந்தொற்று காலத்தில் உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படுவதை தமிழ்நாடு அரசின் அரசாணைகள் (செப்டம்பர் 2020 மற்றும் ஜூலை 2021) மார்ச் 2020லிருந்து டிசம்பர் 2021க்கு நீட்டித்திருந்தும், உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படாததை காரணம் காட்டி 1,171 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

பெரும்பாலான உறுப்பினர்களுக்கு கல்வி உதவி கிடைக்காமல் இருப்பதற்கு அவர்களிடையே விழிப்புணர்வு இல்லாமையே காரணமாக இருக்கலாம் என்று தணிக்கை கண்டறிந்தது. மேலும், கோவிட் பெருந்தொற்றின் போது உறுப்பினர்கள் தகுதிக்காக புதுப்பிக்கப்படுதலை வலியுறுத்த வேண்டாம் என்ற அரசின் குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், கோவிட் காலத்தில், புதுப்பிக்காதவர்களிடமிருந்து

பெறப்பட்ட கல்வி உதவி கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. முரண்பாடாக, **பத்தி 5.5**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, TNCWWB, கோவிட் பெருந்தொற்றின் போது உறுப்பினர் அல்லாதவர்களுக்கு, திட்டப் பலன்கள் மற்றும் பண உதவியை அளித்துள்ளது.

## 5.5 தகுதியற்ற நபர்களுக்கு அளிக்கப்பட்ட உதவி

**பத்தி 4.6ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, TNeGA, பயனாளிகளின் தரவுகளின் தரவுத் தூய்மைப் பயிற்சியை மேற்கொண்டு (2022), தொடர்ந்து தரவுத்தளத்தில் இருந்து வரும் தகுதியற்றவர்களாக இருக்கக்கூடியவர்களை அறிவித்தது. இருப்பினும், TNCWWB, 'தகுதியற்றவர்கள்' எனக் கண்டறியப்பட்டவர்களைத் தரவுத்தளத்திலிருந்து நீக்க எந்த ஒரு தேர்ந்தாய்வையும் நடத்தவில்லை.

தகுதியற்ற பயனாளிகள் பற்றிய TNeGAன் மின்னணுத் தரவை TNCWWBன் ஓய்வூதியதாரர்களின் மின்னணுத் தரவுகளுடன் தணிக்கை ஒப்பிட்டதில், தகுதியற்ற நபர்கள் 2020-22ல் திட்டப் பலன்களைப் பெற்றிருப்பதைக் கண்டறிந்தது. TNeGA தரவுகளின்படி, கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் பலன்கள் வழங்கப்பட்டதற்கான காரணங்கள் **அட்டவணை 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன. பலன்களைப் பெற்ற தகுதியற்ற நபர்களின் திட்ட வாரியான விவரங்களின் பட்டியல் **இணைப்பு 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5: TNeGAன் ஆதார் சரிபார்ப்பு –திட்டப் பலன்களைப் பெற்ற தகுதியற்ற நபர்கள்**

| வ. எண் | தகுதியின்மைக்கான காரணங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (₹ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்/ஓய்வூதியம் பெறுபவரின் ஆதார் ID, அரசு ஊழியர்/ஓய்வூதியதாரர் தரவுத்தொகுப்பில் காணப்பட்டது | 449 | 12.32 |
| 2 | பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்/ஓய்வூதியதாரரின் ஆதார் ID முதிர்வயது ஓய்வூதியதாரர் தரவுத்தொகுப்பில் காணப்பட்டது | 6,662 | 159.04 |
| 3 | பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்/ஓய்வூதியம் பெறுபவரின் ஆதார் எண் பலமுறை காணப்பட்டது | 102 | 6.32 |
| 4 | பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்/ஓய்வூதியம் பெறுபவரின் ஆதார் எண்ணை தவறாக வழங்கியுள்ளார் | 237 | 46.06 |
| 5 | பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்/ஓய்வூதியம் பெறுபவரின் ஆதார் ID இறப்பு தரவுத்தொகுப்பில் காணப்பட்டது | 9 | 1.91 |
| | **மொத்தம்** | **7,459** | **225.65** |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட TNeGA தரவு)

**அட்டவணை 5.5**லிருந்து 7,459 மனுக்களுக்கான ₹2.26 கோடியை தகுதியில்லாத நபர்கள் பெற்றிருப்பதை காண முடிகிறது. இதேபோல், தகுதியில்லாத 9,116 நபர்கள் TNCWWB மூலம் ஓய்வூதியப் பலன்களைப் பெற அனுமதிக்கப்பட்டிருந்தனர். இது ஒரு ஆண்டுக்கு ₹10.94 கோடி செலவினத்தைக் கொண்டிருந்தது.

மேலும், தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில், தகுதியில்லாத நபர்கள் குறித்த TNeGAன் மின்னணுத் தரவை கோவிட் பண உதவியின் கைப்பதிவு தரவுகளுடன் (manual data) சரிபார்த்த தணிக்கை, **அட்டவணை 5.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தகுதியற்ற 27,943 நபர்கள் ₹5.78 கோடி கோவிட் பண உதவியைப் பெற்றுள்ளதைக் கண்டறிந்தது.

**அட்டவணை 5.6: TNeGA-ஆல் ஆதார் சரிபார்ப்பு - கோவிட் பண உதவி பெற்ற தகுதியற்ற நபர்கள்**

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (₹ இலட்சத்தில்) |
|---|---|---|
| சென்னை | 1,398 | 40.42 |
| தருமபுரி | 4,468 | 89.36 |
| காஞ்சிபுரம் | 2,466 | 55.77 |
| சேலம் | 9,979 | 199.58 |
| திருவண்ணாமலை | 9,632 | 192.64 |
| **பெரும் மொத்தம்** | **27,943** | **577.77** |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட TNeGA தரவு)

TNeGA குறைபாடுகளை ஆகஸ்ட் 2022லேயே அறிவித்திருந்த போதிலும், சரியான நடவடிக்கை எடுப்பதற்கான கள ஆய்வு TNCWWBஆல் தொடங்கப்படவில்லை (மார்ச் 2023) என்பதை தணிக்கை கண்டறிந்தது. தகுதியற்ற நபர்களைப் பற்றிய TNeGAன் அறிக்கைகளை உரிய முறையில் சரிபார்த்த பிறகு, தகுதியற்ற நபர்களைப் பதிவு செய்த அதிகாரிகள்/தொழிற்சங்கங்களுக்கு எதிராக TNCWWB நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட திட்டப் பலன்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

களச் சரிபார்ப்பு அறிக்கைகளைச் சமர்ப்பித்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இது ஏற்கனவே TNCWWBக்கு தெரிந்திருந்தாலும், அதற்கான திருத்த நடவடிக்கை சரியான நேரத்தில் எடுக்கப்படவில்லை என்பதே நிலைநிற்கிறது.

## 5.6 பணியிடத்தில் இறந்தவர்களுக்கு விபத்து நிவாரணம் வழங்குவதில் இருந்த குறைபாடுகள்

தமிழ்நாடு அரசின் உத்தரவுகளின்படி (மார்ச் 2016), வேலையின் போது பணியிடத்தில் விபத்து காரணமாக உயிரிழக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்தின் நியமிக்கப்பட்டவர்களுக்கு ₹5 இலட்சம் தனிப்பட்ட விபத்து நிவாரணம் வழங்கப்படுகிறது. TNCWWB பதிவு

செய்யப்படாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இந்த உதவி வழங்கப்பட்டது. மேலும், பணியிடத்தில் விபத்து காரணத்தால், மரணம் மருத்துவமனையில் ஏற்பட்டாலும் அனைத்து தொழிலாளர்களுக்கும் இந்த உதவி நீட்டிக்கப்பட்டது (ஆகஸ்ட் 2018).

தொழிலாளர் ஆணையரே விண்ணப்பங்களை அனுமதிக்கும் அதிகாரம் கொண்டவர். 2017-22 ஆண்டுகளில், அனுமதிக்கப்பட்ட மொத்த 147 கோரிக்கைகளில், 26 மட்டுமே பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுடன் தொடர்புடையது. மீதமுள்ள 121 கோரிக்கைகளும் பதிவு செய்யப்படாத தொழிலாளர்கள் தொடர்பானவை. செஸ் நிதியைப் பயன்படுத்தும் திட்டங்கள் கட்டுமானத் தொழிலாளர்களாகப் பதிவுசெய்யப்பட்ட நபர்களுக்குப் பயனளிக்க வேண்டும். இவ்வாறாக, TNCWWBல் பதிவு செய்யப்படாத நபர்களுக்கும் பலன்களை நீட்டிப்பது என்பது தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களை சமூகப் பாதுகாப்பு வலையின் கீழ் உள்ளடக்காததை உணர்த்துவதாக உள்ளது. 2017-22 ஆண்டுகளில் பணியிடத்தில் ஏற்பட்ட மரணம் தொடர்பான கோரிக்கைகளின் மதிப்பாய்வில், தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- இறந்த தேதியிலிருந்து கோரிக்கைகள் அனுமதிக்கப்பட்ட தேதி வரை சராசரியாக 629 நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 35 நேர்வுகளில் (24 விழுக்காடு) மட்டுமே ஆறு மாதங்களுக்குள் உதவி வழங்கப்பட்டது. 93 நேர்வுகளில் (63 விழுக்காடு) , ஒரு ஆண்டுக்கும் மேலாக கால அவகாசம் எடுத்துக்கொள்ளப்பட்டது.
- விபத்து நிவாரணம் கொடுப்பதற்கு, FIR, இறப்புச் சான்றிதழ், சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ் போன்றவற்றுடன் முறைப்படியான விண்ணப்பம் பாதிக்கப்பட்டவரின் உறவினர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ACL-SSS, DISH மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள்/மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை ஆகியோரின் உரிய சரிபார்ப்பிற்குப்பின் தொழிலாளர் ஆணையர் அரசாங்க உத்தரவு வழங்கப்படுவதற்கு, கோரிக்கைகளை மாநில அரசிற்குப் பரிந்துரைக்கின்றார். ACL-SSS, DISH, வருவாய் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் முதலானோர், கட்டாய அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் காட்டும் தாமதம் சில கோரிக்கைகளில் ஏற்படும் அதிகப்படியான தாமதங்களுக்கு முக்கியக் காரணம் என்று தணிக்கை கண்டறிந்துள்ளது.

DISH, மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் வருவாய்/காவல் துறைகளின் குறுக்கு ஒப்பாய்வு (cross verification) போன்றவற்றால் பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து மரணம் காரணமாக பெறப்பட்ட உரிமைக்கோரல்களை செயலாக்குவது தாமதமானது என்றும், அத்தகைய கோரிக்கைகளுக்கான காலக்கெடு ஆறு மாதங்களென நிர்ணயிக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

இந்த செயல்முறையானது பல துறைகளின் ஒருங்கிணைப்பை உள்ளடக்கியது என்பதை ஏற்றுக்கொண்டாலும், 30 இறப்பு நேர்வுகளில்,

உதவிக் கோரிக்கைகள் தாமதமாக அனுமதிக்கப்பட்டதற்கான காரணங்களை தணிக்கை ஆய்வு செய்து பின்வருவனவற்றை கண்டது:

- இறப்பு நேர்வுகள் 30ல் 16 நேர்வுகளில், ACLகளால் சமர்ப்பிக்கப்பட்ட, இறப்பு உதவிக்கான முன்மொழிவுகளில் உள்ள துல்லியமின்மை காரணமாக, ACL மற்றும் தொழிலாளர் ஆணையர் இடையே அவை ஒன்றுக்கு மேற்பட்ட முறை அனுப்பப்பட்டன.
- இறப்பு நேர்வுகள் 30ல் 17 நேர்வுகளில், விண்ணப்பதாரர்/சம்பந்தப்பட்ட துறைகளில் இருந்து அனைத்து ஆதார ஆவணங்களும் கிடைக்கப்பெற்று மூன்று மாதங்களுக்குப் பிறகும், ACLகள் தொழிலாளர் ஆணையரிடம் இறப்பு உதவிக்கான முன்மொழிவை சமர்ப்பிக்கவில்லை.

இவ்வாறு, இறப்பு ஏற்பட்ட குடும்பத்திற்கு, தகுதியான உதவிகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும் பொருட்டு, தடையற்ற பண செலுத்தச் செயல்முறையை TNCWWB ஏற்படுத்தவில்லை என்பதை தணிக்கைக் கண்டறிந்தது.

## 5.7 கோவிட் பண உதவி

**தகுதியான 1.64 இலட்சம் நபர்களுக்கு கோவிட் பண உதவியை வழங்காமை:** ஏப்ரல் 2020ல், கோவிட்-19ன் தீவிர பரவுதலின் காரணமாக வேலையினை இழந்த பதிவு செய்யப்பட்ட 12,13,882 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலா ₹2,000/₹3,000 வீதம் ₹248.29 கோடி பண உதவியை[24] தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. **அத்தியாயம் IV**ல் விவரிக்கப்பட்டபடி, முறையான வங்கி விவரங்களுடன் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் மையப்படுத்தப்பட்ட நம்பகமான தரவு கிடைக்காததால், ACLக்கள் - SSS ஆல் 6.72 இலட்சம் பயனாளிகளுக்கு மட்டுமே கோவிட் பண உதவியை வழங்க முடிந்தது. பின்னர், TNCWWB, மேலும் 3.78 இலட்சம் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு பண உதவியளிக்க ஆதார் அடிப்படையிலான நிதி பரிமாற்றம் மற்றும் பண அஞ்சல் (money order) போன்ற பிற கட்டண முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கியது. மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ₹248.29 கோடிக்கு எதிராக, பதிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு ₹214.74 கோடி மட்டுமே வழங்கப்பட்டு, மீதித் தொகை TNCWWB-க்கு திரும்பியது. தரவுத்தளத்தில் உள்ள சிக்கல்கள் காரணமாக 1.64 இலட்சம் (14 விழுக்காடு) தகுதியான தொழிலாளர்களுக்கு கோவிட் பண உதவி வழங்கப்படவில்லை என்று தணிக்கை கண்டறிந்துள்ளது.

**அதிகப்படியான கோவிட் உதவித்தொகை – ₹33.31 இலட்சம்:** தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களின் கோவிட் உதவித் தொகையின் தரவை மதிப்பாய்வு செய்ததில், **அட்டவணை 5.7**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி ஒன்றிற்கு மேற்பட்ட முறை உதவித்தொகை வழங்கப்பட்டதால்,

[24] சென்னை பெருநகரப் பகுதிக்கு.

1,729 பயனாளிகள், ₹33.31 இலட்சத்தை அதிகமாகப் பெற்றிருப்பது கண்டறியப்பட்டது.

**அட்டவணை 5.7: கோவிட் உதவி – பயனாளிகளுக்கு அளிக்கப்பட்ட அதிகப்படியான தொகை**

| மாவட்டம் | கூடுதல் பணம் பெறப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட அதிகப்படியான தொகை (₹ ல்) | செலுத்தப்பட்ட மொத்த கூடுதல் தொகை (₹ ல்) |
|---|---|---|---|
| திண்டுக்கல் | 1,358 | 2,000 | 27,16,000 |
| தருமபுரி | 5 | 2,000 | 10,000 |
| கன்னியாகுமரி | 127 | 1,000 | 1,27,000 |
| | 233 | 2,000 | 4,66,000 |
| | 1 | 4,000 | 4,000 |
| திருநெல்வேலி | 2 | 1,000 | 2,000 |
| திருநெல்வேலி | 3 | 2,000 | 6,000 |
| **மொத்தம்** | **1,729** | | **33,31,000** |

(ஆதாரம்: TNCWWB வழங்கிய தரவு)

தணிக்கை மூலம் எழுப்பப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் செயல்பட கள நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). கூடுதலாகக் கொடுக்கப்பட்ட தொகை மீட்டெடுப்பு செயலாக்கப்பட்டு வருவதாக மாவட்ட அளவிலான அலுவலர்கள் கூறினர் (மார்ச் 2023).

மேலே உள்ள தணிக்கை முடிவுகள் சோதனைச் சரிபார்ப்பின் அடிப்படையில் அமைந்திருப்பதால், TNCWWB, இந்தச் சிக்கல்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்து தகுந்த திருத்த நடவடிக்கையைத் தொடங்க வேண்டும்.

## 5.8 பாதுகாப்பு கருவிகளின் வழங்கல்

பணியின் போது ஏற்படும் காயங்களைத் தடுக்கும் பொருட்டு, தொழிலாளர்கள் பாதுகாப்பு தலைக் கவசம், மேலங்கி (jacket), காலணிகள் (boots), பாதுகாப்பு கண்ணாடிகள் போன்றவற்றை அணிவது அவசியம் என்று DISH இயக்குநர் மாநில அரசுக்கு முன்மொழிவு[25] செய்தார் (ஜூலை 2018). மேலும், பல மாடி கட்டிடங்கள் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள வேலை அளிப்போர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மட்டுமே தங்கள் கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார். மேலே உள்ள முன்மொழிவின் அடிப்படையில், **அட்டவணை 5.8**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி DISH கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு கருவிகளை கொள்முதல் செய்துள்ளது.

[25] கடிதம் எண். L2/11438/2018 தேதி 18/07/2018.

அட்டவணை 5.8: பாதுகாப்பு கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுதல்

| வ. எ ண் | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (GO) எண் | பயனாளிகளின் எண்ணிக்கை/வாங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் | மேற்கொள்ளப்பட்ட செலவு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அரசாணை (Ms) எண்.141 தேதி 17/10/2018 | 25,000 | 5.46 |
| 2 | அரசாணை (Ms) எண்.97 தேதி 14/05/2020 | 100,000 | 16.73 |
| | **மொத்தம்** | **1,25,000** | **22.19** |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட தகவல்)

தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளது:

- TNBOCW விதிகளின்படி (விதி 42 முதல் 47 வரை), வேலை அளிப்போர்கள் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதன் மூலம் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். BOCW சட்டம், 1996ன் பிரிவு 47, வேலை அளிப்போர்களால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீறப்படும் போது அபராதம், சிறைத்தண்டனை உட்பட தண்டனையை விதிக்க DISHக்கு அதிகாரம் அளிக்கிறது. வேலை அளிப்போர்களால் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற BOCW சட்டம், 1996ன் பிரிவு 47ன் விதிக்கு முரணாக, DISH, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்க முன்மொழிந்தது, தவிர்த்திருக்கக்கூடிய செலவினமான ₹22.19 கோடியை TNCWWB மேற்கொள்ள வழிவகுத்தது.

- கட்டுமானத் தொழிலாளர்கள் விவரங்களை (படிவம் XV), குறிப்பாக TNCWWBன் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை DISH பராமரிக்கவில்லை மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து அறிந்திருக்கவில்லை என்றும் DISH அளித்த பதிலில் இருந்து (செப்டம்பர் 2022) கவனிக்கப்பட்டது. அத்தகைய சூழ்நிலையில், DISHன் முன்மொழிவானது நியாயமற்றதாக இருந்தது.

- பாதுகாப்பு உபகரணங்கள் DISH மூலம் கொள்முதல் செய்யப்பட்டு ACL அலுவலகங்களால் விநியோகிக்கப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் எண்ணிக்கையானது பதிவு செய்யப்பட்ட பயனாளிகளுடன் (19.30 இலட்சம்) ஒப்பிடப்படும்போது 1.25 லட்சம் (6.48 விழுக்காடு) மட்டுமே இருந்தது. சில ACL அலுவலகங்கள் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையிலும். பதிவின் மூப்பு அடிப்படை வரிசையிலும் பாதுகாப்பு உபகரணங்களை விநியோகித்ததால் ACL அலுவலகங்களால் பயனாளிகளை அடையாளம் காண்பதில் சீரான தன்மை இல்லாமல் போனது.

- பாதுகாப்பு உபகரணங்களின் முதல் விநியோகம் (25,000 எண்கள்) ஏப்ரல் முதல் ஜூன் 2020 வரையில் இருந்தது. அதில்

தலைக்கவசம், கண்ணாடிகள், காலணிகள், மேலங்கி/மேலுறை மற்றும் கையுறைகள் ஆகியவை தச்சர், பெயிண்டர், எலக்ட்ரீஷியன் போன்ற அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் அவை பயனுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது வழங்கப்பட்டது. (எ.கா., காலணிகள் மற்றும் கண்ணாடிகள் தச்சர் மற்றும் பெயிண்டருக்குப் பொருத்தமற்ற பாதுகாப்பு உபகரணமாக இருந்திருக்கலாம்).

BOCW சட்டத்தின்படி, ஊழியர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கான பொறுப்பு வேலை அளிப்போர்களுடையது என்பதை DISH ஒப்புக்கொண்டது (அக்டோபர் 2022) மற்றும் மாநில அரசின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு உபகரணங்களை வேலை அளிப்போர்கள் வழங்க வேண்டியிருந்ததால், அதற்காக செலவு செய்யப்பட்ட ₹22.19 கோடி நியாயமற்றது மற்றும் விநியோகம் திறமையாக நிர்வகிக்கப்படவில்லை என்றும் தணிக்கை கண்டறிந்தது.

சட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட வேலை அளிப்போர்களால் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்குப் பதிலாக TNCWWB செலவில் அவை ஏன் வழங்கப்பட்டன என்பதற்குரிய பதிலை வழங்காமல், பாதுகாப்பு உபகரணங்களை வழங்காத வேலை அளிப்போர்களுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு கூறியது (பிப்ரவரி 2023).

## 5.9 தொழிலாளர்களுக்கான வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யாமை

TNBOCW விதிகள், 2006, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலையும், கழிப்பறை, சிறுநீர் கழிப்பறைகள், முதலுதவி பெட்டிகள், உணவகம் மற்றும் சுகாதாரமான சூழல் போன்ற பல்வேறு வசதிகளை வழங்குவதை திட்டமிடுகிறது.

ஆயினும், பணியிடத்தில் கட்டாய வசதிகள் இருப்பதை உறுதி செய்வதில் மந்தநிலை காணப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வில் (Joint Physical Verification - JPV), 21 கட்டுமான தளங்களில் 11 மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்ததால், மீதமுள்ள 10 கட்டுமான தளங்களை (48 விழுக்காடு) DISH ஆல் கண்காணிக்க இயலாத நிலை கண்டறியப்பட்டது. **பத்தி 2.2**ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அரசாங்கத்தின் ஒப்பந்ததாரர்களில் 3.88 விழுக்காடு பேர் மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்ததால், கட்டுமான தளத்தில் கட்டாய வசதிகளை கொண்டு வருவதில் DISHன் பங்கு மிகவும் குறைவாக இருந்தது. சென்னை மற்றும் மதுரையில் மட்டும் குறைந்த அளவிலான கள நிலை ஆய்வு இருப்பதாலும், குறைந்த பணியாளர்கள் இருப்பதாலும் DISHன் மேற்பார்வை போதுமானதாக இல்லை.

### 5.9.1 நடமாடும் உடல்நல மருத்துவகங்கள் மூலம் பணி இடங்களில் மருத்துவ வசதிகள் அளிப்பதில் இருந்த குறைபாடுகள்

கட்டுமானத் தளங்களில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக 50 நடமாடும் உடல்நல மருத்துவகங்கள் (Mobile Health Clinics - MHCs) நிறுவுவதற்கான ஆணையை தமிழ்நாடு அரசு வழங்கியது (டிசம்பர் 2014 மற்றும் ஏப்ரல் 2019). தேசிய சுகாதார இயக்கத்தின் (National Health Mission - NHM) குழு இயக்குநர் மேற்கூறப்பட்ட திட்டத்திற்கான முக்கிய (nodal) அதிகாரி ஆவார். உத்தரவின்படி, அனைத்து வாகனங்களும் GPS வசதியுடன், ECG, பகுதி தானியங்கி ஆய்வுக் கருவி (Semi-auto analyser), நுண்நோக்கி (microscope) மற்றும் பிற கருவிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். MHCகளுக்கு வழித்தட வரைப்படம் (route chart) தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் புதிய கட்டுமானத் தளங்களின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

50 MHCகளில், 35 MHCகள் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்ககத்தின் (Directorate of Public Health and Preventive Medicine) கட்டுப்பாட்டின் கீழும், 15 MHCகள் GCC ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்ககம், GCC மற்றும் NHM ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து TNCWWBஆல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், அளிக்கப்பட்ட சேவை மற்றும் பயனடைந்த தொழிலாளர்கள் பற்றிய விவரங்கள் TNCWWBயிடம் இல்லாதது கண்காணிப்பின் குறைபாட்டைக் குறிக்கிறது.

ஜூலை 2019ல், MHCகளை இயக்குவதற்காக TNCWWB ₹18.28 கோடியை NHMக்கு செலுத்தியது. TNCWWB நிதிகள் பயன்படுத்தப்படுவதால், TNCWWB பயனர் தேவைகள், பணம் செலுத்தப்படும் முறைகள் மற்றும் முறையான பயன்பாட்டுச் சான்றிதழ் (utilisation certificate - UC) பெறுதல் குறித்த முறையான ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும். இருப்பினும், TNCWWBன் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் நலனுக்காக நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய NHM உடன் அத்தகைய ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. பயனாளிகள் கணக்கெடுப்பின் போது, பதிவு செய்யப்பட்ட 375 தொழிலாளர்களுள் 277 பேர் (74 விழுக்காடு) தாங்கள் MHC வசதியைப் பெறவில்லை என்று கூறியுள்ளனர்.

மேலும், NHM வழங்கிய UC, பரிந்துரைக்கப்பட்ட படிவமான 12Aக்குப் பதிலாக, படிவம் 12Cல் வழங்கப்பட்டதால், TNCWWBஆல், செலவினங்களின் தன்மை மற்றும் விவரங்களை உறுதி செய்ய இயலவில்லை. இதன் விளைவாக, NHM, வட்டித் தொகையான ₹59.88 இலட்சத்தை அரசுக் கணக்கில் செலுத்தியது, இது, TNCWWBஆல் ஆட்சேபிக்கப்படவில்லை. இத்தொகையானது TNCWWBக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

UC கொடுக்கும்படியாகவும், வட்டித் தொகையை TNCWWBக்கு அனுப்பவும் NHMன் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). TNCWWBஆல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் முடிவுகள் எதிர்நோக்கப்படுகின்றன (மார்ச் 2023).

## 5.10 கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பிற நல உதவிகள்

அட்டவணை 5.9ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, சட்டம்/விதி/அரசு ஆணைகளில் முன்மொழியப்பட்டுள்ள பல திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை.

**அட்டவணை 5.9: கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பிற நல உதவிகளின் விவரங்கள்**

| | |
|---|---|
| **கட்டிட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அங்கன்வாடி வசதி** | சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமை துறையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் (Integrated Child Development Scheme - ICDS) இணைந்து, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சித் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இத் திட்டத்தை தொடங்குவதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது (டிசம்பர் 2014).<br>ICDS உடன் இணைவதற்கு, TNCWWB பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்காததால் இத்திட்டம் தொடங்கப்படவில்லை. |
| **கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளில் மாவட்டம்/தொகுதியில் முதலிடம் பெறும் குழந்தைக்கான உதவித் திட்டம்.** | ஜனவரி 2017ல் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், தென்காசி மாவட்டத்தில் உள்ள ஒரு பயனாளியைத் தவிர, பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இதுபோன்ற வசதி நீட்டிக்கப்பட்டதாக தணிக்கையில் கண்டறியப்படவில்லை. இத்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. |
| **1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலத்திட்டத்தின் கீழ் குழந்தைகள் காப்பகத் (crèche) திட்டம்** | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலத் திட்டம், 1994ன் பிரிவு 10-ன் படி, பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொருத்தமான இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அத்தகைய வசதி நீட்டிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது. இதற்கான குறிப்பிட்ட காரணங்களை TNCWWB வழங்கவில்லை. |
| **TNMW சட்டம், 1982ன் கீழ் வருங்கால வைப்பு நிதி திட்டம்** | பிரிவு 3(2)(i) சட்டம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைக் கருத்தில் கொண்டிருந்தாலும், TNCWWB இன்னும் அத்தகைய திட்டத்தை உருவாக்கவில்லை. |

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

ஆண்டு 2017 முதல் ICDSல் இருந்து முன்மொழிவு வராததால் அங்கன்வாடி திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்தில் முதன்மையாக தேர்ச்சி பெறும் குழந்தைகளுக்கான திட்டத்தை திறம்பட செயல்படுத்த பிப்ரவரி 2023ல் புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. தகுந்த ஒத்துழைப்பு வராத காரணத்தால் குழந்தைகள் காப்பகம் திட்டம் தொடங்கப்படவில்லை என்றும் தமிழ்நாடு அரசு கூறியது.

கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்தப் பதில்கள் உறுதிப்படுத்தின.

## 5.11 திறன் மேம்பாடு

கட்டுமானத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் திறன் (skill), திறமை (ability) மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு கட்டுமான பயிற்சிக் கழகத்தை (Tamil Nadu Academy of Construction - TAC) தமிழ்நாடு அரசு டிசம்பர் 2008ல் நிறுவியது. இந்த பயிற்சி கழகம், புதிய தொழிற்திறன் பயிற்சி, மறுதிறனாக்கல்(re-skilling) மற்றும் கூடுதல் திறனாக்கத்தலில் கவனம் செலுத்த வேண்டியதாக இருந்தது. கட்டுமானத் தொழிலாளர்களின் சான்றிதழுக்கான, முன் கற்றலுக்கான அங்கீகாரம் (Recognition of Prior Learning - RPL) திட்டத்தை செயல்படுத்துவதற்காக, TAC, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (Tamil Nadu Skill Development Corporation - TNSDC) இணைந்து பணியாற்ற வேண்டி இருந்தது. திறன் மேம்பாட்டில் பின்வரும் குறைபாடுகளை தணிக்கை கண்டறிந்தது.

- TACன் அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை ஏழாக இருந்தபோதிலும், இரண்டு அதிகாரிகளை (ஒரு தொழிலாளர் இணை இயக்குநர் மற்றும் ஒரு உதவியாளர்) மட்டுமே கொண்டு செயல்பட்டு வந்தது. TACன் போதிய பணியாளர்கள் இல்லாதது பணியின் தரத்தை பெரிதும் பாதித்தது.

- கட்டுமானத் தொழிலாளர்கள் 5,000 பேர்களை கட்டுமானத் தொழிற்கூடம் மேம்பாட்டு கழகத்துடன் (Construction Industry Development Council - CIDC) ஒருங்கிணைந்து பணியாற்றப் பயிற்றுவிக்கும் பொருட்டு, ₹1.86 கோடி செலவில் RPL கீழ் இணைப்புக் கல்வி (Bridge Course) பயிற்சி நடத்தப்பட்டது. 2017-22 ஆண்டுகளில், RPL திட்டத்தின் கீழ், 3,099 நபர்களை மட்டுமே உட்படுத்திய, 16 பயிற்சிகள் TACன் மேற்பார்வையில் நடத்தப்பட்டன. பங்கேற்பாளர்களின் விவரங்களை ஆய்வுசெய்ததில், பதிவு எண்கள் குறிப்பிடப்படாததால், அவர்கள் பதிவு பெற்றவர்களா என்பதை உறுதி செய்ய இயலவில்லை. 3,099 பங்கேற்பாளர்களில், 1,735 (56 விழுக்காடு) பேர் ACL-SSSக்கு பதிலாக தொழிற்சங்கங்களால் சேர்க்கப்பட்டனர் என்பதும் கண்டறியப்பட்டது. இது TACன் கண்காணிப்புக் குறைவையும் அதன் செயல்பாடுகளை திறம்பட செயல்படுத்த, போதுமான பணியாளர் இல்லாமையையும் குறிக்கிறது.

- அமைப்புசாரா பிரிவில் முறையான திறன் சான்றிதழ் இல்லாமல் பணி அனுபவத்தினால் திறனைப் பெற்ற ஒரு இலட்சம் தொழிலாளர்களிடம் (இதில் 60,000 கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட) RPL திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ₹10 கோடி வழங்கியது (மார்ச் 2017). 60,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கான இத்திட்ட செயல்பாட்டிற்காக, TNCWWB, ₹6 கோடியை TNSDCக்கு வழங்கியது (நவம்பர் 2018). இருப்பினும், ₹2.44 கோடி செலவில், 24,943 பங்கேற்பாளர்கள்

மட்டுமே மதிப்பீடு செய்யப்பட்டனர்/சான்றளிக்கப்பட்டனர். TNSDCஆல் வழங்கப்பட்ட, பங்கேற்பாளர்கள் மற்றும் UC பற்றிய விவரங்கள் TNCWWBயிடம் இல்லாததால், நிதியின் பயன்பாட்டைக் கண்காணிப்பதற்கான அமைப்பை TNCWWB கொண்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட நிதியின் பயன்பாட்டை உறுதி செய்யாமல், நிதியை வெளியிடுவது TNCWWB தரப்பில் விவேகமற்ற செயல் என்று தணிக்கை கண்டறிந்தது.

TNSDC உடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

## 5.12 சிறப்பு நோக்கத் திட்டம்

அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களும் பயனாளிகளாகப் பதிவு செய்யப்பட்டு, தகுதியான பலன்களை சுலபமாகப் பெறும் பொருட்டு, சிறப்பு நோக்கத் திட்டத்தை (Mission Mode Project - MMP) மத்திய அரசு, ஜூலை 2020ல் அறிமுகப்படுத்தியது. மூன்று மாத காலத்திற்குள் மாநில நல வாரியங்கள் மூலம் இலக்குகளை அடைய MMP விழைகிறது. MMP மூன்று கூறுகளை உள்ளடக்கியது, அதாவது (i) விடுபட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு, (ii) புதுப்பித்தல் மற்றும் பெயர்வுத்திறன் (portability) மற்றும் (iii) சமூகப் பாதுகாப்பின் பொதுவாக்கம் (Universalisation) போன்றவையாகும். TNCWWBன் கூறு வாரியான இணக்கம் மற்றும் அதன் மீதான தணிக்கைக் குறிப்புகள் **அட்டவணை 5.10ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.10: MMPன் கூறுகள் மற்றும் சாதனை நிலை**

| வ. எண் | MMPன் கூறுகள் | தணிக்கை குறிப்புகள் |
|---|---|---|
| 1 | **விடுபட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு:** LBக்கள், NGOக்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியுடன் தொழிலாளர்களைச் சேர்க்க சிறப்பு இயக்கம் நடத்தப்படும். | மார்ச் 2022 நிலவரப்படி, 19.30 இலட்சம் தொழிலாளர்கள் TNCWWBல் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பதிவு செய்வதில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. |
| 2 | **(அ) புதுப்பித்தல்:** புதுப்பிப்பதற்கு நேரடி வருகையை வலியுறுத்தக்கூடாது. சேவா–பந்த்கள்/NGOக்கள்/தன்னார்வலர்கள் புதுப்பித்தல் செயல்முறையை மேம்படுத்த ஈடுபடுத்தப்படலாம் | இணையவழி பதிவு செய்வதற்கான வசதி, 19/06/2020 முதல் நடைமுறைக்கு வருகிறது. நேரடி வருகை கட்டாயமில்லை. தொழிலாளர்களுக்கு ஆதரவாக தன்னார்வ தொண்டு நிறுவனம்/தன்னார்வலரை ஊக்குவிக்க எந்த அமைப்பும் இல்லை. |

| வ. எண் | MMPன் கூறுகள் | தணிக்கை குறிப்புகள் |
|---|---|---|
| | **(ஆ) பெயர்வுத்திறன்:** பிற மாநிலங்களுக்கு இடம்பெயரும் தொழிலாளர்களுக்கு மாநில நல வாரியமானது இணையவழி இடம்பெயர்வு சான்றிதழை (MC) வழங்கும் | TNCWWBஆல் செயல்படுத்தப்படவில்லை |
| 3 | சமூக பாதுகாப்பின் பொதுவாக்கம் | |
| | **(அ) சுகாதார காப்பீடு** | மார்ச் 2023 நிலவரப்படி, சுகாதார காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்படவில்லை. |
| | **(ஆ) ஆயுள் மற்றும் ஊனக் காப்பீடு** | TNCWWBன் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆயுள் மற்றும் ஊனக் காப்பீடு வழங்கப்படுகிறது. |
| | **(இ) வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம்** | அரசு அதன் சொந்த ஓய்வூதியத் திட்டமான மாதத்திற்கு ₹1,000த்தை வழங்குகிறது. |
| | **(ஈ) பிழைப்பூதியம்** | TNCWWBஆல் செயல்படுத்தப்படவில்லை |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தகவல்)

இவ்வாறு, TNCWWB, MMPன் நோக்கங்களை முழுமையாக அடையவில்லை என்பதையும், MMPன் அனைத்து கூறுகளையும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

'சிறப்பு நோக்கத் திட்டம்' குறித்த தணிக்கை குறிப்புகள் பரிசீலிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). இது குறித்து, அரசால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (மார்ச் 2023).

## 5.13 மற்ற மாநிலங்களின் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களுடன் TNCWWB திட்டங்களின் ஒப்பீடு

தணிக்கை TNCWWBன் நலத்திட்டங்களை மற்ற மாநிலங்களின் வாரியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தது. ஒப்பீடு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது, மேலும் விவரங்கள் **இணைப்பு 5.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

(i) பணியிடத்தில் ஏற்படும் விபத்து மரணம் மற்றும் வீடு வழங்கும் திட்டத்தில் (Housing Scheme), TNCWWB சிறந்த உதவியை வழங்குகிறது.

(ii) ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மகப்பேறு உதவி, இயற்கை மரண உதவி, இறுதிச் சடங்கு உதவி, திருமண உதவி மற்றும் கல்வி உதவியைப் பொறுத்தமட்டில், TNCWWB வழங்குகிற உதவித் தொகையின் மதிப்பானது வேறுபல மாநிலங்களை விட குறைவாக இருந்தது.

(iii) மருத்துவ உதவித் திட்டம் TNCWWBஆல் செயல்படுத்தப்படவில்லை, டெல்லி மற்றும் பஞ்சாப் வாரியங்கள் அதை வழங்குகின்றன.

(iv) டெல்லி மற்றும் பஞ்சாப் வாரியங்கள் வேலை தொடர்பான கருவிகளை வாங்குவதற்கு உதவி வழங்குகின்றன. அத்தகைய திட்டம் TNCWWBல் இருக்கவில்லை.

தணிக்கையால் சுட்டிக் காட்டப்பட்ட கருத்துகள், தொடர் நடவடிக்கைக்காக, வாரியத்தால் கருத்தில் கொள்ளப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

## 5.14 TNCWWB திட்டத்தின் விளைவுகள்

பயனாளிகளின் கணக்கெடுப்பு மற்றும் நேரடி கூட்டு தேர்ந்தாய்வு (Joint Physical Verification - JPV) மூலம் திட்டத்தின் விளைவுகளை தணிக்கை மதிப்பீடு செய்தது. தெரிவுசெய்யப்பட்ட 10 மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 60 பயனாளிகளென 634 பயனாளிகள்[26] தொடர்பற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மாநிலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பணித் தளங்களில், சுமார் 50 பதிவு செய்யப்படாத தொழிலாளர்களிடையே, ACL-SSS/DISH அதிகாரிகளுடன் சேர்ந்து நேரடி கூட்டு தேர்ந்தாய்வு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பு மற்றும் நேரடி கூட்டு தேர்ந்தாய்வு மூலம் மதிப்பிடப்பட்ட திட்டத்தின் விளைவுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களிடையேயான பயனாளிகள் கணக்கெடுப்பின் முடிவுகள்

கணக்கெடுப்பு முடிவுகள் **இணைப்பு 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன. முக்கியமாக, பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில், 43 விழுக்காட்டினர் TNCWWBன் கீழ் பல்வேறு திட்டங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்றும், 52 விழுக்காட்டினர் கோவிட் பண உதவியைப் பெறவில்லை என்றும், 69 விழுக்காட்டினர் பாதுகாப்பு உபகரணங்களைப் பெறவில்லை என்றும் கணக்கெடுப்பு வெளிப்படுத்தியது.

### ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் பயனாளிகள் கணக்கெடுப்பு

ஓய்வூதியதாரர் (229), குடும்ப ஓய்வூதியதாரர்(19) மற்றும் அவர்களின் துணைவர்(spouse)/நியமனதாரர்கள் (nominees)(12) ஆகிய பயனாளிகளிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், ஓய்வூதியர்களில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியத்தில் சிக்கல்கள் இருந்ததாகவும், குடும்ப ஓய்வூதியர்களிடையே ஒருவருக்கும் சிக்கல்கள் இல்லை எனவும் தெரிய வந்தது. மேலும், குடும்ப உறுப்பினர்களில், 17 விழுக்காட்டினர்

[26] 374 தொழிலாளர்கள் மற்றும் 260 ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியது.

(12 பேரில் இருவர்) இறுதிச் சடங்கிற்கான உதவியினைப் பெறவில்லை எனவும் இக்கணக்கெடுப்பு வெளிப்படுத்தியது.

மேற்கண்ட ஆய்வு முடிவுகள், இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகளை உறுதிப்படுத்துகின்றன.

### நேரடி கூட்டு தேர்ந்தாய்வு

கட்டுமான தளங்கள் 21ல் மேற்கொள்ளப்பட்ட நேரடி கூட்டு தேர்ந்தாய்வு, 546 கட்டுமானத் தொழிலாளர்களுள் 45 தொழிலாளர்கள் மட்டுமே அமைப்புசார் துறையின் கீழ் பணியாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் (Employees' Provident Fund - EPF) இணைக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தியது. மீதமுள்ள 501 கட்டுமானத் தொழிலாளர்களுள் 103 தொழிலாளர்கள் சொந்த மாநிலத்தைச் (native-State) சேர்ந்தவர்கள் எனவும் மற்றும் 398 பேர் மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (Inter-State migrants) எனவும் வெளிப்படுத்தியது. **விளக்கப்படம் 5.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி 501 கட்டுமானத் தொழிலாளர்களில், 453 பேர் (90 விழுக்காடு) TNCWWB உடன் பதிவு செய்யப்படாதவர்கள் ஆவர் (55 பேர் சொந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 398 பேர் மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்).

**விளக்கப்படம் 5.2: கட்டுமானத் தளங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வு**




(ஆதாரம்: தணிக்கை மூலம் தொகுக்கப்பட்ட நேரடி கூட்டு தேர்ந்தாய்வுத் தரவு)

TNCWWBல் பதிவு செய்வதற்கான நடைமுறை மற்றும் அதன் பலன்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததே பதிவு செய்யாததற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. **பத்தி 6.3.5ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, திட்டப் பலன்களில் முறையான IEC இல்லாமையே மிகக் குறைந்த விழிப்புணர்வு மற்றும் அதன் விளைவான குறைவான பதிவிற்கு (low registration) காரணம் என தணிக்கை கண்டறிந்தது.

**கட்டுமான தளங்களின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது DISHல் பதிவுசெய்யப்பட்டிருந்த கட்டுமான தளங்கள்/வேலை அளிப்போர்கள்:** பார்வையிடப்பட்ட 21 கட்டுமான தளங்களில், **இணைப்பு 5.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 11 கட்டுமான தளங்கள்/வேலை அளிப்போர்கள் மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்தனர், மீதமுள்ள 10 (48 விழுக்காடு) பதிவு செய்யப்படவில்லை. மேலும், பணியமர்த்தப்பட்ட கட்டிடத் தொழிலாளர்களின் பதிவேடு – படிவம் XV, ஒரே ஒரு கட்டுமான தளம்/வேலை அளிப்போரால் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட மிகக் குறைந்த பதிவிற்கு, **பத்தி 2.2**ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளே காரணமாக இருக்கக்கூடும் என்று தணிக்கை கண்டறிந்தது.

## 5.15 முடிவுரை

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் இருந்த அதிகமான தாமதத்தால், பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் நலனுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துதல் பாதிக்கப்பட்டது. திட்டத்தை செயல்படுத்துவதில் இருந்த தெளிவின்மை தகுதியற்ற நபர்களுக்கு பலன்களை வழங்க வழிவகுத்தது. ஊக்கமற்ற செயல்பாடு, கோவிட்-19 பெருந்தொற்றின் போது அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு பலன்கள் வழங்கப்படாதது மட்டுமின்றி, கணிசமான எண்ணிக்கையிலான பயனாளிகள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை உதவியைப் பெற வழிவகுத்தது. மத்திய அரசால் தொடங்கப்பட்ட MMPன் கீழ் சாதனைகளை அடைவதில் இருந்த பற்றாக்குறை, நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் குறைபாடுகளுக்கு வழிவகுத்தன.

## 5.16 பரிந்துரைகள்

- ஓய்வூதியத் தகுதிக்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை அரசு நிர்ணயிக்க வேண்டும் மற்றும் அத்தகைய சேவைக் காலத்திற்கான மதிப்பீட்டின் (weightage) அடிப்படையில் ஓய்வூதியத்தின் அளவை நிர்ணயம் செய்வதைப் பரிசீலிக்க வேண்டும்.
- மகப்பேறு உதவித் திட்டம், சுகாதாரத் துறையால் செயல்படுத்தப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்குத் அத்துறையால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.
- TNCWWB மூலம் சேவைகள் வழங்கப்படுவதற்கான அளவுகோல்களை அரசு நிர்ணயிக்க வேண்டும் மற்றும் திட்டங்களின் உதவிகள் காலவரம்பிற்குள் தீர்வு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் நலனுக்காக, பொருத்தமான தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு செயல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, TNCWWBஆல் செயல்படுத்தப்படும் திட்டங்களை அரசு பிரபலப்படுத்த வேண்டும்.
- கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக அதிக திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை திறம்பட செயல்படுத்தப்படும் வகையில், சிறப்பு நோக்கத் திட்டத்தை (Mission Mode Project-MMP) அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும்.

# அத்தியாயம் VI

# TNCWWBன் செயல்பாடு

## அத்தியாயம் VI

# TNCWWBன் செயல்பாடு

**TNCWWBஆல் 2017-22 ஆண்டுகளில் பட்ஜெட் தயாரிக்கப்படாதது, அதன் நிதி மேலாண்மையைப் பாதித்தது. உபரி நிதிகள் விவேகமற்ற முறையில் முதலீடு செய்யப்பட்டதன் விளைவாக, வட்டி குறைவாகப் பெற நேரிட்டது. TNCWWBஆல் மேற்கொள்ளப்பட்ட ஏற்புக்குரியதல்லாத செலவினத்தால், நிர்வாகச் செலவினத்தின் உச்சவரம்பான ஐந்து விழுக்காடு மீறப்பட்டது. செஸ் செலுத்தும் முகமைகளிடமிருந்து பெறப்பட்ட குறைபாடுள்ள / தாமதமான வரைவோலைகள் (DD) மறுமதிப்பீடு செய்யப்படாதது பெரும் தொகை இழப்பிற்கு வழிவகுத்தது.**

## 6.1 நிதி மேலாண்மை

### 6.1.1 TNCWWBன் வரவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

2017-22 ஆண்டுகளுக்கான TNCWWBன் வரவுகள் மற்றும் கொடுப்பனவுகள் **விளக்கப்படங்கள் 6.1** மற்றும் **6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன. வரவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் விரிவான அறிக்கை **அட்டவணை 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 6.1: 2017-22 ஆண்டுகளுக்கான வரவுகள்**

**(₹ கோடியில்)**




**விளக்கப்படம் 6.2: 2017-22 ஆண்டுகளுக்கான கொடுப்பனவுகள்**

**(₹ கோடியில்)**




(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

2017-22 ஆண்டுகளில், TNCWWB தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சராசரி உபரியாக 69 விழுக்காடு வரவுகளை (₹561 கோடி) ஈட்டியதையும், அது

நிலையான வைப்புகளில் (Fixed Deposits - FD) முதலீடு செய்யப்பட்டதையும் தணிக்கை கண்டறிந்தது. தணிக்கைக் காலத்தின் தொடக்கத்தில் ₹1,360 கோடியாக இருந்த FDகள், 2017-22 ஆண்டுகளில் ₹2,810 கோடி அதிகரிப்புடன், மார்ச் 2022 நிலவரப்படி ₹4,170 கோடியாக இருந்தது.

### 6.1.2 தொழிலாளர் வரி வசூலை மதிப்பிடுவதில் குறைபாடுகள்

கட்டிடங்கள் கட்டுவதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் உரிய தொகை வசூலிக்கப்படுவதை கண்காணிப்பதற்கு தொழிலாளர் வரி வசூலை மதிப்பிடுவது ஒரு முன்நிபந்தனையாகும். சாலைகள், அணைகள் போன்ற முக்கிய அரசுத் திட்டங்களின் தரவுகள் அந்தந்தத் துறைகளிடமும், கட்டிடத் திட்ட அனுமதிகள் குறித்த தரவுகள் அந்தந்தத் உள்ளாட்சி அமைப்புகளிடமும் இருப்பதால், எதிர்பார்க்கப்படும் வசூலை மதிப்பிடுவது சாத்தியமாக உள்ளதாக தணிக்கை கண்டறிந்தது.

ஆயினும், உண்மையில் வசூலிக்கப்படும் தொகை, மதிப்பிடப்பட்ட வசூலுடன் ஒத்து உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு, செஸ் தொகையின் எதிர்பார்க்கப்பட்ட வசூலை TNCWWB மதிப்பிடவில்லை. தொழிலாளர் செஸ் வசூலை மதிப்பிடத் தவறியது, வசூல் மற்றும் செலுத்தும் முறையின் குறைபாடுகளுக்கு பங்களித்தது. அதாவது வசூல் செய்யாமை, குறுகிய வசூல், பணம் செலுத்தாமை மற்றும் தொழிலாளர் வரியைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்றவை, **அத்தியாயம் III**ல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், தொழிலாளர் வரி வசூல் மதிப்பீடு செய்யப்படாததால், **பத்தி 6.1.3**ல் விவரிக்கப்பட்டபடி பட்ஜெட் தயாரிப்பில் பாதிப்பு ஏற்பட்டது.

### 6.1.3 பட்ஜெட் தயாரிப்பு

TNCWWB திட்டத்தின் பிரிவு 4(9)(ஆ)ன் படி, TNCWWB, அதன் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து வாரியத்தின் அங்கீகரிப்பினைப் பெற்றிருக்க வேண்டும். 2017-22 ஆண்டுகளில், TNCWWB பட்ஜெட் தயாரிக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. 2017-22 ஆண்டுகளில் பட்ஜெட் தயாரிக்கப்படாதலால், உபரி நிதிகள் மதிப்பீடு செய்யப்படாமல், சிறந்த முதலீட்டு முடிவுகள் எடுக்க இயலவில்லை, ஒருங்கிணைந்த வளாகங்களில் இருந்து பெறப்படும் வாடகை பெறப்படவில்லை, மாவட்ட அலுவலகங்களின் நிர்வாகச் செலவுகள் முழுவதும் மற்ற 17 வாரியங்களில் இருந்து பெறப்படாமல், TNCWWB மூலமே மேற்கொள்ளப்பட்டது. இவை பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகள்/பிற நிறுவனங்களால் வசூலிக்கப்படும் செஸ் தொகையை மதிப்பிடுவதிலும் கட்டுமானத் தொழிலாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் திட்ட உதவிகளை மதிப்பிடுதலும் உள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை என்று TNCWWB கூறியது (செப்டம்பர் 2022). முந்தைய ஆண்டின் தரவு மற்றும் பிற தகவல்களைப் பயன்படுத்தி வரவுகள் மற்றும் கொடுப்பனவுகளை நியாயமான முறையில் மதிப்பிட முடியும் என்பதால் குறிப்பிடப்பட்ட காரணங்கள் ஏற்புடையதாக இல்லை.

தணிக்கை குறிப்புகளின் அடிப்படையில், 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஒரு தற்காலிக பட்ஜெட் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 05 ஜூலை 2022 அன்று நடைபெற்ற அதன் 36வது வாரியக் கூட்டத்தில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

பயனுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், கள நிலை அலுவலர்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் பட்ஜெட் தயாரிப்பதன் மூலம் இச்செயல்முறையை நெறிப்படுத்தப்பட வேண்டும் என்று தணிக்கை கவனித்தது.

### 6.1.4 TNCWWBன் கணக்குகள் மீது இந்திய CAGன் தணிக்கை

மத்திய அரசால் இயற்றப்பட்ட BOCW சட்டத்தின் பிரிவு 27ன் படி, TNCWWBன் கணக்குகள் இந்தியாவின் CAGஆல் தணிக்கை செய்யப்படும். இருப்பினும், தமிழ்நாடு அரசு, TNBOCW விதிகளை அறிவிக்கும் போது, CAG கணக்குகளைத் தணிக்கை செய்யும்படியாக BOCW சட்டத்தின் பிரிவு 27ஐ இணைக்கவில்லை. இதன் விளைவாக, TNCWWBன் கணக்குகளை தணிக்கை செய்ய எந்த வழிவகையும் இல்லை. பின்னர் ஜனவரி 2010 மற்றும் பிப்ரவரி 2012ல், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், CAG ஆல் செய்யப்படும் தணிக்கை உட்பட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழிகாட்டுதல்களை பின்வருமாறு வழங்கியது:

"(i) சட்டத்தின் செயல்பாடு மற்றும் நிதியின் பயன்பாட்டினை CAG முழுமையாக தணிக்கை செய்ய வேண்டும் (18 ஜனவரி 2010) (ii) அனைத்து மாநில நல வாரியங்களும் இன்று முதல் இரண்டு மாதங்களுக்குள் CAGஆல் தணிக்கைக்கு உட்படுத்தப்படும். சட்டத்தின் 27வது பிரிவின் விதிகளின் கீழ் அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநில வாரியங்களும் செயல்முறையைத் தொடங்கி, அது நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் (07 பிப்ரவரி 2012)".

மாநில அரசால் TNBOCW விதிகளில் செய்யப்பட வேண்டிய திருத்தம் நிலுவையில் இருந்ததால், மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நவம்பர் 2011ல் CAGஆல் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், 2007-08 முதல் 2021-22 ஆண்டுகளின் TNCWWBன் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. அதேசமயம், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி பொருத்தமான திருத்தங்களைச் செய்வதற்காக, இந்த விவகாரம், தமிழ்நாடு முதன்மை கணக்காய்வுத் தலைவர் (PAG) (தணிக்கை - I)ஆல், ஜூலை 2013, ஏப்ரல் 2017, செப்டம்பர் 2021 மற்றும் ஜனவரி 2023 ஆகிய மாதங்களில் அரசிடம் தெரிவிக்கப்பட்டது.

BOCW சட்டம் உள்ளிட்ட 13 தொழிலாளர் சட்டங்களை உட்படுத்தியதன் மூலம், தொழில்சார் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகள் குறியீடு, 2020ஐ மத்திய அரசு இயற்றியுள்ளது என்றும் மத்திய அரசு BOCW சட்டத்தை ரத்து செய்யக்கூடும் என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (டிசம்பர் 2021). மேலும் மாநில அரசு CAG(DPC) சட்டத்தின் பிரிவு 20(2) ன் கீழ் தணிக்கையை மேற்கொள்ள முதன்மை கணக்காய்வுத் தலைவரைக் கேட்டுக் கொண்டது (டிசம்பர் 2021).

BOCW சட்டத்தின் 27வது பிரிவின் கீழ் செயல்முறையைத் தொடங்குவதற்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மாநில அரசுக்கு வழிகாட்டுதல்களை வெளியிட்டு 10 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், CAG தணிக்கை செய்யும் பொருட்டு, TNBOCW விதிகளில் திருத்தம் (பிப்ரவரி 2023) செய்யப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. BOCW சட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள சட்டப்பூர்வ வழிமுறைகளின்படி அல்லாமல், CAGன் (DPC) சட்டத்தின் பிரிவு 20(2)ன் கீழுள்ள ஒப்படைப்பின் மூலம் TNCWWBயை, CAG அலுவலகம் தணிக்கை செய்கிறது.

நிறைவுக் கூட்டத்தின் போது, CAGஆல் தணிக்கை மேற்கொள்ளப்பட பொருத்தமான வழிமுறைகளை மாநில சட்டம்/விதிகளில் முன்மொழியுமாறு TNCWWBன் செயலாளருக்கு அரசின் ACS உத்தரவிட்டார்.

### 6.1.5 விவேகமற்ற நிதி மேலாண்மை - வட்டி இழப்பு ₹309 கோடி

**முதலீடு செய்யத்தக்க உபரி நிதிகள்:** TNCWWBன் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பல்வேறு நல உதவித் திட்டங்கள் மற்றும் பிற நிர்வாக செலவுகள், வசூலிக்கப்படும் செஸ் மற்றும் பெறப்படும் வட்டி மூலம் செய்யப்படுகிறது. மார்ச் 31, 2022 நிலவரப்படி, TNCWWB, பல ஆண்டுகளின் சேமிப்பான ₹4,170 கோடியை, வைப்பு நிதியாகக் கொண்டிருந்தது. தணிக்கை காலத்தில், FD தொகையானது, ஏப்ரல் 2017ல் ₹1,360 கோடியாக இருந்து, மார்ச் 2022ல் ₹4,170 கோடியாக உயர்ந்தது. இதன் அதிகரிப்பு ₹2,810 கோடியாகும். 2017-22 ஆண்டுகளுக்கான செஸ் வசூல் மற்றும் திட்டச் செலவுகள் **விளக்கப்படம் 6.3**ல் ஒப்பிடப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 6.3: 2017–22 ஆண்டுகளின் செஸ் வசூல் மற்றும் செலவினங்களின் ஒப்பீடு**

**(₹ கோடியில்)**




(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

செஸ் வசூல் மட்டுமே (வட்டி வரவுகள் தவிர்த்து), தொடர்ந்து, TNCWWBன் நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாக செலவினங்களை விட அதிகமாக இருந்தது கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சராசரி உபரி சுமார் ₹561 கோடி வரை இருந்தது. எனவே, முதலீடுகள் தொடர்பான விவேகமான முடிவுகளை TNCWWB எடுக்க வேண்டியது அவசியம். உபரி நிதிகளின் முதலீட்டில் கவனிக்கப்பட்ட சிக்கல்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**தற்போதைய முதலீட்டு நடைமுறை:** TNCWWBக்கென வரையறுக்கப்பட்ட முதலீட்டு கொள்கை எதுவும் இல்லை மற்றும் 05 ஜனவரி 1996 தேதியிட்ட வாரியத்தின் தீர்மானத்தின்படி, வங்கிகளில் ஒரு வருட காலத்திற்கும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தில் (TNPFIDCL) மூன்று வருட காலத்திற்கும் உபரி நிதி FDயாக முதலீடு செய்யப்பட வேண்டும். அதன்படி, **இணைப்பு 6.1**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, TNCWWB, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒரு வருடத்திற்கும், TNPFIDCLல் மூன்று வருடங்களுக்கும் உபரித் தொகைகளை FDகளில்

முதலீடு செய்து, 2016–22 ஆண்டுகளில் ₹792.92 கோடி வட்டியைப் பெற்றது (**அட்டவணை 6.1**).

**அட்டவணை 6.1: 2016–22 ஆண்டுகளில் TNCWWB ஆல் பெறப்பட்ட வட்டி**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | மார்ச் இறுதி நிலவரப்படி வங்கி உடனான FD | பெறப்பட்ட வட்டி | மார்ச் இறுதி நிலவரப்படி TNPFIDCL உடனான FD | பெறப்பட்ட வட்டி |
|---|---|---|---|---|
| 2016-17 | 747.80 | 52.12 | 611.92 | 85.27 |
| 2017-18 | 1,547.20 | 94.73 | 367.03 | 77.17 |
| 2018-19 | 2,323. 70 | 96. 24 | 142.05 | 45.03 |
| 2019-20* | 2,566. 75 | 219.84 | 545.00 | Nil |
| 2020-21* | 2,720.54 | 122.52 | 850.00 | Nil |
| **2021-22** | **3,320.07** (31/03/2022ன் படி) | **585.45** | **850.00** (31/03/2022ன் படி) | **207.47** |
| **31/03/2022 நிலவரப்படி FD** (₹3,320.07 + ₹850) | | | | **4,170.07** |
| **2016–22 ஆண்டுகளில் பெறப்பட்ட மொத்த வட்டி** (₹585.45 + ₹207.47) | | | | **792.92** |

* FDக்கள் மூன்று வருட காலத்திற்கு வைக்கப்பட்டிருந்த்தால் வட்டி பெறப்படவில்லை.

(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட வருடாந்திர கணக்குகள் மற்றும் விவரங்கள்)

மேலும், தமிழகம் முழுவதும் உள்ள பல வங்கிகளின் கிளைகளில் FDகள் முதலீடு செய்யப்பட்டுள்ளதை தணிக்கை கவனித்தது. 2016–22 ஆண்டுகளில், FDகள் வைக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகளின் எண்ணிக்கை **விளக்கப்படம் 6.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 6.4: 2016-22 ஆண்டுகளில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடனான FDகள்**




(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

2016–22 ஆண்டுகளில், FD வைக்கப்பட்டிருந்த வங்கிகளின் எண்ணிக்கை மூன்று முதல் 12 வரையிலாக இருந்தது; ஆனால் வங்கிகளின் பல்வேறு கிளைகளுடனான FDகளின் எண்ணிக்கை ஒரு வருடத்தில் 96 முதல் 523 வரையாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வங்கி வழங்கும் வட்டி

விகிதம் அதன் அனைத்து கிளைகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதால், மாநிலம் முழுவதும் உள்ள வெவ்வேறு கிளைகளில் FDகளை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. மேற்கூறப்பட்ட செயல்பாட்டினால், அதற்கான ஆவணங்களைக் கையாள்வது பாதுகாப்பற்றதாக இருப்பதோடு அதற்கான செயல்முறையும் பளுவானதாக இருக்கக் கூடும்.

**விவேகமற்ற முதலீடுகள்:** மேற்கூறிய துணைப் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி, பெரிய தொகைகள், TNPFIDCL மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் FDகளில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் உடனடித் தேவைகளைச் சந்திக்க, சுமார் ₹200 கோடி நடப்புக் கணக்கு / சேமிப்பு வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

தணிக்கையால் கண்டறியப்பட்டவை:

- 2016–22 ஆண்டுகளில், TNPFIDCLல் முதலீடு செய்யப்பட்ட உபரி நிதி 6 முதல் 45 விழுக்காடு வரையில் இருந்தது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை விட 1.52 முதல் 3.8 விழுக்காடு வரை அதிக வட்டி அளிக்கும் TNPFIDCLல் எத்தனை விழுக்காடு முதலீடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்த ஒரு கொள்கையினை TNCWWB கொண்டிருக்கவில்லை.
- IIT மெட்ராஸ் போன்ற கல்வி நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியை நீண்ட கால அரசுப் பத்திரங்களில் (தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன்கள் – SDL) முதலீடு செய்யும் நடைமுறையைக் கொண்டுள்ளன. TNCWWB அத்தகைய நீண்ட கால முதலீடுகளை ஆய்வு செய்யாமல், ஒரு வருட முதிர்வு காலம் கொண்ட FDகளில் முதலீடு செய்து வந்தது.
- 2021–22 ஆண்டுகளில், திட்டங்கள் மற்றும் நிர்வாகத்திற்கான சராசரி மாதாந்திர செலவு சுமார் ₹10 கோடி முதல் ₹18 கோடி வரை இருந்தது. எனவே, தணிக்கைக் காலம் முழுவதும் சுமார் ₹200 கோடியை நடப்புக் கணக்கில் வைத்திருப்பது விவேகமற்றதாகக் கருதப்பட்டது.

**இணைப்பு 6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, முன்யோசனையற்ற முதலீட்டினால், TNCWWBக்கு ₹309 கோடி வட்டி இழப்பு ஏற்பட்டதாக தணிக்கை கணக்கிட்டது. இக்கணக்கீடு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒரு மதிநுட்ப முதலீட்டு சாத்தியக்கூறுகளை (prudent investment basket) அடிப்படையாகக் கொண்டது:

(i) மூன்று மாதச் செலவினங்களுக்குத் தேவையான நிதியும் (கோவிட் போன்ற அசாதாரணச் செலவுகளைத் தவிர்த்து, திட்டம் மற்றும் பணிவரவுகள் தொடர்பான செலவினங்கள்) முந்தைய ஆண்டு செலவினத்தின் 10 விழுக்காடும் எதிர்பாராச் செலவுகளுக்காக நடப்புக் கணக்கில் வைக்கப்பட வேண்டும்.

(ii) ஒரு வருட திட்ட செலவினத்திற்கான தொகையும் முந்தைய ஆண்டின் நிர்வாகச் செலவினத் தொகையும், இவற்றுடன் கூடுதலாக 10 விழுக்காடும் ஒரு வருட முதிர்வு காலத்துடன் கூடிய வங்கி FDல் வைக்கப்பட வேண்டும்.

(iii) மீதமுள்ள நிதியில் மூன்றில் ஒரு பங்கு TNPFIDCLல் மூன்றாண்டு FD களிலும், எஞ்சியிருப்பது SDL போன்ற அரசுப் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட வேண்டும்.

FDகளின் எண்ணிக்கையைக் குறைபதற்கான தணிக்கை பரிந்துரையின்படி, ₹10 கோடி, ₹25 கோடி மற்றும் ₹50 கோடியை முறையே ஒன்று, இரண்டு மற்றும் மூன்று ஆண்டுகள் முதலீடு செய்ய தேசியமயமாக்கப்பட்ட ஐந்து வங்கிகளிடமிருந்து அவற்றின் வட்டி விகிதங்கள் கோரப்பட்டன என்றும், முதலீடு செய்யும் தேதியன்று அதிக விகிதத்தை மேற்கோள் காட்டிய வங்கியில் முதலீடு செய்யப்பட்டன என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

**முதலீட்டுக் குழு அமைக்கப்படாமை:** தற்போதைய முதலீட்டு முறையின்படி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒரு வருடத்திற்கான FDகளும், TNPFIDCLல் மூன்று வருட FDகளும் வைப்பட்டன. முதலீடுகளை முடிவு செய்ய, TNCWWBக்கு, ஒரு நிபுணர் முதலீட்டுக் குழு அல்லது அதற்கொத்த வேறு வழிவகைகள் இல்லை. TNCWWB நடப்புக்கணக்கு வைத்திருக்கும் வங்கிகளான கனரா பேங்க், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் இந்தியன் பேங்க் போன்றவற்றையே FD முதலீடுகளுக்காக தெரிவு செய்ததால், தற்போதைய அமைப்பில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு இல்லை. மேலும், 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளில், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் பேங்க், பேங்க் ஆஃப் பரோடா, சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, யூகோ பேங்க், பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் & சிந்து வங்கி போன்ற சில முக்கிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தேர்வு செயல்முறையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சிக்கலைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

### 6.1.6 நிர்வாகச் செலவினங்கள் உச்சவரம்புக்கு மேற்பட்டிருத்தல்

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி (மார்ச் 2018), நல வாரியங்களின் நிர்வாகச் செலவினம். அதன் மொத்தச் செலவில் ஐந்து விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும். **விளக்கப்படம் 6.5ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி ஐந்து ஆண்டுகளிலும் (2017–22) நிர்வாகச் செலவினம் மொத்த செலவினத்தில் ஐந்து விழுக்காட்டைத் தாண்டியுள்ளது என்பதை தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது.




(ஆதாரம்: TNCWWB ஆல் வழங்கப்பட்ட தரவு)

பல்வேறு சந்தர்ப்பங்களில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், மற்ற 17 நல வாரியங்களால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் மீதான ஏற்கத்தகாத செலவினங்கள் உட்பட, தொடர்ந்து அதிகப்படியான செலவினங்களை, TNCWWB மேற்கொண்டது. இவை அடுத்து வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

மாநில சட்டம்/விதிகளில் அத்தகைய வழிமுறைகள் இல்லை என்று TNCWWB பதிலளித்தது (டிசம்பர் 2022). TNCWWBயிடம் இருந்து பெறப்பட்ட இப்பதிலானது மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறுவது மட்டுமின்றி, நிர்வாகச் செலவினைக் குறைக்கும் எண்ணமும் TNCWBB கொண்டிருக்கவில்லை என்று உறுதிப்படுத்தியது.

### 6.1.7 மற்ற வாரியங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்கத்தகாத நிர்வாகச் செலவினங்கள் திருப்பித் தரப்படாமை - ₹60.87 கோடி

40 மாவட்ட அலுவலகங்களில் உள்ள ACL-SSS, LW&SDDன் கீழ் செயல்படும் 18 வாரியங்களிலும் அவற்றின் பதிவு / புதுப்பித்தல் மற்றும் திட்ட உதவிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது (**இணைப்பு 1.1**). இந்த 18 வாரியங்களின் நிர்வாகக் கட்டுப்பாடானது TNCWWB மற்றும் TN உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் (மற்ற 17 வாரியங்களுக்கு) ஆகிய இரண்டின் செயலாளர்களால் கையாளப்படுகிறது. TNCWWB ஊழியர்கள், LW&SDD மற்றும் நிதித் துறையைச் சேர்ந்த மாற்றுப்பணியமர்த்தப்பட்டவர்கள் (deputationists) மற்றும் தினசரி ஊதியம் பெறும் தொழிலாளர்கள் ஆகியோர் இந்த மாவட்ட அளவிலான அலுவலகங்களில் உள்ளனர். TNCWWBஆல் மட்டுமல்லாமல் TN உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் வரும் மற்ற 17 அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களாலும் வழங்கப்படும் பல்வேறு உதவிகளுக்கான பயனாளிகளின் கோரிக்கைகளை செயலாக்குதல், பதிவு செய்தல் / புதுப்பித்தல் செயல்முறை, போன்றவை ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களிலும் இந்த அலுவலர்களுக்கான பணி ஒதுக்கீடாகும்.

மாவட்ட அலுவலகங்களில் திட்டம் மற்றும் நிர்வாகத்திற்கென இரண்டு வகை செலவினங்கள் இருந்தன. அத்தகைய செலவினங்களுக்கான பகிர்வு முறை **அட்டவணை 6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.2: TNCWWB மற்றும் TNMWB இடையே பகிரப்பட்ட செலவினங்கள்**

| செலவு வகை | TNCWWB | TNMWB |
|---|---|---|
| **திட்ட உதவி** | TNCWWBஆல் அதன் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு, ஏற்கப்பட்ட செலவினம் | TNMWBஆல் அதன் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்கப்பட்ட செலவினம் |
| **நிர்வாக செலவினங்கள்** | TNCWWBஆல் முழுமையாக ஏற்கப்படுகிறது | TNMWB ஆல் நிர்வாகச் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. (பிராட்பேண்ட் கட்டணங்கள் (TNMWB மற்றும் TNCWWB 20:80 விகிதத்தில்) போன்ற மிகக் குறைவான செலவினங்கள் மற்றும் வாகன பராமரிப்பு (100 விழுக்காடு) போன்றவை TNMWB ஆல் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன) |

(ஆதாரம்: TNCWWB பதிவுகள்)

31 மார்ச் 2022 நிலவரப்படி TNCWWB மற்றும் TNMWBல் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை முறையே 19.30 இலட்சம் (51 விழுக்காடு) மற்றும் 18.76 இலட்சம் (49 விழுக்காடு) என தணிக்கை கண்டது. ஐந்தாண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட திட்ட உதவியின் அடிப்படையில் இரண்டு வாரியங்களுக்கான பணிச்சுமை **அட்டவணை 6.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.3: 40 ACL–SSS மாவட்ட அலுவலகங்களிலுள்ள வாரியங்களுக்கிடையேயான பணிச்சுமையின் ஒப்பீடு**

| வாரியம் | TNCWWB | | TNMWB (17 நல வாரியங்கள்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| விவரங்கள் | பயனாளிகள் (எண்ணிக்கை இலட்சத்தில்) | தொகை (₹கோடியில்) | பயனாளிகள் (எண்ணிக்கை இலட்சத்தில்) | தொகை (₹கோடியில்) | பயனாளிகள் (எண்ணிக்கை இலட்சத்தில்) | தொகை (₹கோடியில்) |
| 2017-18 | 1.93 | 90.08 | 2.30 | 84.29 | 4.23 | 174.37 |
| 2018-19 | 1.94 | 111.63 | 2.46 | 84.16 | 4.40 | 195.79 |
| 2019-20 | 1.78 | 118.73 | 2.78 | 141.75 | 4.56 | 260.48 |
| 2020-21 | 0.42 | 150.08 | 1.82 | 197.66 | 2.24 | 347.74 |
| 2021-22 | 1.52 | 161.20 | 2.54 | 137.82 | 4.06 | 299.02 |
| **மொத்தம்** | **7.59** | **631.72** | **11.90** | **645.68** | **19.49** | **1,277.40** |
| **விழுக்காடு** | ***39*** | ***49*** | ***61*** | ***51*** | ***100*** | ***100*** |

(ஆதாரம்: 2018–19 முதல் 2022–23 வரையிலான கொள்கைக் குறிப்புகள்)

**அட்டவணை 6.3ல்** இருந்து, இரண்டு வாரியங்களுக்கான பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கான திட்ட உதவித் தொகை, தோராயமாக சமமாக இருப்பது தெரியவருகிறது. எனவே நிர்வாகச் செலவுகள் TNCWWB மற்றும் TNMWB இடையே விகிதாசாரமாகவோ அல்லது சமமாகவோ பகிரப்பட்டிருக்க வேண்டும். TNMWB உடன் செலவினங்களைப் பகிர்ந்து கொள்ளாததன் விளைவாக, **இணைப்பு 6.3ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, ₹60.87 கோடி அதிக செலவினத்தை TNCWWB மேற்கொண்டது.

மற்ற வாரியங்களுக்கான செலவினங்ளை TNCWWB மேற்கொள்வது, அதன் நோக்கங்களுக்கு எதிராகவும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறுவதாகவும் இருந்ததை தணிக்கை கண்டறிந்தது. மேலும், கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் TNMWBல் இருந்து மீட்கப்பட்டிருந்தால், 2017-22 ஆண்டுகளுக்கான TNCWWBன் நிர்வாக மற்றும் இதர செலவினங்களை, அதன் மொத்தச் செலவினத்தில், 12.35 விழுக்காட்டிலிருந்து 7.45 விழுக்காடாகக் குறைத்திருக்கக் கூடும்.

மாவட்ட ACL-SSS அலுவலகங்களால் மேற்கொள்ளப்படும் நிர்வாகச் செலவினங்களில் 75 விழுக்காட்டினை TNCWWB ஏற்பதற்கான அதன் முன்மொழிவானது (டிசம்பர் 2022) கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

மற்ற 17 வாரியங்களின் நிர்வாகச் செலவினங்களின் பளுவை TNCWWBன் மீது சுமத்துவது தமிழ்நாடு அரசு இப்பதிலில் ஒப்புக்கொள்வதாக உள்ளது. இருப்பினும், மற்ற 17 வாரியங்களுக்கான நிர்வாகச் செலவினங்களில் 50 விழுக்காட்டிற்குப் பதிலாக 25 விழுக்காட்டினை மட்டுமே ஏற்கும் முன்மொழிவுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதால், பதில் நியாயமற்றதாக இருந்தது.

### 6.1.8 தவிர்த்திருக்கக்கூடிய வருமான வரி விதிப்பு - ₹396 கோடி

வருமான வரிச் சட்டம், 1961 (IT சட்டம்) பிரிவு (u/s) 12AAன் கீழ் TNCWWB ஒரு அறக்கட்டளையாக (டிசம்பர் 2003) பதிவு செய்யப்பட்டு, தொண்டு நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய வரிவிலக்கு பெறப்பட்டது. பின்னர், TNCWWBன் செயல்பாடுகளுக்கு மிகவும் பொருத்தமான பிரிவு 10(46) ஜூன் 2011ல் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இது, பிரிவு 12AA போலல்லாமல், எந்தவொரு செயல்முறையை ஒழுங்குபடுத்தவோ அல்லது நிர்வகிப்பதற்காகவோ பொது நல நோக்கத்துடன் செயல்படும் மத்திய / மாநில அரசால் அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு அல்லது ஆணையம் அல்லது வாரியம் அல்லது அறக்கட்டளைக்கு வரும் குறிப்பிட்ட வருமானத்திற்கு, பிரிவு 10(46)ன் கீழ் மொத்த வரிவிலக்கு கிடைக்கும். இந்த பிரிவின் கீழ், மேற்கு வங்க BOCW வாரியத்திற்கு 2011–12 முதல் IT விலக்கு அளிக்கப்பட்டது.

நவம்பர் 2017ல், TNCWWB, IT சட்டத்தின் பிரிவு 10(46)ன் கீழ் வரிவிலக்கிற்கு விண்ணப்பித்தது. இருப்பினும், ஏற்கனவே சட்டத்தின் பிரிவு 12AAன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பிற்கு, பிரிவு 10(46)ன் கீழ் ஒப்புதல் வழங்குவது பொருந்தாது என்பதால் IT துறை இதனை நிராகரித்தது (டிசம்பர் 2017). ஆயினும், மேற்கூறப்பட்ட பதிவு தொடர்ந்து அமலில் இருந்தது.

அதைத் தொடர்ந்து, 2020-21 நிதி மசோதாவில், பிரிவு 12AAன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு அறக்கட்டளையால், 01 ஜூன் 2020 முதல்

IT சட்டத்தின் பிரிவு 10(46)ன் கீழ், வரிவிலக்கிற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது. TNCWWBஆல் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை புதுப்பிக்கவும் மற்றும் IT சட்டத்தின் பிரிவு 10(46)ன் கீழ் வரிவிலக்கு அளிக்கவும் கோரி, புது தில்லியில் உள்ள நேர்முக வரிகள் மத்திய வாரியத்தின் தலைவருக்கு, அரசின் தலைமைச் செயலாளர் மூலம் நேர்முகக் கடிதம் (Demi-official letter) அனுப்பப்பட்டது. IT சட்டத்தின் பிரிவு 10(46)ன் கீழ் வரிவிலக்கானது ஜூன் 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஏப்ரல் 2022ல் வழங்கப்பட்டது.

வசூலிக்கப்பட்ட தொழிலாளர் செஸ், வரவு மற்றும் செலவுக் கணக்கில் வழக்கமான வருமானமாகக் கருதப்படுவதற்குப் பதிலாக, இருப்புநிலைக் குறிப்பில் (Balance sheet), தவறாக, கார்ப்பஸ் நிதியில் காட்டப்பட்டது. இந்தத் தவறான கணக்கியல் முறை, 2012-13ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட தனித் தணிக்கை அறிக்கைகளில் (Separate Audit Reports) தொடர்ந்து சுட்டிகாட்டப்பட்டு வந்தது. பிரிவு 12AAன் கீழ் வருமான வரிச் சலுகையினைப் பெறுவதற்காகத் தவறான கணக்கியல் முறை அளிக்கப்பட்டதாக IT துறை வாதித்தது. மேலும், செஸ் வசூல் தன்னார்வமானது அல்ல (not voluntary) என்பதால் பிரிவு 12AAன் கீழ் வரிவிலக்கு பொருந்தாது என்றும் கூறியது. எனவே, 2017-18 மற்றும் 2018-19 மதிப்பீடு ஆண்டுகளுக்கான (AY) தொகையான, முறையே ₹170.53 கோடி மற்றும் ₹225.53 கோடிக்கான வரிவிதிப்பு அறிவிப்பை (Demand Notice) IT துறை TNCWWBக்கு வழங்கியது. இதற்கு எதிராக மேல்முறையீடு செய்யும்பொருட்டு, பிப்ரவரி 2020ல், AY 2017-18ற்கான சர்ச்சைக்குரிய தொகையில், 20 விழுக்காடாகிய (₹170.53 கோடி x 20 விழுக்காடு) ₹31.68 கோடியை (₹3.03 கோடி பெறப்படவேண்டிய TDSஐ சரிசெய்தபிறகு + வட்டி) வைப்புத் தொகையாக(deposit amount) IT துறைக்கு TNCWWB செலுத்தியது.

TNCWWB, IT சட்டத்தின் பிரிவு 10(46)ன் கீழ் உரிய நேரத்தில் பதிவு செய்து அதற்கான விலக்கினைப் பெறத் தவறியதன் விளைவுகளாவன:

(i) AY2017-18 மற்றும் 2018-19ஆம் ஆண்டுகளுக்கான தவிர்த்திருக்கக்கூடிய வரி பொறுப்பு ₹396 கோடி.

(ii) வைப்புத் தொகையாக செலுத்தப்பட்ட ₹34.71 கோடியானது இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக முடக்கப்பட்டிருந்தது (locking up).

(iii) ₹31.68 கோடி வைப்புத் தொகை (**பத்தி 6.1.9ல்** கூறப்பட்டுள்ள TDS தொகை தவிர்த்து) மீது ஈட்டக்கூடிய வட்டித் தொகையான ₹8.97 கோடி இழப்பு.

2020-21 ஆண்டிற்கான நிதி மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே, ஏற்கனவே பிரிவு 12AAல் விலக்கு பெற்றவர்ளுக்கும் பிரிவு 10(46)ன் கீழ் விலக்கு கிடைக்கும்படியாக இருந்ததாக TNCWWB பதிலளித்தது (டிசம்பர் 2022).

மேற்கூறப்பட்ட கட்டுப்பாடு, நிதிச் சட்டம் 2014ல் மட்டுமே விதிக்கப்பட்டிருந்ததால் (01 ஏப்ரல் 2015 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்) பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. மேற்கூறப்பட்ட கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, நவம்பர் 2011ல் பிரிவு 10(46) அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே, TNCWWB மேற்கு வங்க BOCW வாரியம் போன்று நவம்பர் 2011 மற்றும் மார்ச் 2015 க்கு இடையேயான காலக்கட்டத்தில், பிரிவு 10(46)ன் கீழ் விலக்கு பெற்றிருக்கலாம்.

பின்னர், TNCWWB, நிதியாண்டு 2015-16லிருந்து 31/05/2020 வரை, IT பிரிவு 10(46)ன் கீழ் பின்னோக்கு விளைவாக(retrospective effect) விலக்கு பெறுவதற்காக, அதன் கணக்காளர்களிடம் பணி ஆணையை வழங்கி இருப்பதாக (நவம்பர் 2022) தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). TNCWWB எடுத்த நடவடிக்கையின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன (மார்ச் 2023).

### 6.1.9 வருமான வரித் துறையிடம் ₹9.57 கோடி தவிர்த்திருக்கக்கூடிய முடக்கம் - வட்டி இழப்பு ₹2.37 கோடி

2016-22 ஆண்டுகளில், TNCWWBன் வட்டி வரவின் மீது ஜூன் 2020 வரை IT சட்டத்தின் பிரிவு 12AAன் கீழும் அதன் பிறகு பிரிவு 10(46)ன் கீழும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

TNCWWB, ஒவ்வொரு ஆண்டும் தனது உபரி நிதிகளை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் TNPFIDCL உடன் தவறாமல் முதலீடு செய்து வருகின்றது. FD வட்டியின் மீது பிடித்தம் செய்யப்படும் வரி (TDS) கழிக்கப்படாமல் இருக்க, TNCWWB, அனைத்து வங்கிகளுக்கும் விலக்கு சான்றிதழ்களை வழங்கியது. இருப்பினும், 2016–17 முதல் 2021–22 வரையிலான ஆண்டுகளில், TDS தொகையாக ₹11.69 கோடி சில வங்கிகளால்[27] பிடித்தம் செய்யப்பட்டு, ₹2.12 கோடி IT துறையிலிருந்து திரும்பப் பெறப்பட்டது. மார்ச் 2023 நிலவரப்படி, ₹9.57 கோடி நிலுவையில் உள்ளது. TNCWWBன் முடக்கப்பட்டுள்ள நிதிகள் **அட்டவணை 6.4**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.4: வருமான வரித் துறையுடன் முடக்கப்பட்டிருந்த TDS மற்றும் வட்டி இழப்பு**

(₹ கோடியில்)

| ஆண்டு | 2017-18 | 2018-19 | 2020-21 | 2021-22 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| IT துறையிடம்[28] இருந்து பெறப்பட வேண்டிய TDS | 3.04 | 1.12 | 0.22 | 5.19 | 9.57 |
| முதலீட்டு மாதம் | ஏப்ரல் 2018 | ஏப்ரல் 2019 | ஏப்ரல் 2021 | ஏப்ரல் 2022 | |
| SDLன் படி வட்டி விகிதம் (அரையாண்டு அடிப்படையில்) | 8.28 | 8.37 | 6.73 | 7.24 | |
| முதலீட்டு காலம் (ஆண்டுகளில்) | 5 | 4 | 2 | 1 | |
| வட்டி இழப்பு (மார்ச் 2023 வரை) | 1.53 | 0.43 | 0.03 | 0.38 | 2.37 |

(ஆதாரம்: துறையால் வழங்கப்பட்ட பதிவுகளைக் கொண்டு தணிக்கையின் கணக்கீடு)

IT துறையிடம் பணம் முடக்கப்பட்டதால், ₹2.37 கோடி வட்டி இழப்பு ஏற்பட்டதாக தணிக்கை கணக்கிட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பல்வேறு கிளைகளில், TNCWWB, பல FDகளை (வருடத்திற்கு சராசரியாக 250 FDகள்) முதலீடு செய்ததால்,

27 கனரா பாங்க், சிண்டிகேட் பாங்க், யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் பாங்க் மற்றும் தமிழ்நாடு பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆகியவற்றின் கிளைகள்.

28 2016-17 மற்றும் 2019-20 ஆண்டுகளில் TDS பிடித்தம் செய்யப்படவில்லை.

அவ்வங்கிகள் மூலம் TDS பிடித்தம் செய்யப்படுவதைக் கண்காணிப்பதில் TNCWWBன் தரப்பில் தளர்வு காணப்பட்டது.

நிறைவுக் கூட்டத்தின் போது, அரசின் ACS, TDSன் தவறான பிடித்தத்தை முறையாகக் கண்காணிப்பதற்காக, FDகளின் எண்ணிக்கை மற்றும் FDகள் டெபாசிட் செய்யப்படும் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் பதிலளித்தார்.

### 6.1.10 பணமாக்கப்படாத, காலம் கடந்த/திருப்பி அளிக்கப்பட்ட DDகள் - வருவாய் இழப்பு - ₹13.47 கோடி

TNCWWBன் வங்கிக் கணக்கில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால் தொழிலாளர் செஸ் DDகள் அல்லது ECS மூலம் செலுத்தப்படுகிறது.

DD மூலம் வசூலான செஸ்ஸினை ஆய்வு செய்ததில், 25,665 DDகள் (₹ 36.56 கோடி) மறுமதிப்பீடு/புதிய DDகள் வழங்கப்படுவதற்காக, TNCWWBஆல் அனுப்பப்பட்டது கண்டறியப்பட்டது, இதில் **அட்டவணை 6.5**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, மார்ச் 2023 நிலவரப்படி, ₹13.47 கோடி மதிப்புள்ள 11,360 DDகள் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை.

**அட்டவணை 6.5: பணமாக்கப்படாத, காலாவதியான/திருப்பி அளிக்கப்பட்ட DDகள்**

(₹ கோடியில்)

| ஆண்டு | திரும்பப் பெற்ற DDகளின் எண்ணிக்கை | DDகளின் மதிப்பு | மறுமதிப்பீடு செய்யப்பட்ட DDகளின் எண்ணிக்கை | மறுமதிப்பீடு செய்யப்பட்ட DDகளின் மதிப்பு | திரும்பப் பெறப்பட வேண்டிய DD | நிலுவையில் உள்ள DDகளின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 2016-17 வரை | 15,371 | 13.00 | 8,904 | 7.34 | 6,467 | 5.66 |
| 2017-18 | 2,570 | 4.16 | 1,092 | 2.21 | 1,478 | 1.95 |
| 2018-19 | 2,197 | 2.72 | 833 | 1.17 | 1,364 | 1.55 |
| 2019-20 | 1,558 | 5.03 | 1,127 | 4.09 | 431 | 0.94 |
| 2020-21 | 2,216 | 6.78 | 1,326 | 4.95 | 890 | 1.83 |
| 2021-22 | 1,753 | 4.88 | 1,023 | 3.34 | 730 | 1.54 |
| **மொத்தம்** | **25,665** | **36.57** | **14,305** | **23.10** | **11,360** | **13.47** |

(ஆதாரம்: TNCWWB வழங்கிய தகவல்)

இதனை சம்பந்தப்பட்ட, அடுத்த கட்ட, மேல் அதிகாரிக்கு எடுத்துச் செல்லுவதற்கான நடவடிக்கை (நிலுவையில் உள்ள DDகளை உள்ளாட்சி வாரியாக / அரசு நிறுவனங்கள் வாரியாக / வங்கி வாரியாகப் பிரித்தல்) தொடங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து DDகள் பெறுவதில் இருந்த தாமதம் மற்றும் குறைபாடுள்ள DDகள் ஆகியவையே இந்தப் பிரச்சினைக்கு முக்கியக் காரணங்களாக தணிக்கை கண்டறிந்தது. இது ₹13.47 கோடி இழப்பிற்கு வழிவகுத்தது.

### 6.1.11 வாடகையை நிர்ணயம் செய்யாததால் உண்டான வருவாய் இழப்பு - ₹31.41 கோடி

அரசு அலுவலகங்களுக்காக 19 ஒருங்கிணைந்த தொழிலாளர் வளாகங்கள் கட்டுவதற்கு, திட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறி, TNCWWBன் நிதியான ₹44.24 கோடி கொடுக்கப்பட்டது. இது மார்ச் 2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான CAGன் தணிக்கை அறிக்கையிலும்[29] குறிப்பிடப்பட்டது. TNCWWBக்கு உரிமையை மாற்றாமல் அதன் நிதியைக் கொண்டே, 19 மாவட்டங்களில், TNCWWB அலுவலகம் உட்பட பல்வேறு தொழிலாளர் அலுவலக கட்டிடங்கள், அரசு நிலத்தில் கட்டப்படுவது தணிக்கை அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டது.

தணிக்கை ஆய்வின் போது, 19 ஒருங்கிணைந்த வளாகங்களை ஆக்கிரமித்துள்ள LW&SDDன் பிற அலுவலகங்களிற்கான வாடகையை செலுத்த LW&SDD ஒப்புக்கொண்டது (நவம்பர் 2021). இதற்காக, ஆக்கிரமிக்கபட்டுள்ள இட பரப்பிற்கு ஏற்ப, PWD உடன் கலந்தாலோசித்து வாடகை நிர்ணயிக்கப்படும் என்றும் தெரிவித்தது,

மற்ற அலுவலகங்கள் ஆக்கிரமித்து மூன்று வருடங்கள் கடந்தும், 19 கட்டடங்களுக்கான வாடகை PWDஆல் மதிப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படாததால் TNCWWBஆல் வாடகை வசூலிக்கப்படாமல் இருந்ததை தணிக்கை கண்டறிந்தது. விருதுநகரிலும் (நகராட்சிப் பகுதி - ஒரு சதுர மீட்டருக்கு - ₹114 வாடகை) திருச்சிராப்பள்ளியிலும் (மாநகராட்சிப் பகுதியில் - ஒரு சதுர மீட்டருக்கு - ₹304 வாடகை) உள்ள இரண்டு ஒருங்கிணைந்த தொழிலாளர் வளாகங்களுக்கான பொதுப்பணித் துறையால் மதிப்பிடப்பட்ட வாடகையின் அடிப்படையில் வாடகை வசூலிக்கப்படாததால் ஏற்பட்ட வருவாய் இழப்பினை தணிக்கை கணக்கிட்டது. **இணைப்பு 6.4ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, வாடகை வசூல் செய்யப்படாததால், மார்ச் 2023 வரை ஏற்பட்ட தோராயமான இழப்பு ₹31.41 கோடி ஆகும்.

இது பரிசீலிக்கப்பட்டுவருவதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

### 6.1.12 தையூர் மற்றும் எழிச்சூரில் உள்ள தங்கும் விடுதிகளின் மீதான பயனற்ற நிர்வாக மற்றும் பராமரிப்பு செலவினங்கள் – ₹1.80 கோடி

TNCWWBஆல் ₹31.66 கோடி செலவில் எழிச்சூர் மற்றும் தையூரில் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்குவதற்கென தற்காலிகமாகக் கட்டப்பட்ட இரண்டு தங்குமிடங்கள் அக்டோபர் 2021 நிலவரப்படி, ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பது குறித்த பத்தி, மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான CAGன் இணைக்கத் தணிக்கை அறிக்கையில்[30] சேர்க்கப்பட்டுள்ளது. ஜனவரி 2022ல், கோவிட்–19 காரணமாக, சென்னை மற்றும் செங்கல்பட்டு

---

29 தமிழ்நாடு அரசின் 2020ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 1 - பொது மற்றும் சமூகத் துறைகள் – பத்தி எண். 3.3.2.

30 தமிழ்நாடு அரசின் 2022ஆம் ஆண்டிற்கான இணைக்கத் தணிக்கை அறிக்கை எண். 7 - பத்தி எண் 3.2.1.

மாவட்டங்களில் சிகிச்சை வசதிகளுக்காக அல்லது தங்கும் வசதிக்காக இருப்பு மையங்களாக இந்த தங்குமிடங்களை அரசு வைத்திருக்கிறது என்றும், தொற்றுநோய் முடிந்தவுடன் அவை பயன்படுத்தப்படும் என்றும் தமிழ்நாடு அரசு பதிலளித்தது. இதற்கிடையில், TNCWWB, மேற்கூறப்பட்ட இரண்டு தங்குமிடங்களையும் PWDயிடமிருந்து பெறப்பட்ட தேதியிலிருந்து, மார்ச் 2023 வரை ₹1.80 கோடியை நிர்வாக மற்றும் பராமரிப்புச் செலவினமாக[31] மேற்கொண்டுள்ளது.

டிசம்பர் 2022ல் இவ்விரண்டு தங்குமிடங்களின் பயன்பாடு தொடர்பான சமீபத்திய நிலையைக் கண்டறிய, எழிச்சூர் மற்றும் தையூருக்காக முறையே ACL–SSS, காஞ்சிபுரம், மற்றும் ACL-SSS, செங்கல்பட்டுடன் இணைந்து நேரடி கூட்டு தேர்ந்தாய்வை தணிக்கை மேற்கொண்டது. TNCWWBஆல் தங்குமிடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, ₹1.80 கோடி நிர்வாக மற்றும் பராமரிப்புச் செலவுகளைச் செய்த போதிலும், மார்ச் 2023 வரை அவை ஆக்கிரமிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது, பராமரிப்புச் செலவுகளை பயனற்றதாக்கியது என்று நேரடி கூட்டு தேர்ந்தாய்வு வெளிப்படுத்தியுள்ளது. (**விளக்கப்படங்கள் 6.6** மற்றும் **6.7**).

**விளக்கப்படம் 6.6: செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் உள்ள தங்கும் விடுதி**






31 எழிச்சூர் ஜூன் 2019 முதல் மார்ச் 2023 வரை ₹0.96 கோடியும், தையூர் ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2023 வரை ₹0.84 கோா்டியும்.

**விளக்கப்படம் 6.7: காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூரில் உள்ள தங்கும் விடுதி**



(ஆதாரம்: TNCWWB அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட நேரடி கூட்டு தேர்ந்தாய்வு)

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதற்காக தையூரில் உள்ள தங்குமிடத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டம் செயலாக்கத்தில் உள்ளது என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). தரமற்ற திட்டமிடல் காரணமாக தங்குமிடங்களின் நோக்கம் அடையப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

### 6.1.13 ஒருங்கிணைக்கப்பட்ட பயன்பாட்டு மென்பொருளை செயல்படுத்துவதில் தாமதம்

ஜூலை 2016ல், ₹1.05 கோடி செலவில் ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருளை உருவாக்குவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. பதிவுசெய்தல், புதுப்பித்தல், பணக்கோரிக்கைகள் போன்றவற்றை இணைய வழியில் அங்கீகரித்தல், MIS அறிக்கைகள் வழங்குதல் மற்றும் இணையவழி செஸ் வசூலுக்கு வழிவகுத்தல் ஆகியவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருளை செயல்படுத்துவதில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் பிற சிக்கல்கள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன:

(i) இணையவழி சேவைகளுக்கென மென்பொருளை மேம்படுத்துவது, மின்–மாவட்ட(e-District) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்று TNeGA தெரிவித்தது(செப்டம்பர் 2016). பின்னர், வாரியங்களின் வலைதளம் வழி செயல்படுத்த இயலாது என்றும், e–Sevai மையங்கள் மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும் என்றும் தெரிவித்தது (பிப்ரவரி 2017). எனவே, வலைதளம் மூலம் செயல்படும் மென்பொருள் உருவாக்கும் பணியைத் தனிப் பணியாக மேற்கொள்ள, கணினி ஒருங்கிணைப்பாளருக்கு (System Integrator - SI) செப்டம்பர் 2019ல் அங்கீகார கடிதம் (Letter Of Authorisation - LOA) வழங்கப்பட்டு, சேவைகள் 19 ஜூன் 2021 முதல் கிடைக்கப்பெற்றன.

(ii) ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருள், முதலில் எண்ணியிருந்தபடியான இணையவழி செஸ் வசூல் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை.

நிறைவுக் கூட்டத்தின் போது, கணக்குகள் மற்றும் செஸ் தொகுதிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசின் ACS கூறினார்.

## 6.2 பணியாளர் மேலாண்மை

TNCWWB மற்றும் மாவட்ட அலுவலகங்கள், LW&SSD மற்றும் நிதித் துறையிலிருந்து பணியமர்த்தப்பட்டவர்கள், TNCWWBஆல் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தன. TNCWWB மற்றும் மாவட்ட அலுவலகங்களின் அனுமதிக்கப்பட்ட நபர்கள், பணியில் இருக்கும் நபர்களின் எண்ணிக்கை (PIP) மற்றும் காலியிட நிலை ஆகியவை **அட்டவணை 6.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.6: TNCWWBல் அனுமதிக்கப்பட்ட நபர்கள், PIP மற்றும் காலியிட நிலை**

| பணியாளர்கள் | அனுமதிக்கப்பட்டது | PIP | காலியிடம் |
|---|---|---|---|
| பிற துறைகளிலிருந்து மாற்று பணியமர்த்தப்பட்டவர்கள் (On Deputation) | 15 | 14 | 1 |
| TNCWWB ஆல் நியமிக்கப்பட்டவர்கள் | 28 | 4 | 24 |
| ஒப்பந்த பணி (தலைவரின் தனிப்பட்ட செயலாளர்) | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | **44** | **19** | **25** |
| ACL-SSS மாவட்ட அலுவலகங்களில் | 470 | 240 | 230 |
| **பெரு மொத்தம்** | **514** | **259** | **255** |

(ஆதாரம்: TNCWWBஆல் வழங்கப்பட்ட தரவு)

### 6.2.1 ஒப்பந்த பணியாளர்களின் அதிகப்படியான ஆட்சேர்ப்பு

மேற்கூறப்பட்டவை தவிர, தினசரி ஊதியத்தில், TNCWWBயிலும் (38 நபர்கள்) மற்றும் ACL–SSS அலுவலகங்களிலும் (534 நபர்கள்) பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். பணியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை **இணைப்பு 6.5ல்** குறிப்பிடப்பட்டுள்ளது. தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைபடி, பற்றாக்குறையானது TNCWWBல், இளநிலை உதவியாளர் (Junior Assistant) / தரவு உள்ளீடு செய்பவர் (data entry operator) பணியில் 24 பேராகவும் மற்றும் மாவட்ட ACL–SSS அலுவலகத்தில் 230 அலுவலர்களாகவும் உள்ளது.
- இளநிலை உதவியாளர்/தரவு உள்ளீடு செய்பவர் கேடரில் TNCWWBல், 24 நபர்களும், மாவட்ட ACL–SSS அலுவலகங்களில், 452 நபர்களும் தினசரி ஊதியத்தில்

பணியமர்த்தப்பட்டுள்ளனர். அனுமதிக்கப்பட்டதை விட அதிகமாக 222 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- மாவட்ட அலுவலகங்கள், TNCWWB மட்டுமின்றி 17 வாரியங்களின் செயல்பாடுகளையும் கவனிக்கின்றன.
- தினக்கூலி ஈடுபாட்டிற்கு TNCWWBன் ஒப்புதல் பெறப்படவில்லை என்பதும் கவனிக்கப்பட்டது. முந்தைய ஒப்புதல் அக்டோபர் 2007ல் பெறப்பட்டது.

காலியிடங்களுக்கு எதிராக, ஒப்பந்த அடிப்படையில் அதிகப்படியான நபர்கள் பணியமர்த்தப்பட்டனர். அக்டோபர் 2007 முதல் TNCWWB அதன் வாரியம்/மாநில அரசிடமிருந்து அதிகப்படியான பணியிடங்களுக்கான ஒப்புதல்/அங்கீகாரத்தைப் பெறவில்லை.

அதிகப்படியான பணியிடங்களுக்கான அங்கீகார முன்மொழிவு, வாரியத்தின் முன் வைக்கப்பட்டு பின்னர் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும், தினக்கூலி பணியாளர்களை அதிகமாக பணியமர்த்துவதற்கான காரணங்கள் குறித்தும் பதிலில் குறிப்பிடவில்லை.

### 6.2.2 ஆய்வாளர்களை நியமிக்காமை

TNMW சட்டத்தின் பிரிவு 16 மற்றும் TNMW விதி 23, கள அளவிலான கண்காணிப்புக்கு ஆய்வாளர்களை நியமிக்க விழைகிறது. இது, **அத்தியாயம் III**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள, நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களின் பதிவுகள் குறித்த சிக்கல்களைத் தவிர்க்க உதவக்கூடியதாக இருக்கும். ஆய்வாளர்கள் நியமிக்கப்படாதது, மார்ச் 2013 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான CAGன் தணிக்கை அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டது. இருப்பினும், TNCWWB, துறையில் எந்த ஆய்வாளர்களையும் நியமிக்கவில்லை. இது சுட்டிக்காட்டப்பட்ட போது, ஆய்வாளர்களை நியமிப்பதற்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக TNCWWB பதிலளித்தது (நவம்பர் 2022).

கள நிலை ஆய்வாளர்களின் கண்காணிப்பில் இருந்த தோல்வியால், தொழிலாளர்களை பதிவு செய்வதற்கான கணக்கெடுப்பு நடத்தப்பட முடியவில்லை மற்றும் செஸ் வசூலைக் கண்காணிக்கும் அமைப்பும் இருக்கவில்லை.

